# தமிழரசு

சனவரி 1. 1973

விலை 40 காசு







# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH L&T Switchgear

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1,
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856


அனைவர்க்கும்
புத்தாண்டு
வாழ்த்துக்கள்
உரித்தாகுக!

# ஊராட்சி வளர்ச்சியில் தமிழகத்தின் தொண்டரு

நாட்டில் பல்வேறு முனைகளில் பணியாற்றும் உங்களையெல்லாம் சென்னைக்கு அழைத்து இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இரண்டு நாள் விடுமுறையும் தந்து, 'வாருங்கள் உங்களது கோரிக்கைகளைத் தாருங்கள்' என்று சொல்லுகின்ற அரசை முதல் முதலாக இப்போதுதான் நீங்கள் பார்க்கின்றீர்கள்.

தொந்தரவு தந்தாலும் பரவாயில்லை என்று யாரும் அழைக்க மாட்டார்கள். ஆனால், 'கோரிக்கைகளைத் தாருங்கள்' என்று கேட்டு உங்களை அழைத்திருக்கிறோம். இந்த வகையில் இந்த முதல்மாநில மாநாடு மிகச் சிறப்புற இங்கேநடைபெறுகிறது.

நண்பர்கள் ஆற்றிய உரைகளை நானும் நாவலரும் கேட்டோம். எத்தனை எழுச்சிமிக்க உரைகள்! எத்தனை உணர்ச்சி மிக்க உரைகள்!

நேற்றும், இன்றும் சென்னையில் பல்வேறு காட்சிகளை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். நானும் ஆங்காங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றபோது நீங்கள் வந்த பேருந்துகளையெல்லாம் பார்த்தேன். சென்னையில் என்னென்ன பார்க்க வேண்டுமோ அதையெல்லாம் பார்த்திருக்கிறீர்கள். கடற்கரையென்ன! அங்கே கவின்மிகு சிலைகளென்ன! வங்கக் கடற்கரையில் துயில் கொள்ளும் அண்ணனின் கல்லறையென்ன! அண்ணா சாலையென்ன! இப்படிப் பல்வேறு காட்சிகளைக் கண்டிருக்கிறீர்கள்.

நானும் நாவலரும் வெளிநாடுகளுக்குச் சென்ற போதெல்லாம் அங்கே இருக்கின்ற கண்ணையும், கருத்தையும் கவர்கின்ற காட்சிகளைக் காணும் போதெல்லாம்—'ஆகா, அற்புதம்' என்று உணர்ச்சிவயப்படாமல் இப்படிப்பட்ட எழிலும், ஏற்றமும், வசதியும் வாய்ப்பும் நம்முடைய நாட்டிலும் ஏற்பட வேண்டும் என்ற உணர்ச்சிதான் எங்களுக்கு ஏற்பட்டது.

அதுபோல—

சென்னைக்கு வந்திருக்கின்ற ஊர் வளர்ச்சித் துறைப் பணியாளர்களாகிய நீங்கள், இன்று பார்த்த சென்னையின் வளர்ச்சியைப் போலச் சிற்றூர்களும் கால்பங்காவது—அரைக்கால் பங்காவது—வீசம் பகுதி அளவாவது வளர்ச்சி பெற வேண்டும் என்கிற எண்ணத்தைப் பெற்றிட வேண்டும்.

45/73

மிகுந்த பரிவுணர்ச்சியோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்கள்தான் ஒரு நாட்டின் முதுகெலும்புகள், நாடி நரம்புகள்; ஊற்றெடுக்கும் இரத்தப் பிரவாகங்கள் தான் ஊராட்சிப் பணியாளர்கள்.

சின்னஞ் சிறு கிராமங்களிலே இருந்து கொண்டு, நீங்கள் தருகின்ற கடும் உழைப்புத்தான்—நகரங்களுக்குக் கிடைக்கிறது.

கிராமங்களின் நாகரிகச் சந்திப்புக்கள்தான் நகரங்களாகக் காட்சியளிக்கின்றன.

உங்கள் கடமை மிகப் பெரியது: உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணும் அளவுக்கு உங்கள் உழைப்பல்லவோ காரணமாக இருந்தது என்று நாவலர் அவர்கள் பாராட்டிய போது, உங்கள் உழைப்புக்குக் கிடைத்த அந்தப் பாராட்டை நீங்கள் கையொலி செய்து உற்சாகமாக வரவேற்றீர்கள். அதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன்.

ஊர் வளர்ச்சிப் பணிகளுக்காக இந்த அரசு எந்த அளவுக்குத் தொகை ஒதுக்கியிருக்கிறது—உயர்த்தியிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

1966–67-ல் ஒதுக்கிய தொகை ரூ. 47 கோடியே 7 இலட்சம்.

1967–68-ல் ரூ. 52 கோடியே 70 இலட்சம்.

1968–69-ல் ரூ. 52 கோடியே 62 இலட்சம்.

1969–70-ல் ரூ 59 கோடியே 16 இலட்சம்.

1970–71-ல் ரூ. 65 கோடியே 26 இலட்சம்.

1971–72-ல் ரூ. 72 கோடியே 7 இலட்சம்.

1972–73-ல் ரூ. 77 கோடியே 14 இலட்சம்.

1966–67-ல் 47 கோடி ரூபாயாக இருந்தது— இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 77 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

எவ்வளவோ வளர்ச்சிப் பணிகளுக்கு நீங்கள் காரணமாக இருந்திருக்கிறீர்கள்.

இருந்தும், இன்னும் பல சிற்றூர்களும், பேரூர்களும் வளரவில்லையே என்ற ஏக்கம் உங்களைப்போலவே எங்களுக்கும் இருக்கிறது.

கிராமப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தீவிரத் திட்டத்தின் மூலம் தரவேண்டும் என்பது அரசின் கொள்கை.

அதற்காக, 40 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வாரியத்தை அமைத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

4,551 ஊர்களில் நிலையான தண்ணீர் ஆதாரம் இல்லை என்று தெரிகிறது.

12,858 ஊர்கள், சிற்றூர்களில் தற்போதுள்ள நீர் ஆதாரங்கள் வலுப்படுத்த வேண்டியுள்ளது.

## முதல்வர் கலைஞர்

நோய் பரவும் தன்மை உள்ள, ஏறத்தாழ 2,059 ஊர்கள், சிற்றூர்களுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

இந்த மூன்று வகையிலும் குடிநீர் வழங்க ரூ. 40 கோடி தேவைப்படும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்தத் தேவைகள் அனைத்தும் மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் பொறுப்பில் நீங்கள் தான் இருக்கிறீர்கள்.

மக்களின் தேவைகளை அறிந்து செயல்பட வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சியை அமைத்த போது, இந்த அரசு தீட்டி வந்த திட்டங்கள் அனைத்தும் பின்தங்கிய-தாழ்த்தப்பட்ட கிராமப்புறங்களிலே வாழ்கின்ற-ஏழை எளிய பாட்டாளி மக்களின் வாழ்வை மையமாக வைத்துத்தான் தீட்டப்படும்—தீட்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள்.

அந்தத் திட்டங்களையெல்லாம் திறம்படச் செய்து முடிக்கும் செயல் மறவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்து முடிக்கும் கட்டுப்பாடு நமக்குண்டு.

பல தொடக்கப் பள்ளிகளுக்கு இன்னும் கட்டடங்கள் கட்டப்படாத நிலைமை இருந்து வருகின்றது. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து 13 கோடி ரூபாய் கடனைப் பெற்று 7,377 தொடக்கப் பள்ளிகளுக்கும், 1,112 உயர்தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடங்கள் கட்டத் திட்டமிட்டிருக்கிறோம்.

கிராமப் புறங்களைப் புனிதத் தலங்களாக்க இப்படிப் பட்ட திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

"நாங்கள் வைத்த கோரிக்கைகள் என்ன ஆயிற்று?" என்ற கேள்வி உங்கள் உள்ளத்தில் இல்லாமல் இல்லை. அதைப் புரிந்து கொள்ளும் சக்தி எங்களுக்கும் இல்லாமல் இல்லை.

பல கோரிக்கைகளைப் பற்றி நானும் நாவலரும் அதிகாரிகளும் ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். உங்கள் சார்பில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் கலந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தால் இது ஊர் வளர்ச்சிப் பணியாளர்கள் மாநாடா? ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாடா என்ற சந்தேகமே எனக்கு ஏற்படுகின்றது.

உங்களின் சில கோரிக்கைகளை இங்கேயே நிறைவேற்ற முன் வந்திருக்கிறோம்.

ஃ மாவட்ட ரீதியில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கீழ் உள்ள துறைகள் எப்படி இயங்க வேண்டும் என்ற கோரிக்கை, கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. நிருவாகச் சீர்திருத்தக் குழுவினரோடு யோசனை செய்து இதை எப்படி நிறைவேற்றுவது என்பது பிறகு முடிவு செய்யப்படும்.

ஃ ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

ஃ கல்வி, மருத்துவ வசதிகள், பண்டிகை முன்பணம், போன்றவற்றில் அரசு அலுவலர்களுக்குள்ள நன்மைகளை ஊராட்சி ஒன்றிய ஊழியர்களும் ஏற்கெனவே பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். ஓய்வு ஊதியம், பெறும் சலுகை மட்டுமே ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு இன்னும் விரிவாக்கப் படவில்லை. இந்த வேண்டுகோளையும் அரசு ஆய்வு செய்தது. ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு மட்டுமின்றிப், பேரூராட்சி, ஊராட்சி, நகரிய அலுவலர்களுக்கும் கூட அரசு அலுவலர்களுக்குரிய ஓய்வு ஊதிய நன்மைகளை விரிவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

ஃ இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளில் உள்ள ஊதிய விகிதம் மற்ற நன்மைகளின் குறைகளை அரசு நியமித்த ஒருவர் குழு ஆய்வு செய்தது.

இக்குழு சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றின் விளைவாக ஊராட்சி வளர்ச்சி அலுவலர் (எக்ஸ்டென்சன் ஆபீசர்) மற்றும் மேலாளர்களின் (மானேஜர்) ஊதிய விகிதங்கள் உயர்த்தப்படுகின்றன.

ஃ ஊராட்சி வளர்ச்சி அலுவலர்களின் ஊதியம் 225—450 ஆக இருந்தது.

மேலாளர்களின் ஊதியம் 300—10—350—15—500 ஆக இருந்தது.

இரண்டு ஊதியங்களையும் ஒரே சமனாக்கி வளர்ச்சி அலுவலர்களுக்கும், மேலாளர்களுக்கும், ஊதிய விகிதங்கள் ரூ. ரூ. 300—15—420—20—500 என்ற வகையில்உயர்த்தப்பட்டுள்ளது.

ஃ முதல்நிலைப் பேரூராட்சி நிருவாக அலுவலர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 15 வீதம் சிறப்பு ஊதியம் வழங்கவும்—இரண்டாம் நிலைப் பேரூராட்சி நிருவாக அலுவலர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் சிறப்பு ஊதியம் வழங்கவும் குழு செய்த பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது.

ஃ மகப்பேறு உதவியாளர்களுக்கும், தையல் ஆசிரியைகளுக்கும் ரூ. 20 பயணப்படி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஃ ஊராட்சி ஒன்றியங்கள் பேரூராட்சிகளில் பணியாற்றும் அலுவலகப் பணியாளர்களும் மேற்பார்வைப்படி, மூன்று பேர் கண்காணிப்புப் புரிவோருக்கு ரூ. 10 ஆகவும் மூன்று பேருக்கு மேல் கண்காணிப்பவருக்கு ரூ. 15 ஆகவும் தருவதற்கு ஆணையிடப்படுகிறது.

ஃ சமூக நல ஊழியர்களில் தகுதி உள்ளவருக்கு வயது விதிகளைத் தளர்த்தி இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர்களாக உயர்வளிக்கப்படுகிறது.

ஃ ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கெஜட் பதிவு உள்ளவர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்களது மற்றக் கோரிக்கைகள் ஆய்வில் இருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**[சென்னையில் நடைபெற்ற ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்களின் முதல் மாநாட்டில்17—12—1972-ல் ஆற்றிய உரை]**

# வெள்ள நிவாரணத் திட்டம்

வெள்ள நிவாரணப் பணிக்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும் உடனடியாக 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், போர்க்கால நடவடிக்கைகள்போல, வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகப் பல்வேறு வகையில் உதவியளிக்கத் திட்டமிட்டிருப்பது பற்றியும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 19—12—1972ல் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிற்குப் பின் செய்தியாளர்களிடம்கூறினார்கள். மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது !

'மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளச் சேதம் பற்றி விவாதிக்கப்பட்டது.

சேதமடைந்த சிறிய நீர்ப்பாசனக் குளங்கள்—1,382, பொதுப்பணித் துறைக் குளங்கள்1,524, சேதமுற்ற வீடுகள் 1 இலட்சத்து 70 ஆயிரம், இறந்தவர்கள் 81 பேர், அனாதையாக விடப்பட்ட குழந்தைகள் 5, கால் நடைச் சேதம் ஏறத்தாழ 3 ஆயிரம்.

ஏற்கெனவே அறிவித்திருக்கிற நிவாரண வேலைகளுக்கான தொகை ரூ 1 கோடியும், இன்றைக்கு அடுத்த தவணையாக ரூ 3 கோடியும் சேர்த்து மொத்தம் 4 கோடி ரூபாய் உடனடி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிடப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தந்துள்ள தகவலின்படி தமிழ்நாடு முழுவதிலுமுள்ள வெள்ள நிவாரணப் பணிக்கு ரூ 25 கோடி தேவைப்படுகிறது.

இன்று அறிவிக்கப்பட்டுள்ள ரூ 4 கோடிக்கான செலவு வகைகள் பின்வருமாறு:—

வீடிழந்தோருக்கு இப்பொழுது அரசு நிவாரண உதவியை அதிகப்படுத்துவது என்று எடுத்த முடிவுக்கிணங்க தலா, ரூ. 80வீதம் சுமார் 1 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு ரூ. 1 கோடியே 40 இலட்சம்; பொதுப்பணித்துறைக்குளங்களைச் செப்பனிட ரூ 1 கோடி; நெடுஞ்சாலைத் துறை, ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியச் சாலைகளைச் செப்பனிட ரூ 1 கோடி; நகராட்சிச் சாலைகளைச் செப்பனிட ரூ 30 இலட்சம்; சிறிய நீர்ப்பாசனக் குளங்களைச் செப்பனிட ரூ 30 இலட்சம்; ஆக மொத்தம் ரூ 4 கோடிக்கான செலவு இது,

இவை தவிர தக்காவிக் கடன் கால்நடைகளை இழந்தோருக்கு, வீடுகளை இழந்த ஏழைகளுக்குத் தலா ரூ 250க்கு மேற்படாமல்.

மண் மேடிட்டுவிட்ட நிலங்களை, புல்டோசர்களின் உதவியால் இலாகா மூலம் சீர்படுத்திக் கொடுக்கப்படும். அதற்கு ஆகின்ற செலவில் 25 சதவிகிதத்தை அரசு மானியமாக வழங்கும்.

பம்ப் செட் இழந்தவர்களுக்கு மீண்டும் பம்ப் செட் வாங்க மத்திய காலத் தவணையில், கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும். இது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணறுகளுக்கும் பொருந்தும்.

வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் குறுகிய காலக் கடன்களை மத்தியக் காலக் கடன்களாக மாற்றுவதற்கு ரிசர்வ் வங்கியிடம் உடனடியாகத் தொடர்பு கொள்ளப்படும். வெள்ளத்தால் முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு இந்த ஆண்டுக்குரிய நிலவரி, தண்ணீர்த் தீர்வை, லோக்கல் செஸ், சர்சார்ஜ் ஆகியவை ரத்து செய்யப்படும். ஏற்கெனவே அறிவித்தவாறு வெள்ளத்தில் குடும்பத்தில் தலைவரை இழந்த 37 குடும்பங்களுக்கு, தலா ரூ. 2000 வீதம் நிதி உதவி அளிக்கப்படும். குடும்பத் தலைவரல்லாத மற்றவர்கள் இறந்துள்ள 44 குடும்பங்களுக்கு ரூ 500 முதல் ரூ. 1,000 வரை நிதி உதவி வழங்கப்படும். அனாதைகளாகிவிட்ட 5 குழந்தைகளில் 4 குழந்தைகளின் வளர்ப்பு, கல்வி, போன்ற அனைத்துப் பொறுப்புகளையும் கோவில்களில் நடைபெறும் அன்பு இல்லங்களில் ஏற்றுக்கொள்ள அறநிலையத் துறை வாயிலாக வகை செய்யப்படும்.'

வெள்ளத்தால் பாதிக்கப்படாத மாவட்டங்களிலே, பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண நிதியாக முதலமைச்சர் நிதிக்குப் பொருட்களாகவும் பணமாகவும் நன்கொடைகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த நிவாரணப் பணியில் சென்னை நகரிலுள்ள மாணவர்கள் ஈடுபட்டிருப்பதை முதலமைச்சர் பாராட்டியதோடு மற்றும் பல இடங்களில் சமூகப் பணிக் கழகச் சார்பில் மாணவர்கள் நிவாரணப் பணிகளில் நேரடியாக ஈடுபட முன்வந்திருப்பதையும் வரவேற்றார்.

வெள்ளப் பகுதிகளில் மாணவர்களும்—சீரணித் தொண்டர்களும் இளைஞர் அணியினரும் மற்றும் பொதுப் பணி மன்றங்களில் உள்ளவர்களும் மக்களுக்குத் தேவையானவைகளைச் செய்ய முந்திக் கொள்ளவேண்டுமென்று முதல்வர் கேட்டுக் கொண்டார்.

கடற்கரையோரப் பகுதிகளில் வாழுகின்ற குடிசை வாழ் மக்களுக்கு அடிக்கடி இதுபோன்ற தொந்தரவுகள் ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுக்கத் தமிழ்நாடு முழுவதுமுள்ள கடற்கரையோரங்களில் உள்ள குடிசைகளை மாற்றிக் குடியிருப்பு வீடுகளைக் கட்டுவதற்கு விரைவில் ஒரு திட்டம் தயாரித்து, அது தமிழ்நாடு முழுவதும் அமல்படுத்தப்படுமென்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

**வெள்ளப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு நிவாரணத் திட்டங்களைத் துவக்கிட முதல்வர் 1972 டிசம்பர்த் திங்களில்**

**23-ஆம் நாள் தென் ஆர்க்காடு**

**30-ஆம் நாள் சேலம், கோவை**

**31-ஆம் நாள் தஞ்சை**

**ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்திருக்கின்றார்கள்.**

**இந்த விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.**



இந்த இதழுடன்
3 இலவச இணைப்புகள்
நம்பிக்கை வாக்கு
சட்டமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முழு உரை
கல்வி வளர்ப்போம்
மாநிலத் திட்டக் குழுவின் 12 ஆண்டுத் திட்ட அறிக்கை
1973 நாட்காட்டி
விற்பனையாளர்களிடம் கேட்டு வாங்குங்கள்

# சுற்றுலா வளர்ப்போம்

சுற்றுலா வளர்ச்சியில் சமீப காலமாகத் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நமது நாட்டில் இரண்டாவது திட்டக் காலத்தில் இருந்தே சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. என்றாலும், சுற்றுலாவை ஒரு இலாபகரமான தொழிலாக மேற்கொள்ளலாம் என்பதும் அதன் வளர்ச்சியில் நாட்டிற்குப் பல வகைகளில் பயன் உண்டு என்பதும் மெல்ல மெல்ல இப்போது தான் உணரப்பட்டு வருகிறது.

சுற்றுலா இன்று உலகிலேயே எண்ணெய் உற்பத்தித் தொழிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது மிகப் பெரிய தொழிலாக விளங்குகிறது. மிகச் சிறிய சுவிட்சர்லாந்து போன்ற பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, சுற்றுலாத் தொழிலை நம்பியே இருக்கிறது. அந்நாடுகள் இத்தொழில் ஒன்றின் மூலமே கோடிக்கணக்கான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கின்றன. சுற்றுலாத் தொழிலின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்த தமிழக அரசு தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்தி முன்னேற்றம் கண்டுள்ளது. இன்னும் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் பல உள்ளன.

சுற்றுலா என்ற கோட்பாடு அண்மைக் காலத்தில் தோன்றிய ஒன்றாக இருந்தாலும், மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே இப்பழக்கம் இருந்து வந்திருக்கிறது. முற்காலத்தில் போக்குவரத்து வசதி இல்லாததால் சுற்றுலா பெரும் அளவில் நடக்கவில்லை. அப்போதும் சரி, இப்போதும் சரி, நோக்கம் ஒன்றுதான். புதியன கற்க வேண்டும், புதியன பார்க்க வேண்டும் என்ற வேட்கை மனித சமுதாயத்திற்குள்ள இயற்கையான வேட்கை. பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்துப் புதியன கற்று வந்த மனிதர்கள் சுமந்து வந்த அ பவங்கள், கலையுணர்வோடு வெளிப்பட்டபோது இயற்கை எழிலை ஏற்றமுறச் சித்திரிக்கும் இலக்கியங்கள் பிறந்தன; ஓவியங்கள் விரிந்தன; சிற்பங்கள் எழுந்தன. அப்படிப்பட்ட இலக்கியங்கள் தமிழகமெங்கும் பரவிக் கிடக்கின்றன. அவை தமிழர் நாகரிகத்தின் தொன்மையைச் சாகா வரம் பெற்ற சான்றுகளாக விளக்குகின்றன.

''இயற்கை எழிலைக் காண்பதிலே தனிச்சுவை இருக்கிறது. அது உள்ளத்திற்குத் தூய்மை தரவல்லது என்பதை மலைவளம், கானின் கவர்ச்சி ஆகியவற்றைக் காணும் போது நிச்சயமாக உணர முடிகிறது''.

''வெயில் நுழைபு அறியா
குயில் நுழை பொதும்பர்!''
வேண்டுமா ?
''கொம்பர்த் தும்பி
குழல்இசை காட்ட
பொங்கர்வண்டு நல்யாழ் செய்ய
வரிக்குயில் பாட, மாமயில் ஆடும்
விரைப் பூம்பந்தர்''
காண வேண்டுமா?
அப்படிப்பட்ட இடங்கள்
தமிழகத்தில் உண்டு.
கண்ணைக் கவரும் ஓவியங்கள்,
கருத்தைக் கவரும் சிற்பங்கள்,
களிப்பூட்டும் கைவினைப்
பொருள்கள் வேண்டுமா ?

அவை தமிழகத்தில் நிறைய உண்டு. தமிழகமெங்கும் ஆங்காங்கு வானோங்கி நிற்கும் கோபுரங்கள், நமது பெருமைக்குச் சான்று பகருகின்றன.

புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை செய்வதே முற்காலத்தில் சுற்றுலாவின் முக்கிய நோக்கமாக இருந்தது ; இப்போதும் அந்த நோக்கம் இருக்கிறது. அதோடு இன்னும் பல்வேறு காரணங்களும் இப்போது சேர்ந்துவிட்டது.

சமூகப் பொருளாதார வளர்ச்சி காரணமாகவும், தொழிற் சாலைகள் வளர்ச்சி காரணமாகவும், மக்கள் இடம் மாற வேண்டியிருக்கிறது. குறிப்பாக நகர்ப்புறங்களை நாடுகின்றனர். இயற்கைச் சூழலை விட்டுச் செயற்கைச் சூழலில் மனிதன் இயந்திரத்தோடு இயந்திரமாக வாழ்கிறான். அவனுக்கு ஓய்வு வேண்டும்.

இயற்கைக் காட்சிகள் நிறைந்த எழில்மிகு சென்னை, மாமல்லபுரம், கோவளம், எண்ணூர், கூடலூர், மணப்பாடு, திருச்செந்தூர், கன்னியாகுமரி கடற்கரைகள், குற்றாலம், ஒகனேக்கல், பாபநாசம் நீர்வீழ்ச்சி போன்ற இடங்கள்; உதகை, கோடைக்கானல், ஏர்க்காடு போன்ற மலைப்புற இடங்கள் ஓய்விற்கும், நிம்மதிக்கும் உகந்த இடங்களாகும்.

கலை நுகர்வோர்கள், அறிவு நாடி வருபவர்கள், இயற்கை எழிலைக்காண்பவர்கள், வியாபார நோக்கத்தோடு வருபவர்கள், இப்படி எத்தனையோ வகைகள்.

தமிழகத்தில் சென்னை, காஞ்சி, தில்லை, தஞ்சை, மதுரை, திருச்சி, இராமேசுவரம் போன்ற இடங்களில் உள்ள தொன்மை வாய்ந்த கோயில்கள், சரித்திரப் புகழ் பெற்றவை. சென்னை, மாமல்லபுரம், காஞ்சி, வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் இருக்கும் ஓவியங்கள், சிற்பங்கள், உற்பத்தியாகும் கவின்மிகு கைவினைப் பொருள்கள் வரும் பயணிகளுக்குத் தெவிட்டாத விருந்தாகும்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகள் நம் நாட்டின் எழில்காண வருவதால், நமது பண்பாட்டை உலகறிய வழி ஏற்படுகிறது.

வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கு இன்றியமையாத தேவை, சுத்தமான உணவு, தூய்மையான சுற்றுப் புறங்கள். இவற்றை நல்ல ஓட்டல்கள் அமைப்பதன் மூலம் உண்டாக்க முடியும். எனவே, ஓட்டல் தொழிலுக்கு ஊக்கமூட்ட மைய அரசும், தமிழக அரசும், பல்வேறு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி முதலீட்டுக் கழகம், ஓட்டல் தொழில் துவங்க நிதி உதவி அளிக்கிறது. தமிழக அரசு ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் அமைக்க இரண்டு இடங்களைச் சென்னையில் ஒதுக்கியிருக்கிறது. சாலை வழித் தங்கும் விடுதிகள் இரண்டிற்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சியை விரைவுப்படுத்தத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒன்றை ரூபாய் 50 இலட்சம் மூலதனத்தோடு தமிழக அரசு நிறுவியுள்ளது. இதுவரை ரூபாய் 30 இலட்சம் இக் கழகத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இக் கழகம் சுற்றுப் பயண முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் சுற்றுலா மாளிகைகள் அமைத்து, சுற்றுப் பயணிகளுக்கு வசதி செய்து தருகிறது. இதுவரை அரசு நடத்தி வந்த சுற்றுலா மாளிகைகளை இக்கழகம் எடுத்துக்கொண்டு, அவற்றைஇலாபகரமாக நடத்தி வருகிறது. உதகை, திருச்சி, மதுரை, கோடைக் கானல் ஆகிய இடங்களில் உள்ள மாளிகைகளை விரிவு படுத்திக் கணிசமான அளவு வசதி அளிப்பது தவிர, ஒகனேக்கல், கூனூர், குற்றாலம், மாமல்லை ஆகிய இடங்களில் புதிய மாளிகைகள் கட்டப்பட இருக்கின்றன. ஏர்க்காட்டில் புதிய மாளிகை கட்டி முடிக்கப்பட்டு விட்டது. மாவட்டத்தின் மைய இடங்களிலும் பிற முக்கிய இடங்களிலும், சுற்றுலா மாளிகைகள் கட்டவும், இக்கழகம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுற்றுலா இடங்களை மேம்படுத்துகையில் சாலைகளை நல்ல முறையில் பராமரித்து வருதல், கண்கவர் எழில்மிகு இடங்களைச் சரியாகப் பேணி வருதல் சுற்றுப் புறத்தைத் தரமான சுகாதார நிலையில் வைத்திருத்தல், நல்ல குடிநீர் வசதி செய்தல் ஆகியவை மிகமிக முக்கியமான திட்டங்களாகும்.

இராமேசுவரத்தில் மைய அரசு ஒரு சுற்றுலா மாளிகையைக் கட்ட இருக்கிறது. இதற்கு வேண்டிய வசதிகளைத் தமிழக அரசு தருகிறது.

சென்னை, மாமல்லபுரம், காஞ்சி போன்ற இடங்களைக் கண்டு மகிழத் தினமும் சுற்றுப் பயணப் பேருந்துகளை விடுகிறது. சென்னைத் துரித வண்டி நிலையத்திலிருந்து இவை தினமும் கிளம்புகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி காண மாவட்டச் சுற்றுலாக் கருத்தரங்குகள் நடத்தி வருகிறது. தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு அடுத்து வரும் பத்து ஆண்டுகளுக்கான அடங்கல் திட்டம் தயாரிப்பதும், பல்வேறு இடங்களைச் சுற்றுலா இடங்களாக மேம்படுத்துவதற்கான முன்னுரிமை அளிப்பதும் இக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

உதகை ஏரியை அழகு படுத்தவும், முதுமலை வன விலங்குகள் சரணாலயத்தைப் பேணிக் காக்கவும், மாமல்லபுரத்தை அழகு படுத்தவும் திட்டங்கள் இருக்கின்றன.

மாமல்லபுரத்தில் ஒலி, ஒளித் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. சென்னையில் தமிழகத்தில் உள்ள கோயில்கள் சிற்பங்கள் முதலியவற்றை மெழுகில் செய்து, அரும் பொருட் காட்சிசாலை ஒன்றை அமைக்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னை நகருக்கே அழகு சேர்க்கும் கூவம் சீரமைப்புத் திட்டமும் முடிவடைந்து வருகிறது. இளைஞர் விடுதி ஒன்றும் சென்னையில் கட்டப்பட்டு வருகிறது. இவை மேற்கொண்டுள்ள திட்டங்களில் சில.



மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சர்
க. இராசாராம்

நான்காவது திட்டக் காலத்தில் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக மாநில அரசு ரூ. 26.25 இலட்சமும், மைய அரசு ரூ. 213.5 இலட்சமும் ஒதுக்கி இருக்கின்றன.

மாநிலத் திட்டக் குழுவும், தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு வழி காணத் தீவிர ஆய்வு நடத்தி வருகிறது.

இப்படிப் பல்வேறு ஆக்கப் பணிகளில் சுற்றுலா வளர்ச்சிக்காக நாம் ஈடுபட்டிருக்கும் அதே நேரத்தில், மைய அரசு வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகள் தமிழகம் காணப்பெரும் அளவில் வர ஆவன செய்ய வேண்டும். முக்கியமாகச் சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தி அகில உலக விமானங்கள் சென்னை வழியாகச் செல்ல ஆவன செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் மேற்கொண்டுள்ள திட்டங்களின் முழுப் பயனையும் பெறமுடியும்.

இப்படிப் பலவகைகளில் நாட்டிற்கு வளம் சேர்க்கும் சுற்றுலாத் தொழில்—ஓட்டல் தொழில், போக்கு வரத்துத் தொழில், கைவினைத் தொழில் போன்ற பல தொழில்கள் வளர வழி ஏற்படுகிறது. வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கிறது.

எனவே, ஒரு சில மணி நேரத்தில் முற்றிலும் புதிய சூழ்நிலையில் வந்து இறங்கி, ஒரு சிலநாட்களே இருக்கும் வெளி நாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கு அவர்களது தேவையறிந்து அவற்றைப் பூர்த்தி செய்ய வேண்டும். நமது கலாச்சாரம், பண்பாடு, அவற்றின் அடிப்படைத் தத்துவம், சமூகப் பழக்க வழக்கங்கள், மக்களின் வாழ்க்கை முறை ஆகியவற்றைச் சிறப்பாக விளக்க வேண்டும். அப்போதுதான் திரும்பச் செல்லும்போது நமது நாட்டின் பண்பாட்டுத் தூதுவர்களாக அவர்கள் செல்வார்கள். சுருங்கச் சொன்னால், 'அந்நியர்களாக வந்தவர்களை நண்பர்களாக' அனுப்பி வைக்க வேண்டும். அப்போதுதான் நமது முன்னோர்கள் நமக்களித்த 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்,' என்ற உயர்ந்த பண்பாட்டை மெய்ப்பித்தவர்களாவோம். நம்மில் எல்லாருக்கும் சுற்றுலா வளர்ச்சியில் பங்குண்டு. அதை எல்லாரும் சிறப்புறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(18-10-1972 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை)

# பாட்டுக்கொரு புலவன்

— இளங்கோ —



மூடுபனி வார்த்தைகளால் முனகி டாத
முண்டாசுப் புலவோன்; நம் விடுத லைக்குச்
சூடுளத்தில் ஏற்படுத்திச் சோரணை ஏற்றித்
தோள்தட்டி முண்டாவைக் காட்டி யோன்; தன்
பாடுதுறைக் கலையாலே குழந்தை கட்கும்
பழத்தமிழில் கனியமுது படைத்தோன்; இந்த
நாடுநகர் குலுங்கிடப்பூக் காடு தந்தோன்;
நறுந்திலகம் வைத்தபெரு மீசைக் காரன்!

மொழிபலவும் படித்தறிந்தும், தமிழன் னைக்கே
மூச்சுதனைச் சேர்த்திருந்தான்; வையத் துள்ள
பழிபடாத கலையனைத்தும் கொணர்ந்த போதும்,
பரிமளிக்க வேண்டும்நந் திறமே என்றான்;
விழிபழுது நேர்ந்தோரைப் 'போபோ' என்றான்;
வீட்டுமொழி பயிலாரை வெறுத்தான்; இந்நாள்
எழிலுடைய தமிழரசை எண்ணித் தானே
இயன்றவரை திட்டங்கள் சொல்லிப் போனான்?

எடுத்தாள எதைமறந்தான்? இயல்ஒவ் வொன்றும்
இதயத்தின் உணர்ச்சிகளின் உச்சக் கட்டம்;
படுத்தாலும் வேதாந்தப் பாட்டுக் குள்ளும்
பார்போற்றும் விஞ்ஞானப் புதுமை சொன்னான்;
தடுத்தாளும் வறுமையிலும் 'இமைசோ ராமை,
தமிழ்க்கவிதை, பொதுப்பணியென் தொழிலாம்' என்றான்!
கொடுத்தாள மறந்தாலும் குறைபட் டானா?
குறிக்கோளே உயிரென்ற வீரன் அன்னான்.

பாரதியே! அடிமைவிலங் கொடிக்க வந்த
பாவுக்கே அதிபதியே! தாச னுக்குச்
சாரதியே! சமதருமத் தத்து வத்தின்
சாறினிக்கச் செய்தவனே! சரித்தி ரத்தில்
பேரெழுதும் கவியரசே! கண்ணீர் விட்டே
பெற்றெடுத்த அரசுரிமை பறிபோ காமல்
ஊரதிர வைப்போம்நின் அடிச்சு வட்டில்!
ஒற்றுமையைக் காப்போம்நின் ஆணை யின்கீழ்!





# வெற்றி நடை போடும் தமிழ்நாடு

**எஸ். முத்துராமலிங்கம்**

இந்தியப் பெரு நாட்டிலேயே தமிழ்நாடு தனக்கெனத் தனியொரு இடத்தைப்பெற்றுள்ள மாநிலமாகும். வளர்ச்சித் திட்டங்களை வகையாகச் செயல்படுத்தி இலக்கு மீறிய வெற்றிகளை வெவ்வேறு துறைகளில் ஈட்டி வருவது தமிழ்நாடு.

தாழ்த்தப்பட்ட மக்களின்—பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளியூட்டவேண்டும்—அனைவரும் வாழ்க்கையில் உயர்ந்திட வேண்டும் என்ற அடிப்படையில் தொலைநோக்குத் திட்டம் வகுத்துச் செயல்பட எண்ணிய தமிழ்நாடு அரசு, இந்தியாவிலேயே மாநில மட்டத்தில், தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் திட்டக்குழு ஒன்றினை அமைத்தது. பல்வேறு துறை அறிஞர்களைக் கொண்ட இத்திட்டக்குழு பன்னிரண்டு ஆண்டுக் காலத் தொலைநோக்குத் திட்டம் ஒன்றைத் தமிழ்நாட்டிற்கென வகுத்தளித்துள்ளது.

வெவ்வேறு துறைகளில் ஏற்படவேண்டிய வளர்ச்சிகள் குறித்துக் கூறியுள்ள தமிழ்நாடு திட்டக் குழுவினர், அனைத்திற்கும் அடிப்படையான குடும்ப நலத் திட்டம் குறித்தும் கூறியுள்ளனர். மொத்த இந்தியாவில் பிறப்பு விகிதம் 1000-க்கு 39 என இருக்க, தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் 1000-க்கு 32 என்றுள்ளது. இது 1972-ஆம் ஆண்டின் நிலை. இந்தப் பிறப்பு விகிதத்தை 1978-79-ல் 1000க்கு 25 என்றும், 1983-84-ல் 1000க்கு 22 என்றும் குறைத்திடவேண்டுமென்பது தமிழ்நாடு திட்டக்குழுவினர் தந்துள்ள இலக்காகும்.

திட்டக் குழுவினரின் கணிப்புப்படி 1000 பேர்களில் 135 தம்பதியர் இளமையான—குழந்தை பெற மிகுதியான—வாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள். இவர்களில் 22.4 பேர் குடும்ப நல அறுவைச் சிகிச்சையினாலோ, அல்லது கருத்தடை வளையம் பொருத்துதல், வழக்கமான கருத்தடை முறைகளைப் பின்பற்றுதல் போன்றவற்றினாலோ, குழந்தைபெறும் வாய்ப்பிலிருந்து காக்கப்பட்டுள்ளார்கள். திட்டக் குழுவினரின் நோக்கத்திற்கேற்ப 1979-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் பிறப்பு விகிதத்தை 1000-க்கு 25 என ஆக்க வேண்டுமானால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்கள் இப்போது 1,000-க்கு 4 பேர் என்றிருப்பது, 9 பேர் எனவும், கருத்தடை வளையம் பொருத்திக் கொள்வோர் 1000-க்கு 1.4 பேர் என்றிருப்பது 3 பேர் எனவும், வழக்கமான கருத்தடை முறைகளைப் பின்பற்றுவோர் 1000-க்கு 1.7 பேர் என்றிருப்பது 15 பேர் எனவும் உயரவேண்டும். மேலும் 1972-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் 12 இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் நடந்துள்ளன. தொலை நோக்குத் திட்டத்தில் நிர்ணயித்துள்ள பிறப்பு விகித இலக்கை எட்ட வேண்டுமானால், 1979-ஆம் ஆண்டிற்குள் 24இலட்சம்அறுவைச்சிகிச்சைகள் செய்து முடித்தாக வேண்டும்.

தொலை நோக்குத் திட்டவரைவு அறுதியிட்டுக் கூறும் இந்த இலக்கை எட்டிட அரும்பாடு பட்டுத் தமிழ்நாடு அரசு நிறைவேற்ற முனையும்.

### இந்தியாவின் வழிகாட்டி

தேசியக் குடும்ப நலத்திட்ட வரலாற்றில் தமிழ்நாட்டிற்குச் சிறப்பானதொரு இடமுண்டு. கடந்த காலத்தில் இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி தேசிய விருதுகளைத் தொடர்ந்து பெற்ற பெருமையும் அதற்குண்டு. சிறப்பாகச் சென்ற ஆண்டு நடந்த முனைப்பு இயக்கத்தின் போது தஞ்சை மாவட்டம் நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட தந்தைமார்களுக்குஇலவச உணவு அளித்து, அவர்களை அங்கு இருக்கச் செய்து, கண்ணுங்கருத்துமாகக் கவனித்து, தொல்லை ஏதுமின்றி அவர்களை வீட்டிற்கு அனுப்பியது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்துச் செயல்பட்ட காரணத்தால், கடந்த ஆண்டு நடந்த இரண்டு முனைப்பு இயக்கங்களிலும் இலக்கு மீறிய வெற்றியை ஈட்டியது தஞ்சை மாவட்டம். இம்முறையைத் 'தஞ்சை மாவட்டப் பாணி' எனக்கூறிப் பாராட்டி ஏற்றுக்கொண்ட இந்திய அரசு, கடந்த நவம்பர்த் திங்கள் 1, 2 தேதிகளில் ஐதராபாத் நகரில் நடந்த குடும்ப நலக் கூட்டத்தில் பரிசு ஒன்றினை வழங்கித் தமிழ்நாட்டைப் பாராட்டியுள்ளது. மேலும் இவ்வாண்டு நாடெங்கும் நடத்தப்படும் முனைப்பு இயக்கம் 'தஞ்சை மாவட்டப் பாணி'யைப் பின்பற்றி நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து நடத்தப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. அந்த வகையில் இந்தியாவிற்கே வழிகாட்டுவதாக அமைந்துள்ளது தமிழகம்.

### அறுவைச் சிகிச்சைக்காகும் செலவு ரூ. 110

இம்முறைப்படி முனைப்பு இயக்கம் நடத்தி அறுவைச் சிகிச்சை ஒன்று செய்து முடிக்க ஆகும் செலவு ரூ. 110 ஆகும். இதில் நூறு ரூபாயை இந்திய அரசு தருகிறது. தந்தைமார்களை ஊக்குவித்து அறுவைச் சிகிச்சைக்குள்ளாக்குவோருக்கான 'ஊக்குவிப்போர் தொகை ரூ. 10-ஐ (ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக்கும்) தமிழ்நாடு அரசு தன் நிதியிலிருந்து வழங்குகிறது. ஆக மொத்தம் ரூ. 110. இதில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தந்தைக்கு ரூ. 60 ஊக்கத் தொகையாகவும் ரூ. 10 மருந்தினச் செலவுக்காகவும், நல்வாழ்வு நிலையம் அமைத்தல், விளம்பரம் போன்றவற்றிற்காக ரூ. 30-ம், ஊக்குவிப்போர் தொகையாக ரூ. 10-ம் வழங்கப்படுகிறது.

### இலக்கு

இவ்வாண்டு 1972-73-ல், தமிழ்நாடு முதன்முதலாக ஆறு மாவட்டங்களில், தஞ்சை மாவட்ட முறையைப் பின்பற்றி நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்தியது. இந்த ஆறு மாவட்டங்களும் சேர்ந்து மொத்தம் 1,20,000 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்திட வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. இந்த இலக்கின்படி முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்திய செங்கற்பட்டு மாவட்டம் 16,000 தந்தைமார்களுக்கும், கோவை மாவட்டம் 18,000 தந்தைமார்களுக்கும், வட ஆர்க்காடு மாவட்டம் 21,000 தந்தைமார்

களுக்கும், திருநெல்வேலி மாவட்டம் 25,000 தந்தைமார்களுக்கும் திருச்சி மாவட்டம் 25,000 தந்தைமார்களுக்கும், இராமநாதபுர மாவட்டம் 15,000 தந்தைமார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து முடிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டது.

**விளம்பர இயக்கம்**

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரடிப் பார்வையில் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டது. உள்ளாட்சித் துறையினரும், வருவாய்த் துறையினரும், நல்வாழ்வு, குடும்ப நலத் துறையினரும் ஒருங்கிணைந்து, மிகுந்த ஒத்துழைப்புடன் சிறந்த முறையில் முனைப்பு இயக்கத்தைச் செயல்படுத்தினர். ஊழியர்களுக்கும் தந்தைமார்களுக்கும் உற்சாகமூட்ட வேண்டிப்



25—9—1972–ஆம் நாள் வேலூரில் நடைபெற்ற குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத் துவக்க விழாவில் முதல்வர் கலைஞர் உரையாற்றுகிறார்

பொதுவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிசுத் திட்டங்களை செயல்படுத்தினர். சேவை இயக்கம் ( Service Period ) தொடங்குவதற்கு முன்னர், குடும்பநல விளம்பர அலுவலர்களால் மிகுந்த முனைப்போடு செயல்படுத்தப்பட்டது. பிற மாவட்டக் குடும்ப நல விளம்பர அலுவலரும், தமிழ்நாடு அரசு மக்கள் தொடர்பு அலுவலர்களும், இந்திய அரசு கள விளம்பரத் துறையைச் சார்ந்தோரும், அவர்களுக்குத் துணையாகச் செயல்பட்டனர். மக்கள் தலைவர்கள், சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் முனைப்பு இயக்கம் தொடர்பாக நடந்த பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, சிறு குடும்ப நெறியின் இன்றியமையாமை குறித்து வலியுறுத்திப் பேசினர். படக் காட்சிகள், கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள், வில்லுப்பாட்டு போன்றவற்றின் மூலம் குடும்ப நலக் கருத்துக்கள் மக்களிடையே பரப்பப்பட்டன. வண்ண வண்ணச் சுவரொட்டிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர், மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர், ஆகியோரின் உரைகள் நூல் வடிவிலும், மாண்புமிகு பேராசிரியரின் வேண்டுகோள் துண்டு வெளியீடாகவும் மக்களிடையே வழங்கப்பட்டன. இவ்விளம்பர இயக்கத்தின் பயனாகச் சேவை இயக்கத்தின்போது, மக்கள் தாங்களாகவே அறுவைச் சிகிச்சைசெய்து கொள்ள முன்வரக்கூடிய நிலை உருவானது.

**முஸ்லீம்-கிறித்துவ மக்களின் பேராதரவு**

இம் முனைப்பு இயக்கக் காலத்தில் வட ஆர்க்காடு மாவட்டம் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள துலுக்கப்பாளையம் என்ற கிராமத்தைச் சார்ந்த முப்பது முஸ்லீம் தந்தைமார்கள், அவர்களது மௌலியின் ஒப்புதலோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார்கள். சிறப்பாக அந்த மௌலி பக்ஷிசாகிப், தானே முன்வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டார். அதே போல் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்கப்பட்டிருந்த நல்வாழ்வு நிலையத்தில்அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட ஹனிப் சாகிப் தன் ஊர் மௌலியின் ஒப்புதலோடு அறுவைச்சிகிச்சை செய்துகொண்டுள்ளார். திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் 80-க்கும் மேற்பட்ட முஸ்லிம் தந்தைமார்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார்கள்.

திருச்சி மாவட்டம் வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் துணைத் தலைவர்-கத்தோலிக்கக் கிறித்துவர் திரு சாமிநாதன், தன் இன மக்களிடையே இத்திட்டம் பற்றி எடுத்துரைத்து, அளவான குடும்பத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். அதன் பயனாக அவரது கிராமம் கருங்குளத்தைச் சேர்ந்த 20 கத்தோலிக்கத் தந்தைமார்கள் முன்வந்து அறுவைச் சிகிச்சைசெய்துகொண்டார்கள். அவரது பணிக்குத் துணையாக, இவ்வொன்றியத்திலுள்ள முகவனூர் ஊராட்சி உறுப்பினர்-கத்தோலிக்கக் கிறித்துவர் திரு அந்தோணிசாமி தானே அறுவைச்சிகிச்சைசெய்து கொண்டார். இவரது உடன் பிறப்பும் மைத்துனரும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு உடல் நலத்தோடு இருந்து வருகிறார்கள். இதே போல் செங்கற்பட்டு கோவை இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம்களும், கிறித்துவர்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்கள். இதிலிருந்து குடும்பநலத் திட்டத்திற்கு மதமோ அல்லது கோட்பாடுகளோ—பழக்க வழக்கங்களோ தடையாக இல்லை என்பதும், இந்து, முஸ்லிம், கிறித்துவ மக்கள் அனைவரும் இத்திட்டத்தை விரும்பி ஏற்று வருகிறார்கள் என்பதும் தெளிவு.

**சிறு விவசாயத் திட்டம்**

வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம், புதுப்பாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில், இந்திய அரசின் நிதி உதவியோடு, தமிழ்நாடு அரசு சிறு விவசாயத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறை மூலம் நிறைவேற்றி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கோழிப் பண்ணை வைக்க, செங்கன்று வாங்க, ஆடு வாங்க, விவசாயம் செய்ய ஆகியவற்றிற்காகக் கடன் வழங்கப்படுகிறது. ஒரு விவசாயி ரூ. 1,000 கடன் பெற விரும்பினால், ரூ. 50 பங்குத் தொகையாக முன்பணம் கட்ட வேண்டும். இரண்டு மூன்று குழந்தைகள் உள்ள இளம் தந்தைமார்கள் முனைப்பு இயக்கக் காலத்தில் செங்கம் ஊராட்சி ஒன்றிய நல்வாழ்வு நிலையத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு ஊக்கத் தொகையாக ரூ. 60 பெறுகின்றனர். இதிலிருந்து ரூ. 50ஐ

பங்குத் தொகையாக ஆரம்பத்திலேயே கட்டிச் சிறு விவசாயத் திட்டத்தின் கீழ் ரூ. 1,000 கடன் பெற்றனர். இப்படி நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் நிரந்தரக் கருத்தடை மூலம் சிறு குடும்ப நெறி ஏற்றதோடு தங்கள் முதிர்கால வாழ்வுக்கும் வழிவகுத்துக் கொண்டனர்.

### கோவை நகராட்சியின் சாதனை

பொதுவாக நகராட்சிகள் குடும்ப நலத்திட்டப் பணிகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டுவதில்லை. ஆனால் அந்த நிலையை இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தில் கோவை நகராட்சி நீக்கிவிட்டது. கோவை நகராட்சி தலைவர் முஸ்லிம் இனத்தைச் சார்ந்த திரு. சுக்கூர் அவர்களின் துணையோடு, கத்தோலிக்கக்கிறித்துவரான இந்நகராட்சி ஆணையாளர் திரு ஜான் அலெக்சாண்டர் தன் அரும்பணியால், நகராட்சி ஊழியர்களின் துணையோடு, பெருஞ்சாதனையை ஏற்படுத்தியுள்ளார். இவர் புதுக்கோட்டை, தஞ்சை ஆகிய இடங்களில் நகராட்சி ஆணையாளராகப் பணியாற்றிய போது, சிறந்த முறையில் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தியதற்காகப் பரிசுகள் பெற்றவர்.

கோவை நகராட்சியின் தாய்-சேய் நிலையங்களில் நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, ஊழியர்களுக்குப் பரிசுத் திட்டம் ஒன்றினை அறிவித்து, 'அரிமா' சங்கங்களின் துணையோடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்குப் 'பிளாஸ்டிக்' பைகளைப் பரிசாக வழங்கிப் பல முனைகளிலும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும், ஊட்டி முனைப்பு இயக்கக் காலத்தில் 3,125 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்துள்ளார் இந் நகராட்சி ஆணையாளர். நகராட்சிகள் என்ற அளவில் எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டிலே மட்டுமல்லாது இந்தியாவிலேயே, முனைப்பு இயக்கத்தில் அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த நகராட்சியாகக் கோவை நகராட்சி இருக்கக்கூடும். இந் நகராட்சிக்குத் தேசியப் பரிசு கூட எதிர்பார்க்கப்படுகிறது.

### மதுக்கரை சிமெண்ட் ஆலையின் பணி

கோவை நகர் அருகே அமைந்துள்ள மதுக்கரை ஏ. சி. சி. சிமெண்ட் ஆலையினர் தங்கள் தொழிலாளர்களிடையே குடும்ப நலத்திட்டத்தின் அவசியத்தைக் கூறி, 'சிறு குடும்ப நெறியே சீர்பெருகும் வழி' என்பதை உணர்த்தி வருகின்றனர். தொழிலாளர்களுக்கென நடத்தப்படும் மருத்துவமனை மூலம் இத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். இரண்டு குழந்தைகளோடு அறுவைச்சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு ரூ. 300-ம் மூன்று குழந்தைகளோடு அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவருக்கு ரூ. 200-ம் நான்கு அலலது அதற்குமேல் குழந்தைகள் உள்ளவர்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டால் ரூ. 100-ம் ஊக்கத் தொகையாக அளிக்கின்றனர்.

செங்கை மாவட்ட குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தைக் காஞ்சியில் துவக்கி வைத்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் உதவித் தொகை வழங்கும் காட்சி



ஊக்கத் தொகையோடு கூட அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்கு, மூன்று நாட்கள் வரையிலும் தாய்மார்களுக்கு 7 முதல் 15 நாட்கள் வரையிலும் மருத்துவரின் பரிந்துரைக்கேற்ப விடுப்பு அளிக்கிறார்கள். இம்முனைப்பு இயக்கக் காலத்தில் இவ்வாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் கிட்டத்தட்ட ஐம்பது பேர். அரிசிப்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு, அரசு அளித்த ஊக்கத் தொகையோடு கூட ஆலையினர் அளித்த ஊக்கத் தொகையையும் பெற்று இன்புற்றனர். குடும்ப நலத் திட்டத்தை மிகுந்த ஆர்வத்தோடு செயல்படுத்தி வரும் இவ்வாலையினர் அரசிடமிருந்து மான்யம் எதையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆளுநர், அமைச்சர்கள் பங்கேற்பு

வட ஆர்க்காடு மாவட்ட முனைப்பு இயக்கத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், செங்கற்பட்டு மாவட்ட முனைப்பு இயக்கத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள் திருச்சி மாவட்டம் துறையூர் நல்வாழ்வு நிலையத்திற்கு வருகை தந்து, தந்தைமார்களுடன் உரையாடி, நலம் விசாரித்து, அனைவருக்கும் ஆப்பிள் பழம் வழங்கிப் பாராட்டிச் சென்றார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் இம் மாவட்டத்திலுள்ள மண்ணச்சநல்லூர் நல்வாழ்வு நிலையத்திற்கு வருகை தந்து, தந்தைமார்களுக்கு வேட்டி, துண்டு வழங்கிச் சென்றனர்.

### நிபுணர் குழுவின் பாராட்டு

இந்த ஆறு மாவட்டங்களில் முனைப்பு இயக்கம் நடந்த

...காலத்தில், தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறைச் செயலாளர் திரு. கே. ஏ. அம்பாசங்கர் தலைமையில் நல்வாழ்வு நிலையங்களுக்கு நிபுணர் குழு ஒன்று வருகை தந்தது. இக் குழுவில், இந்திய அரசு, குடும்ப நலத்துறையின் திட்ட இயக்குநர் டாக்டர் சீல், குஜராத் மாநில மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத்துறை, இயக்குநர் டாக்டர் தக்கூர், புள்ளி விவர நிபுணர்கள் ஆகியோர் இருந்தனர். இந்நிபுணர் குழு செங்கற்பட்டு, திருச்சி, இராமநாதபுர மாவட்டங்களில் உள்ள நல்வாழ்வு நிலையங்களுக்கு வருகை தந்தது.

மேலும் இந்திய அரசு குடும்ப நலத் துறையின் உதவிக் கமிஷனராகப் பணியாற்றும் டாக்டர் சர்மா, திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள நல்வாழ்வு நிலையங்களுக்கு வருகை தந்தார்.

இந்த இரு குழுக்களுமே தமிழகத்தில் முனைப்பு இயக்கம் நடத்தப்படும் முறை, நல்வாழ்வு நிலையங்கள் செயல்படும் விதம் ஆகியவற்றை வெகுவாகப் பாராட்டிச் சென்றன.



தந்தைமார்களின் பொழுது போக்கிற்காக வைக்கப்பட்டிருந்த கேரம் போர்டில் வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் விளையாடுவதை நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் கவனிக்கிறார்கள்.

### வெற்றி !

இவ்வாண்டு முதன் முதலாக முனைப்பு இயக்கம் செயல் படுத்தப்பட்ட ஆறு மாவட்டங்களிலும் 1,27,367 தந்தைமார்களும் அறுவைச் சிகிச்சை செய்து முடித்து, 1,20,000 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென இந்திய அரசு தந்த இலக்கையும் மீறி வெற்றி ஏற்படுத்தியுள்ளது தமிழ்நாடு. இது 106 விழுக்காடு அளவு வெற்றியாகும்.

செங்கற்பட்டு மாவட்டம், 32,420 (202·65 சதவிகிதம்), தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சையளித்து, ஆறு மாவட்டங்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கோவை மாவட்டம் 21,702 (120.5 சதவிகிதம்), தந்தைமார்களுக்கும், திருச்சி, மாவட்டம் 25,008 (100.0 சதவிகிதம்) தந்தைமார்களுக்கும், வட ஆர்க்காடு மாவட்டம் 15,677 (74.7 சதவிகிதம்), தந்தைமார்களுக்கும், திருநெல்வேலி மாவட்டம் 21,878 (87.5 சதவிகிதம்) தந்தைமார்களுக்கும், இராமநாதபுர மாவட்டம் 10,682 (71.2 சதவிகிதம்) தந்தைமார்களுக்கும், அறுவைச் சிகிச்சை செய்து வெற்றிபெற்றுள்ளன.

### தென் ஆர்க்காடு — தஞ்சை சேலம்—மதுரை

இவ்வாண்டு முனைப்பு இயக்கத்தை முதன் முதலாக ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தி வெற்றிபெற்றது தமிழ்நாடு அரசு. இப்போது தென் ஆர்க்காடு தஞ்சை, சேலம், மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களில் முனைப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. தென் ஆர்க்காடு மாவட்டம் 18,000 தந்தைமார்களுக்கும், தஞ்சை மாவட்டம் 30,000 தந்தைமார்களுக்கும், சேலம் மாவட்டம் 15,000 தந்தைமார்களுக்கும், மதுரை மாவட்டம் 20,000 தந்தைமார்களுக்குமாக மொத்தம் 83,000 தந்தைமார்களுக்கு முனைப்பு இயக்கக் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்துமுடிக்க வேண்டுமென்பது இந்திய அரசினர் நிர்ணயித்துள்ள இலக்காகும்.

தென் ஆர்க்காடு, தஞ்சை, சேலம் ஆகிய மாவட்டங்களில் நவம்பர்த் திங்களில் விளம்பர இயக்கம் செயல்படுத்தப்பட்டு டிசம்பரில் சேவை இயக்கம் நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டம் விளம்பர இயக்கத்தை 1973-சனவரித் திங்களில் நடத்தி, பிப்ரவரியில் சேவை இயக்கத்தை நடத்த விருக்கிறது. அன்மையில் தமிழகத்தில் நிகழ்ந்துவிட்ட வேண்டாத புயலும், வெள்ளமும் வளர்ச்சிப் பணிகளை வெகுவாகப் பாதித்து விட்டன. புயல் ஓய வேண்டும், வெள்ளம் வற்றிட வேண்டும். மக்கள் மனத்தில் உள்ள அச்சம் நீங்கி, இயல்பான காரியங்களில் அவர்கள் ஈடுபட வேண்டும் என விழைந்தது தமிழக அரசு. வந்த புயலும் வெள்ளமும் சேதத்தை விளைவித்து விட்டன என்றாலும் கதிரவனைக் கண்ட பனி போல் ஆகி விட்டது.

குடும்ப நல முனைப்பு இயக்கம் இம் மாவட்டங்களில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. தஞ்சை மாவட்டம், 11—12—1972-ஆம் நாள் வரை 11,525 தந்தைமார்களுக்கும், சேலம் மாவட்டம் 12-12-72 ஆம் நாள் வரை 4,098 தந்தைமார்களுக்கும், தென் ஆர்க்காடு மாவட்டம் 6—12—1972 ஆம் நாள் வரை 1,601 தந்தைமார்களுக்கும், அறுவைச் சிகிச்சை செய்து, வெற்றி முனை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இடையில் ஏற்பட்ட சில தொல்லைகளைக் கண்டு துவளாது, முனைப்பு இயக்கக் காலத்திற்குள் இந்நான்கு மாவட்டங்களும் அளப்பரிய வெற்றியை ஈட்டும். இந்தியாவிலேயே தமிழ்நாடு தனக்கெனச் சிறப்பானதொரு இடத்தைப் பெற்று வெற்றி நடை போடும் !

# நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
**மாநிலத் திட்டக் குழுவின் பணிகள்**

எல்லாச்
சிற்றூர்களுக்கும்
**சாலை**
இணைப்புகள்!

இவைகளால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

*அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!*
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு

தமிழரசு

# கல்வெட்டுக் காட்டும் கல்விச் சாலைகள்

— மா. சந்திரமூர்த்தி —

சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னும் பின்னும், தமிழகத்தில் உள்ள பெருங்கோயில்களில் கல்விச் சாலைகள் இருந்து வந்துள்ளன. அச்சாலைகளை அரசர்களும், அரசமாதேவிகளும் பெருநிலக் கிழார்களும் நிறுவி அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். அங்கே ஆயிரமாயிரம் மாணவர்கள் கல்வி கற்றனர். அவர்களுக்குப் போதிக்க ஆசிரியப் பெருமக்கள் இருந்தனர். கோயில்களில் மட்டுமன்றி அக்கோயில் மண்டபங்களிலும், தாழ்வாரங்களிலும், திருச்சுற்றுகளிலும் கல்விச் சாலைகள் நடத்தப் பெற்றன. இவற்றைத் ' திருச்சுற்றுலைக் கல்லூரி ' எனக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. கிராமங்களில் நிழல் தரும் மரங்களின் கீழேயும் வகுப்பு நடத்தப் பெற்றன. அவை யாவும் குருகுலத்தின் பிரிவாகக் கருதப் பெற்றன. அவ்வாசிரியர்களுக்கும், அங்கே படிக்கும் மாணவர்களுக்கும் கிராமப் பொதுச் சொத்துக்களிலிருந்து தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பெற்றன. (17/1920) அவ்வாசிரியர்களுக்கு அரசர்கள் நிலமும், கொடையும் அளித்துள்ளனர். கல்விச்சாலையில் மாணவர்கள் பல்வேறுபட்ட கல்வி முறைகளைப் பாங்குறப் பயின்றனர் எனக் கல்வெட்டுகள் விரித்துக் கூறும்.

## காஞ்சிக் கல்லூரி (கி.பி. 400—600)

' கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர் ' என அப்பர் பாடும் அம்மாநகரில் மாபெரும் கல்விச்சாலை ஒன்று இருந்தது. இக் கல்விச்சாலை காஞ்சி கைலாயநாதர் கோயிலை ஒட்டிக் ' கடிகை' என்ற பெயருடன் புகழ் மிகுந்து பணியாற்றி வந்தது. கி.பி. 3—4—ஆம் நூற்றுண்டில் (கி.பி. 350) இக் கல்விச்சாலை தோற்றுவிக்கப் பெற்றது என வரலாற்று ஆசிரியர் கணிப்பர். கி.பி. 3, 4-ஆம் நூற்றுண்டுகளில் இப் பகுதியை ஆண்ட சத்தியசேனன் என்ற மன்னனிடமிருந்து கந்த சிஷ்யன் என்பான் இக்கடிகையைக் கைப்பற்றினன் என அறிகிறோம். எனவே, இதன் தொன்மையும் பெருமையும் நன்கு விளங்கும்.

வேற்று நாட்டு வேந்தர்களும், இக்கல்லூரியில் படிக்க வந்தனர் எனின் இதன் பெருமையை நன்கு அறியலாம். கதம்பர் குல மன்னன் மயூரசர்மன் என்பான் இக் கல்லூரியில் (கடிகையில்) படித்து வந்தான் எனத் தாலகுண்டாக் கல்வெட்டுகள் கூறும். எனவே பிற மாநிலங்களிலிருந்தும் பலர் இங்குக் கல்வி கற்க வந்தனர் என்றும், படித்துப் புகழ் எய்தினர் என்றும் அறிகிறோம். இக் கல்லூரியில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் கல்வி கற்றனர். இவர்களுக்கு நான்கு வேதங்களும், அங்கங்களும், நியாயம், மீமாம்சை போன்ற தத்துவங்களும், இலக்கணங்களும், வில் வித்தை இன்னபிற படைப் பயிற்சி முறைகளும் முறைப்படிப் போதிக்கப் பெற்றன. சமந்த பத்திரர், பூஜ்ய பாதர், முதலிய சமணச் சமய ஆசிரியர்களும் பெரும் புலவர்களும் ஆகிய பெருமக்கள் இங்கு வந்தனர் எனின் இக்கல்லூரி மதுரைத் தமிழ்ச் சங்கம் போல் அனைவருக்கும் பொதுக் கடிகையாக இருந்தது என ஆராய்ச்சியாளர் கூறுவர். இக்கடிகையில் பேசுதல் அக்காலத்தில் சிறந்ததெனக் கருதியதனால் பல நாட்டாரும் இங்கு வந்து சென்றனர். இப்பகுதியில் இருந்து தர்மபாலர் என்பார் நாளந்தாப் பல்கலைக் கழகம் சென்றார். அங்கே பேராசிரியராகவும்; துணை வேந்தராகவும் அவர் திகழ்ந்தார்.

கதம்பர் குல மன்னன் பல்லவ வேந்தனால் இக்கடிகையில் இருந்து விரட்டப்பட்டான் என அறிதலின், அக்கடிகை பல்லவ மன்னனின் பார்வையில் இருந்தது என்பது தேற்றம். இப் பல்லவ வேந்தர்களில் பலர் சிறந்த ஆர்வம் கொண்டு அக் கல்லூரியின் ஆக்கத்திற்குப் பாடுபட்டு வழிவகை செய்தனர்.

## பாகூர் கல்லூரி (கி. பி. 800—900)

பல்லவர் காலத்தில் பாகூரில் ஒரு கல்லூரி இருந்தது. இப் பாகூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருப்பாதிரிப் புலியூருக்கும்—புதுவைக்கும் இடையில் அமைந்துள்ள சிற்றூர் ஆகும். இக்கல்லூரியில் உள்ள மாணவர்கள் 14 கலைகளையும் கசடறக் கற்றனர். 4 வேதங்கள், 6 அங்கங்கள், தரும சாத்திரம், தத்துவம், மருத்துவம், படைப் பயிற்சி இன்ன பிற 18 வகை வித்தைகளையும் அறிந்திருந்தனர். இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் யாவும் மறையவரே ஆவர். அவர்களுக்குக் கல்வி கற்பித்தவர்களும், மாணவர்களைப் பார்வையிட்டவர்களும் மறையவரே ஆவர்.

இக் கல்லூரி செவ்வனே நடைபெறக் கி.பி. 860-ல் நிருபத்துங்க வர்மன் ஆட்சியில் பாகூர் அருகில் உள்ள 3 கிராமங்கள் மார்த்தாண்டன் என்ற அதிகாரியால் அளிக்கப்பட்டன. அவையாவன, சேட்டுப்பாக்கம், விளாங் காட்டங் கடுவனூர், இடைப்புனைச் சேரி என்பனவாகும். எனவே பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்ற மற்றுமொரு கல்லூரி இருந்ததாக அறிகிறோம். இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் சோளிங்க மலை மீதுள்ள கடிகைக்கு மானியம் அளிக்கப்பட்டதாகத் திருவல்லம் கல்வெட்டுக் குறிக்கிறது.

## எண்ணாயிரம் கல்லூரி (கி. பி. 1100)

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள எண்ணாயிரத்தில் இராசேந்திர சோழன் காலத்தில் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) ஒரு கல்விச் சாலை இருந்தது. அங்கு மொத்தம் 340 மாணவர்கள் கல்வி கற்றனர். அவர்களில் 270 மாணவர்கள் பொதுக் கல்வியும், 70 மாணவர்கள் சிறப்புக் கல்வியும் பயின்றனர். அக்கல்விச் சாலையில் 14 ஆசிரியர்கள் இருந்தனர் என அவ்வூர்க் கல்வெட்டு அறிவிக்கின்றது. (333/1917) இதில் பொதுக் கல்வி கற்கும் மாணவர்

களுக்கு 6 நாழி நெல்லும், சிறப்புக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 10 நாழி நெல்லும். கொடுக்கப் பெற்றது. எனவே இச்சாலையில் இளநிலை, முதுநிலை வகுப்புப் பயிலும் மாணவர்கள் இருந்தனர் என அறிகிறோம். இம்மாணவர்களுக்கு இலக்கணமும், தத்துவங்களும் கற்பிக்கப் பெற்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில், இரண்டாவது இலவசக் கண் சிகிச்சை முகாம், திருவண்ணாமலையில் உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் பொதுப்பணி அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் டிசம்பர் 24-ஆம் நாள் துவக்கி வைத்துள்ளார்கள்.

### திருப்புவனி கல்லூரி (கி. பி. 1100—1200)

கி.பி. 11-ஆம் நூற்றுண்டில் புதுவைக்கு அண்மையில் உள்ள திருப்புவனியில் ஒரு கல்லூரி இருந்தது. இக் கல்லூரி, இராசாதிராசன் (கி.பி. 1048) காலத்தில் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது. இக்கல்லூரி இவ்வூர் திருமால் கோயிலைச் சார்ந்து அமைக்கப்பட்டிருந்தது. அங்கே 260 மாணவர்கள் படித்தனர். அவர்களுக்குப் போதிக்க 12 ஆசிரியர்கள் இருந்தனர். இவ்வரிய செய்திகளைச் சோழப் பெருமன்னன் இராசாதிராசன் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

### திருவொற்றியூர் கல்விச்சாலை (கி.பி. 1200)

கி.பி. 12-ஆம் நூற்றுண்டில் திருவொற்றியூரில் மகாபாரதம், சிவபுராணம் இன்ன பிற இதிகாசத் தத்துவங்களை விளக்கும் பகுதிகள் இருந்தன. அக்கோயில் மண்டபங்களில் இலக்கணம் வக்கணிக்கும் மண்டபம் ஒன்றும் இருந்தது. இத்தகைய கல்வியை எடுத்துரைக்கவும், எத்திசையும் பரப்பவும் நிலக்கொடை பல கொடுக்கப் பெற்றதை அவ்வூர்க் கோயில் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

அம்பலத் தாடும் ஆடவல்லானின் தில்லையம்பதியில் உள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் சேக்கிழார் பெருமானுல் திருத்தொண்டர் புராணம் இயற்றப் பெற்றது. காஞ்சியில் கந்த புராணம் இயற்றப் பெற்றது. இவ்வாறு இறைவன் புகழ் பாடும் இசைப் பாடல்கள் இயற்றவும் இக்கோயில் மண்டபங்கள் பயன்பட்டு வந்துள்ளன.

### தஞ்சைக் கல்விச்சாலை (கி.பி. 1200)

கி.பி. 12-ஆம் நூற்றுண்டில் தஞ்சை மாவட்டத்தில் திருவிடைக் கழியில் உள்ள கல்வெட்டு ஒன்று மலபார் மாநிலத்தில் இருந்து வந்து வேதம் கற்ற மாணவர்களுக்கு அவ்வூரில் இலவச உணவு அளித்தது பற்றிய அரிய செய்தியை அறிவிக்கிறது. எனவே, இப்பகுதியில் இருந்து இயங்கி வந்த ஒரு கல்விச் சாலையைப் பற்றியும் அறிய முடிகிறது. இன்னும், வெம்பற்றூர், கச்சூர் முதலிய ஊர்களிலும் கல்விச் சாலைகள் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன (293—1908).

கலை பரப்பும் கல்விச் சாலைகள் மட்டுமன்றிச் சமயத்தைப் பரப்பும் கல்விச் சாலைகள் இருந்தன. இங்கே தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலிய இசைப் பாடல்களின் துணைக் கொண்டு இன்னிசை பாடி இறைவனைத் துதித்துச் சைவத்தையும், வைணவத்தையும் பரப்பினர். தேவாரம் ஓதுவதற்குக் கோயில்களில் இருந்த இடம் தேவாரச் சுற்றுக் கல்லூரி எனப்பட்டது.



இதுகாறும் கூறியவற்றுல் அக்காலத்தில் அடிப்படைக் கல்வி மட்டுமன்றிப் பல்கலை பயிலும் கல்லூரிகளிலும் இருந்தன என்றும் அவை யாவும் பெருங்கோயில்களிலும், மடங்களிலும், மண்டபங்களிலும் அமைந்திருந்தன என்றும், அவை 'திருச்சுற்றுலைக் கல்லூரி' என அழைக்கப்பெற்றது என்றும், அங்கே கல்வி பயின்ற மாணவர்களுக்கும், போதித்த ஆசிரியர்களுக்கும் உணவு, உடை, உறைவிடம் முதலியன அளிக்கப் பெற்றன என்றும், விழாக் காலங்களில் ஆசிரியர்களுக்குப் பொன்னும் கொடையும் அளிக்கப்பெற்றன' என்றும், அக்காலத்தில் கோயில்கள் கல்வியும், கலையும், சமயமும் போதிக்கும் கலைக் கூடமாக விளங்கியது என்றும் நாம் தெள்ளிதில் உணரலாம்.

# தமிழரசு

சந்தா

| | |
|---|---|
| ஓர் ஆண்டு | ரூ. 10.00 |
| அரையாண்டு | ரூ. 5.00 |
| தனி இதழ் | 40 காசு. |

விவரங்களுக்கு :

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

## வெண்பாப் போட்டி - 50

ஈற்றடி : வாயார என்றுமே வாழ்த்து.

முடிவு நாள் : 17-1-1973.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு'

அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.


விலைவாசியைக்
கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை
கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ்
லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS:269 மார்க்குடன்
உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA

1—1—3



# வெண்பாப் போட்டி

பரிசுபெற்ற வெண்பா எழுதியவர் :
புலவர் கரு. சுப்பையா,
கல்லூரணி,
முகவை மாவட்டம்.

## 47. 'ஆண்டு' எனத் தொடங்கி 'அன்பு' என முடித்தல்

ஆண்டு முதிர்ந்ததன் அன்னையைப் பல்லுதிர
வீண்மகன் செய்திட்ட வீம்புமறந்(து)—ஆண்டுவந்த
தையலிடம் தன்மகனின் கைவலுவைச் சொன்னளாம்
ஐயகோ! என்னேதாய் அன்பு.

—புலவர் கரு. சுப்பையா, கல்லூரணி.

ஆண்டுகள் ஓடுவதை ஆருயிரே எண்ணுயோ?
தூண்டிற் புழுவாய்த் துடிக்கின்றேன்!—காண்டிலேயோ?
வேண்டி விரைந்தமனம் வேறெங்குச் சென்றதோ?
ஆண்டுவர வேண்டும்உன் அன்பு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

ஆண்டுக்கொன் ருக அடுத்தடுத்துப் பெற்றிடல்
பூண்டிட்டால் என்னுகும் பூவுலகில்?—யாண்டும்
வறுமை நிறையும்; வளமும் குறையும்
அருமை அடைந்துவிடும் அன்பு.

—புலவர் மா. முத்துச்சாமி, பி.ஏ.,பி.டி. சாத்தனூர்,

ஆண்டு பதினெட்டே ஆகின்ற தேன்சிட்டே!
ஈண்டுநான் உன்னையெண்ணி ஏங்கிடுதல்—காண்டிலேயோ?
எட்டிநின்று பார்த்துமனம் இன்புறுதல் எத்தனைநாள்?
அட்டியின்றித் தந்திடுவாய் அன்பு.

—மு. சிவலிங்கம், வேடசந்தூர்.

ஆண்டு முடிவுக்குள் ஆரணங்கே வந்திடுவேன் !
மீண்டும் இனிப்பிரியேன் வேல்விழியே!—வீண்கவலை
வேண்டாம் ! விடைகொடு, மெய்ந்நெறியை விட்டகலா
ஆண்டகையர் மாற்றிடார் அன்பு.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

ஆண்டு வரும்நாளில் அண்டும் வறுமையினைத்
தோண்டிப் புதைத்திடுவார் தொல்லுகில்—நீண்டிருக்கும்
மாட்சிபெறுங் கொள்கையெலாம் மண்ணில் நிறைவேறி
ஆட்சிசெய வேண்டும்நல் லன்பு !

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

ஆண்டு பலகடந்தும் அத்தான் வரவில்லை;
யாண்டும் அவர்நினைவால் ஏங்குகின்றேன்;—ஏன்தோழி !
நன்ரு அவர்செய்கை ? நானே துடிக்கின்றேன்;
கொன்ருரோ கொண்டநல் அன்பு!

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

ஆண்டு பலவாக ஆய்ந்தே அறிஞரெலாம்
ஈண்டு நமக்குரைத்த இன்னுரைகள்—தோன்றுகின்ற
நீரூற்ருய் நின்றிடுமே நீளுலகு வாழ்ந்திடுமே
ஆரறிவார் அன்னவர்தம் அன்பு.

—எஸ். பார்வதியம்மாள், அருப்புக்கோட்டை.

ஆண்டு முடிவினிலே அன்னைத் தமிழகத்தில்
தூண்டிய வன்முறையால் துன்பமே;—வேண்டாம்
பகையுள்ளம்; பாசமுடன் பல்லோரும் வாழ
அகமகிழ்ந் தூட்டிடுவீர் அன்பு.

—ப. திருவேங்கடம், பொன்மலை.

ஆண்டுவந்த அந்நியரின் ஆட்சியினை மாற்றிட்ட
மாண்புடைநாம் மாநிலத்தின் மன்னரன்றே?—ஆண்டகையே !
அன்பென்னும் ஒன்றிருப்பின், ஆயுதங்கள் தேவையில்லை
வன்படையை வென்றுவிடும் அன்பு.

—அ. சுப்பிரமணியம், கல்லுக்கட்டி.

# வெண்பாப் போட்டி

ஆண்டு முதிர்ந்தும் அருநரையில் தான்வீழ்ந்தும்
நீண்ட பிணியுற்றும் நீள்நெருப்பாய்த்—தீண்டரிய
இன்னல் பலவுற்றும் இன்மகவுக் கிவ்வுலகில்
அன்னைபோல் யார்தருவார் அன்பு?

—புலவர் நா. கருணாநிதி, வங்கனூர்.

ஆண்டு பலவாக அன்பால் எடுத்துரைத்தும்
வேண்டும் நலனை விளைந்திலதால்—மீண்டும்
எடுத்துரைக்கின் என்ஆம்? இடித்துரைக்கின் என்ஆம்?
அடித்துத் திருத்துவதே அன்பு.

—சி. பி. அரங்கநாதன், சென்னை-34.

ஆண்டுக் கொருநாள் அமரராம் நேருவை
மீண்டும் நினைத்தால் மிகநன்று—நீண்டநாள்
வாழ்ந்திடும் பாரத மக்களெல்லாம் கொண்டாட
ஆழ்ந்து செலுத்தினர் அன்பு.

—நெ. குமாரசாமி. கோரிக்கடவு.

ஆண்டுபல வாய்ப்பிசிர் ஆந்தையார் தம்தலையில்
காண்பதற்கே யில்லைநரை; கார்குழலாய்!—யாண்டுமவர்
வாழ்க்கைத் துணைவியரும், வாய்த்திட்ட ஏவலரும்
ஆழ்ந்தேற்ற ஒற்றதுகாண் அன்பு.

—புலவர் எ. மாணிக்கம், விசூர்.

ஆண்டிருப தாகா அழகுப் பருவநிலா;
பாண்டியனின் நன்முத்துப் பல்வரிசை;—நீண்டகுழல்;
தித்திக்கும் வாய்என்பார் தேன்என்பார் காதலியை!
அத்தனைக்கும் காரணமோ அன்பு.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

ஆண்டைந்து திட்டமாம் ஐந்தாம்நல் திட்டத்தால்
யாண்டுமே 'தன்னிறைவால்' ஏற்றமுற—ஈண்டுநாம்
நாளும் கொளுமுயற்சி நன்மை விளைக்குமேல்
ஆளுமே நன்மையெலாம் அன்பு.

—இரா. தியாகராசன், கத்திரிப்புலம்.

ஆண்டு புகழடைந்தார் ஆயிரம்பேர், அன்பாலே
ஆண்டுப் புகழடைந்தார் ஓர்சிலரே—வேண்டும்
பொருள்கொடுத்து வாழ்ந்தான் புலவர்க்குப் பாரி
அருள்வாழி வாழியவன் அன்பு!

—சு. கிருட்டிணன், திருப்பூர்.

ஆண்டுபதி னேழிருக்கும் ஆண்கள் மனமழிந்தார்
ஊண்மறந்தார் பெண்ணால் உறக்கத்தில்—காண்பரிய
நல்லமைதி காண்பமெனில் நல்லுறக்கம் கண்ணிலில்லை
அல்லலைத் தீர்க்குமவள் அன்பு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

ஆண்டு பலவாக அன்புடன் இல்லறத்தைப்
பூண்டே புவிபோற்ற வாழ்ந்தாலும்—மாண்புடைய
மக்கள் மொழியால் மனம்மகிழ்வு கொள்வதன்றே
எக்காலும் ஏத்துகின்ற அன்பு!

—புலவர் அ. சுந்தரேசன், சுந்தரம்பள்ளி.

ஆண்டென்னைச் சோலையிலே ஆரத் தழுவியவன்
தூண்டிச் சுவைத்திரு தோள்பற்ற—மீண்டும்
வருவானோ? இன்ப மழையில் நனைய
அருள்வானோ என்றனுக் கன்பு?

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., சென்னை-25.

ஆண்டாண்டாய்ப் பால்ஊற்றி அன்பாய் வளர்த்தாலும்
தீண்டும் கருநாகம் தேன்தருமோ!—வேண்டாக்
கடும்பெயில் நெஞ்சம் கனிவதெந்நாள்? மானுக்(கு)
அடுபுலிதான் காட்டுமோ அன்பு.

—ந. சென்னார்த்தனன், அரக்கோணம்.

ஆண்டாண்டுக் காலம் அழுகின்ற ஏழைக்கு
வேண்டுமடி நல்லுணவு! வேறு "விழி"—பூண்டிடவே
கண்ணுக் கிலவசமாய்க் கண்சிகிச்சை செய்கலைஞர்
அண்ணனவர் தந்திடுவார் அன்பு.

—பழ. சிங்காரம், வீராமதி.

ஆண்டுக் கொருபிள்ளை யாயிங்கே பெற்றுவரின்
மாண்டாலும் கொள்ளாது மண்ணுலகு—வேண்டாமே
என்றைக்கும் பிள்ளை இரண்டேதான் போதுமென்றால்
அன்றைக்குத் தான்கிடைக்கும் அன்பு.

—சிங்காரம், கீழச்சிவல்பட்டி.

ஆண்டுகள் எத்தனையோ ஆனாலும் என்நினைவில்
யாண்டும் வளர்கொடியே வாழ்கின்றாய்—வேண்டுகிறேன்
உன்மடியில் நாள்முடிய ஓர்முறைநான் கண்மலர
என்மனத்தில் ஏங்கிடுமோர் அன்பு.

—நெ. கு. சூரியநாராயணன், எம்.ஏ., பி.டி., சென்னை-28.

ஆண்டுப் பொருளீட்டி அன்பேயான் செப்பியநாள்
மீண்டிடுவேன் என்றார்சொல் மெய்யிலையே—தூண்டிற்
புழுவானேன் தோழி! பொருளாசை கொண்டார்க்(கு)
அழுவானேன் பேதையென் அன்பு.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

ஆண்டு பலவாக அல்லலின்றி வாழ்தற்கும்
நீண்டபல திட்ட நன்மைக்கும்—ஈண்டுக்
குடும்பநலத் திட்டங் கொண்டிருவர் பெற்றே
அடுத்துத் செலுத்துவீர் அன்பு.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

# வெண்பாப் போட்டி



ஆண்டவன்தன் பக்தரிடம், ஆள்பவர்தம் மக்களிடம்
பூண்டுள்ள அன்பினிலும் பூமியிலே—மாண்புடைத்து!
தன்னிகரில் லாதவொன்ருத் தான்பெற்ற பிள்ளையிடம்
அன்னையவள் காட்டுகின்ற அன்பு.

—சி. மு. சிவலிங்கம், மதுரை.

ஆண்டு முழுதும் அயரா துழைத்திடுவோம்
வேண்டும் பொருளை விளைத்திடுவோம்—தீண்டுகிற
ஏழ்மைக்குத் தீயீடுவோம் இன்புற்ற நம்நெஞ்சில்
ஆழ்கடலாய்ப் பொங்கட்டும் அன்பு.

—பெ. தியாகராசன், குன்னம்.

ஆண்டுபல சென்றும் அழியாத காவியமே !
ஈண்டதற்கும் உண்டோ இணையுந்தான்—யாண்டும்
கமழும் செழுந்தமிழ்க் கம்பன் மகன்மேல்
அமரா வதிவைத்த அன்பு.

—எம். ஆறுமுகம், பி.எஸ்சி.,பி.டி., அரும்பாவூர்.

ஆண்டுக்கொன் ருக அடுக்கடுக்காய்ப் பெற்றெடுத்தால்
தூண்டிற் புழுவாய்த் துடிதுடித்தே—மாண்டிடுவோம்
யாருக்கும் பிள்ளை இரண்டிருந்தால் இல்லறத்தில்
ஆறுய்ப் பெருகாதோ அன்பு !

—சுந்தரம், வெண்பாவூர்.

ஆண்டு பலவாய் அழகான இல்லறத்தை
ஆண்டிடுவாள் என்றும அவளன்ருே?—மீண்டுலகில்
தன்னலமே நோக்காத் தகுதிக் கிலக்கணமாம்
அன்னையின் அன்பேநல் அன்பு !

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

ஆண்டு பிறக்கும் அணிநாளில் நாமுந்தான்
ஈண்டு வழங்குவோம் இன்மொழிகள்—யாண்டுந்தான்!
வாழ்கின்ற மக்கள் வளமாக வாழ்ந்திடவும்
ஆழ்ந்தின்று வாழ்த்துவதும் அன்பு.

—ப. குப்புசாமி, பொன்மலை.

ஆண்டு பலவுமுனை ஆதரித்து வந்தாரைப்
பூண்டோ டழிக்கப் புகுஞ்செயலால்—மாண்பென்?
மயக்கமிதை நீவிடுத்து மாப்புகழை நாட்ட
அயராது காட்டிடுவாய் அன்பு.

—புலவர் நகரத்தரசு, நகரம்.

ஆண்டு பலவாக ஆருக் கடும்பகையைத்
தோண்டிப் புதைத்துத் துயர்களைந்து—யாண்டும்
உறவுக்குக் கைகொடுத் துண்மைநெறி காட்டி
அறங்காக்கச் செய்வதுதான் அன்பு.

—பொ. பூங்குன்றன், அரவக்குறிச்சி.

ஆண்டில் இளையோரும் ஆன்ற பெரியோரும்
பூண்ட பெருவாழ்வில் போற்றுவகை—தூண்டுகின்ற
நல்லன செய்து நலம்பெறக் காண்பதுவே
அல்லலை நீக்குகின்ற அன்பு

—ஆர். கிருஷ்ணவேணி, புதுப்பட்டு.

ஆண்டுக் கொருமுறைதான் ஆண்டவனை ஆர்வமுடன்
வேண்டுதல் செய்ய விழைந்திடினும்—தீண்டும்
களங்கம் களைத்துய்யக் காத்திடுமே! கர்த்தர்
அளவில் அருட்கலந்த அன்பு.

—சாமு. இராசமாணிக்கம், எம். ஏ., பெங்களூர்.

ஆண்டுபல வானாலும் அண்ணாவைத் தான்மறக்க
ஈண்டுள்ளோ ராலே இயன்றிடுமோ—தூண்டா
மணிவிளக்கா யென்றைக்கும் மாண்புடனே நெஞ்சில்
அணிசெய்யு மேயவரின் அன்பு.

—அ. காந்தி, பி.எஸ்சி., பி.டி., தேவத்தூர்.

ஆண்டுப் புகழீட்டி, அன்னைத் தமிழ்நாட்டின்
மாண்ட பழம்பெரும் மன்னரெல்லாம்—தூண்டா
மணிவிளக்காய் ஏடுகளில் மங்காமல் வாழ,
அணிகலனுய்ப் பூண்டிருந்தார் அன்பு.

—ப. அ. இசுமாயில், மேலப்பாளையம்.

''ஆண்டுறையும் நம்மத்தான் அன்புருவம் நம்நெஞ்சில்
ஈண்டுலவ லென்விந்தை?'' என்றுயிர்த்து,—''நாண்பெறற்கே
எந்நொடியும் ஏங்குதல்தான்!'' என்றுணர்வேன்! நன்னுளாம்
அந்நாள்; வளர்களம் அன்பு.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

ஆண்டுபதி னறிருக்கும் அத்தைமகள், என்மனத்தைத்
தூண்டில் விழியாலே தொட்டிழுத்தாள்—ஈண்டி
விரும்பி யணைக்க விலகியோடி னுள்பின்;
அரும்பியதோ மெய்க்காதல் அன்பு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

ஆண்டுக்கொருபிள்ளை ! ஐயகோ ! வேண்டாவே !
தூண்டு தசைவேட்கைத் துயரொழிப்பீர்—வேண்டிடுவன்
யாண்டும் வளமுறவும், யாக்கை நலமுறவும்,
பூண்டிடுவீர் உள்ளத்தில் அன்பு.

—மா. முத்துச்சாமி, பலப்பாடி.

ஆண்டுபல வானாலும் ஆன்ருேரின் பேரன்பு
மாண்புற ஓங்கிடுமே மாநிலத்தில்—ஈண்டு
மடைமை சிறுமையொடு மாசுபிணி நீங்க
அடைந்திடுக நல்லியல்பால் அன்பு.

—பழ. கந்தசாமி, பி.ஏ.,பி.டி., சத்திரப்பட்டி.


கதர் கைத்தொழில் அங்காடி
குறளகம்
சென்னை-1
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
வெளிநாட்டார் போற்றும்
வியன் பொருள் கலைக்கூடம்
20461
20462 20463
20464 20465

# உண்மையின் சந்நிதி

16

சோம. மகாதேவன்

## ஒட்டுதல் உறவாகட்டும்

பொழுதடைந்து கொண்டிருந்தது.

நீண்டவொரு பெருமூச்சோடு, எழுந்து மீண்டும் வாசலுக்கு வந்தார் வேலாயுதம்.

தோப்பு வீட்டின் முன்பாக வெட்டிக் கூட்டம்தான் கூடி இருக்கிறது.

இன்னும் மதுரையிலிருந்து உருட்டி முத்தையாவும் அவரது பரிவாரங்களும் வந்து சேரவில்லை. பிற்பகல் மூன்று மணிக்கே அங்கிருந்து புறப்படுவதாகத் தகவல் வந்திருக்கிறது.

இன்னும் வரவில்லையே!

நேரம் செல்லச் செல்ல வேலாயுதத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை. அங்கிருந்தே, கரை நெடுக வண்டிப்பாதையைக் கண்ணோட்டமாகப் பார்த்துவிட்டு, திரும்பிச் சென்று அறைக்குள்ளே நாற்காலியில் அமர்ந்தார்.

மனம் உளைந்தது.

பொன்னையா போய்விட்டதில் வருத்தம் சிறிதளவு இருந்தாலும், நினைத்ததை முடித்துவிடலாம் என்பதில் நிம்மதியும் இருக்கிறது. இருந்தவரையில், அடிப்படையில் கொடுத்த வாக்கு மூலத்துக்கு வில்லங்கம் ஏற்படுத்தாமல், சொன்ன வாக்கைக் காப்பாற்றியே கண்ணை மூடி விட்டவனுக்கு எப்படி நன்றி சொல்ல முடியும்?

அடிதடி வழக்கு, கொலை வழக்காகக் கனத்து விட்டபிறகு, இனி பாண்டியன் எப்படித்தான் தப்பிவிடப் போகிறான்? கம்பிக்குள்ளே நிற்கும் போதே அவன் திமிர் ஒடுங்கப் போகிறது. இங்கே ஊருக்குள்ளே இருப்பவர்களையெல்லாம் மனிதப் பிறவியாக மதிக்காமல், பெண்ணைச் சிறையெடுத்துச் சென்றவனும் துணைக்குப் போய்விடும்போது, அடுத்து ஊருக்குள்ளே எந்தச் சந்தடியும் இருக்காது.

இந்தப் பரபரப்பான சூழ்நிலையில், முத்தையா மாமனைப் பார்த்து அவரோடு உட்கார்ந்து பேசாத வரையிலும் மனசுக்கு நிம்மதி ஏற்படுமா?

நாச்சிமுத்து அவசரமாக உள்ளே நுழைந்து, "அவங்க.... வந்திட்டாங்க" என்று சொல்லி நின்றான்.

வேலாயுதம் பரபரப்புடன் எழுந்து வாசலுக்கு வந்தார்.

கரைவழியாகப் பத்துப்பேர்களுக்கு மேல் வந்துகொண்டிருந்தார்கள். முத்தையா மாமா கையில் தடியோடு முந்தி வர, அவருக்குப் பின்னால் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு சடையனும் வந்து கொண்டிருந்தான். இங்கே, வைகைக் கரையில் தான் பொன்னையாவின் தகனக் கிரியைகளை நடத்தி வைத்து விட்டு வருவது போலிருந்தது, அவர்கள் நடந்து வந்த விதம்.

நெருங்கி, முற்றத்துக்கு வந்து விட்ட பிறகுதான் தலைநிமிர்ந்து பார்த்தார் முத்தையா. அவரது முகத்திலும் கவலை தோய்ந்திருந்தது.

வேலாயுதமும், துக்கம் நிரம்பி வழிவதைப் போன்று, ஒன்றும் பேசாமலே திரும்பி வீட்டிற்குள் நடந்தார்.

முத்தையாவின் குறிப்பை அறிந்து, சடையனைத் தவிர, மற்றவர்கள் வாசலிலேயே நின்று விட்டனர்.

முன்னால் சென்ற வேலாயுதம், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, ஏறிட்டுப் பார்த்து, 'உட்காரு சடையா' என்றார்.

சடையன் சற்றுத் தள்ளித் தூரோரமாக உட்கார்ந்துகொண்டான்.

"இங்கே ஊரே ஒரே பரபரப்பா இருக்கு. உடலை இங்கேயே கொண்டாந்து, சிறப்பா வைகைக் கரையிலே அடக்கம் செய்திருக்கலாம். நீங்களும் அவசரப்பட்டு அங்கேயே காரியத்தை முடிச்சிட்டீங்க" என்றார் வேலாயுதம்.

"நாலு பேருக்கு மத்தியிலே, கழுத்துக் கொடுத்தவ, அங்கேயே நடத்தணும்னு சொல்றப்ப, நாம குறுக்கே எதுவும் பேச முடியுமா? அதிலே கொஞ்சம் தாமதம் ஆனதுனாலேதான், சடையன் கடைசியா, பிறந்தவன் முகத்தையாவது பார்க்க முடிஞ்சது" என்று சொல்லிப் பக்கமாக உட்கார்ந்து கொண்டு, சடையனைத் திரும்பிப் பார்த்தார் முத்தையா.

சடையன் திரும்பிப் பார்த்தான். விழிகள் தெறித்து விழுவது போலச் சிவந்திருந்தன.

"வெளியிலே வந்ததும் உனக்குக்கண்ணாலத்தைப் பண்ணி வைக்கப் போறேன்னு கடுதாசி போட்டிருந்தானே சடையன்! நான் வந்து நிக்கிறதுக்குள்ளே, அதட்டிக் கூடப் பேசத்தெரியாதவனை அடிச்சுக் கொன்னு போட்டாங்களே! அந்தப் பாவிக ரெத்தத்தைக் குடிச்சாத்தானே இந்த நெஞ்சு ஆறப் போகுது", என்று வெறியோடு சொல்லித் தரையில் உள்ளங்கைகளால் அடித்தான் சடையன்.

உருட்டி முத்தையா எழுந்து அவனுக்குப் பக்கமாக வந்தார்.

"இனிமே, அழுதாலும் அடிச்சுக்கிட்டாலும் போன உயிர் திரும்பப் போகுதா? இந்த நேரத்திலே நீ தான் மனசைக் கட்டுப்படுத்திக்கணும். நாங்க எதுக்கு இருக்கோம். நடக்கிறது கொலை வழக்கு. இன்னம் எவ்வளவோ இருக்கு" என்றார் அவனுக்கு ஆறுதலாக.

வேலாயுதமும் முகத்தையோ, கண்களையோ துடைத்துக்கொண்டார்.

''பொன்னையாவைப் போல இன்னொருத்தன் உருத்தானவன் இருக்கப்போறானா? அவனுக்குக் கடைசியிலே இப்படியொரு முடிவு கிடைச்சிருக்கு'' என்றார் தழுதழுத்த குரலில்.

தரையில் அடித்த கையை எடுக்காமல், அப்படியே கவிழ்ந்தவாறு குமுறலைக் கொட்டினான் சடையன்.

''என்னோட சரித்திரம் இந்த ஊருக்குத்தான் தெரியாதா? அவர்களைப் பழி வாங்காத வரைக்கும் நான் கண்ணைத்தான் மூடுவனா?'' என்றான் ஆங்காரத்தோடு.

முத்தையா, அவனுக்கு முன்னால் குத்திட்டு உட்கார்ந்து, அவன் தலையில் பரிவோடு கையை வைத்துச் சொன்னார்.

''உன் நெஞ்சு என்ன பாடு படும். நீ நினைச்சா என்ன நடக்கும்ங்கிறது எங்களுக்குத் தெரியாதா சடையா? ஆனா இப்ப அவசரப்பட்டு எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதுவே நமக்குக் கெடுதலா முடியும். பொன்னையா தெளிவா வாக்குமூலம் கொடுத்திருக்கான். சட்டம் இருக்கு. இதிலேயும் தப்பி வர்றப்ப, அதுக்கு மேலே பார்த்துக்கலாம்'' என்றார்.

''அவனுக்கு அலுப்பு மாமா. சடையா ...எந்திரிச்சு.... வாசல் பக்கம் கிடக்கு பாரு கட்டில் அதிலே படுத்திரு. கொஞ்ச நேரத்திலே எல்லாருமா வீட்டுக்குப் போகலாம்'' என்றார் வேலாயுதம்.

சடையன் மெதுவாக எழுந்தான்.

''என் கையைத்தான் கட்டிப் போடுறிங்களே. நானெங்கே இங்க தங்கப் போறேன், திரும்பியும் போகணும் போலத்தான் இருக்கு'', என்று சொல்லிக் கொண்டே வாசலை நோக்கி நடந்தான் சடையன்.

ஒன்றும் பேசாமலே சடையனைப் பின் தொடர்ந்து சென்றார் முத்தையா. சடையன் முற்றத்தில் கிடந்த கட்டிலில் படுத்துவிட்டதைக் கண்டு, ஒரு திருப்தியுடன், சுற்றிலும் அங்கே யார் யார் இருக்கிறார்கள்என்பதையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பியும் வந்து, ''இவனைக் கட்டி மேய்க்கிறது, ஒரு புலியைப் பக்கத்திலே வச்சிருக்கிறது மாதிரித்தான். இப்பவும் அந்த வேகம் இவனை விட்டுப் போகலையே!'' என்று சொல்லிக் கொண்டே நாற்காலியை வேலாயுதத்துக்குப் பக்கமாக இழுத்துப் போட்டு உட்கார்ந்தார் முத்தையா.

''சிவந்தியை இங்கேயே கூட்டியாருவிங்க; நேரடியா நானும் நாலுவார்த்தை சொல்லலாம்னு நினைச்சிருந்தேன்'' என்று ஆரம்பித்தார் வேலாயுதம்.

''பொன்னையாவை உத்தேசித்து, அவனுக்கு எதையாவது செய்யணும்ங்கிற அபிப்பிராயம் இருந்தாலும் அதைப் பின்னாலே வச்சுக்கலாம். இப்ப......இந்தப் போக்கிலேயே அவனை விட்டுப் பிடிக்க வேண்டியதுதான். மேலே ரெண்டு சாட்சிகளைப் போட்டு, பையனைக் கோர்ட்டிலே நிக்க வச்சு, நாலு கேள்வியிலே சிரிப்பாய் சிரிக்க வைக்கணும்'' என்றார் முத்தையா மெதுவான குரலில்.

''அப்ப—, அவனுக்கும் அவனுக்கும் ஏற்கெனவே தொடர்பு உண்டுன்னு நினைக்கிறிங்களா மாமா?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டார் வேலாயுதம்.

முத்தையா சிரித்தார்.

அடிப்படையில் இரண்டு பேருமே சேர்ந்து கட்டிவிட்ட கதைதான் இது. திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்லும் போது, 'மெய்' போன்ற தோற்றமே ஏற்பட்டு விடுகிறது.

''இப்ப ஏற்பட்டிருக்கிற நெருக்கத்தைப் பார்க்கும்போது நாம கணிச்சதும் ஓரளவுக்கு உண்மையின்னே தோணுது'' என்று சொல்லி மேலும் ஒரு பூச்சுக் கொடுத்தார் முத்தையா.

''இதைப்பத்தியும் சடையன் கிட்டச் சொன்னிங்களா?'' என்று கிசுகிசுத்தார் வேலாயுதம்.

''இதை அவனே தெரிஞ்சுக் கட்டும். பின்னாலே நமக்குச் சாதகமாக அவனைத் திருப்பிக் கலாம். இந்த வழக்கு முடியிற மட்டும், முக்கியமாக, சடையன் நம்ம கைக்குள்ளே இருக்கணும். அது உன் பொறுப்பு'' என்றார் முத்தையா.

''அதை நான் பார்த்துக் கிறேன். அப்பப்ப தட்டிக் கொடுத்து அவனுக்குத் தீனி போட்டுக்கிட்டிருந்தாப் போதும்.''



''இன்னம் ரெண்டு வாரத்திலே வழக்கு விசாரணை ஆரம்பமாயிடும். குற்றம் சாட்டப்பட்டவன் ஜாமீனிலே இருக்கிறதுனாலே, தனது செல்வாக்கைப் பயன் படுத்தி, வழக்கிலே தனக்கு எதிரான சாட்சிகளைப் பயமுறுத்துறதா காரணம் காட்டி, பாண்டியனை ஊருக்கு உள்ளே வர விடாமல் செய்யிறதுக்கும் தகுந்த ஏற்பாடு செய்திட்டு வந்திருக்கேன்'' என்று மேலும் சொன்னார் முத்தையா.

வேலாயுதத்தின் முகம் மலர்ந்தது.

''இவன் ஊருக்குள்ளே இருந்தாலும் நமக்கு ஆபத்துத்தான். இத்தனை சிக்கல்லே மாட்டி இருக்கிறப்பவே, அந்தத் திமிரான பார்வையும், ஏளனப் பேச்சும் அவனைவிட்டு நீங்கலேயே! என்னைத்தான் ஊரை விட்டே விரட்டப் போறானாம். சொல்லி இருக்கான். நீங்க சொன்ன மாதிரி, குழிக்குள்ளே விழுந்தப்புறம் தான் சொன்னபடி கேட்கப் போறான்'' என்றார் வேலாயுதம் ஆத்திரத்தோடு.

''கேட்கிறதாவது! சொல்லிக்காமலே போயிருவான். அதுக்கு என்னென்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்தாச்சு. நிச்சயமா தண்டனைக்குத் தப்ப முடியாதுன்னு வக்கீலும் தெளிவாச் சொல்லிட்டாரு'' என்றார் முத்தையா உறுதியாக.

''முன்னாலே நின்னுட்டோம். எடுத்த காரியம் நல்லபடியா முடியணும்'' என்று சொல்லி நிறுத்தினார் வேலாயுதம்.

''இதிலே தோல்வியின்னு ஏற்பட்டுப் போனா, அப்புறம் ரெண்டு பேருக்குமே ஊருக்குள்ளே குடியிருப்பில்லேங்கிறதை நல்லாப் புரிஞ்சுக்கிட்டுத்தான் இதிலே அடியெடுத்து வச்சிருக்கேன். நம்ம பிடி நழுவாது'' என்றார் முத்தையா உடலைக் குலுக்கிக் கொண்டு.

''இனிமே...... நீங்க வேறே நான் வேறேயா? என்று சொல்லிப் பூரித்துப்போனார் வேலாயுதம்.

முத்தையாவும் இந்தப் பிடியை விடவில்லை.

''நம்ம ரெண்டு பேரும், இந்த அளவுக்கு எதிலேயும் கூட்டுச் சேர்ந்ததும் இல்லையே'' என்றார் சிரித்துக்கொண்டு.

வேலாயுதம் திரும்பிப் பார்த்தார். இந்தக் ''கூட்டு'' என்ற சொல் அவர் நினைவில் தனியாக நின்றது. அவர் வாய் திறக்கும் முன்னதாக, முத்தையாவே மேலும் தொடர்ந்தார்.

''இவ்வளவு நாளும் உன் மேலே பாசத்தோட, ஒட்டுதலா உயிரையும் பொருட்படுத்தாமல், எத்தனையோ காரியங்களுக்கு உறுதுணையா இருந்திருக்கேன். இப்பவும் இருக்கேன்'' என்றார் உருக்கமாக.

''நானும் எதையும் மறக்கலே மாமா. பேர் சொல்ற மாதிரி ஒரு நல்லது செய்யணும்னுதான்



நானும் முடிவு செய்து வச்சிருக்கேன். இதுக்கு முன்னாலே எதையும் கணக்குப் பார்த்தா நாம் பழகியிருக்கோம்!'' என்று கேட்டார் வேலாயுதம்.

''இதையெல்லாம் நினைச்சுத் தான் சொல்றேன் மாப்பிள்ளை. நமக்குள்ளே இருக்கிற இந்த ஒட்டுதலை உறவாக்கிப் போடணும்ன்னு தோணுது. இது போதும். இந்த உயிருள்ள மட்டும் உனக்கு ஒத்தாசையாக இருப்பேன்'' என்று சற்று அவசரத்துடனே சொன்னார் முத்தையா.

வேலாயுதத்துக்குச் சட்டென்று புரியவில்லை.

''என்ன மாமா சொல்றிங்க'' என்று கேட்டார் தணிந்த குரலில்.

''எப்பவும் ரெண்டு பேரும் இப்படியே இருக்கணும்ங்கிற ஆர்வத்தோட தான் சொல்றேன் வேலாயுதம். என் பேத்திப் பெண் பூமயிலை நம்ம நடேசனுக்குக் கட்டி வச்சுப் போடலாம். பின் கட்டத்துக்கு நானும் தெம்பா இருப்பேன். சொத்து சுகம் இல்லையின்னாலும் என் குடும்பம் மரியாதையானது'' என்று சொல்லி ஆவலோடு வேலாயுதத்தின் முகத்தைப் பார்த்தார் முத்தையா.

இதை இவ்வளவு வெளிப்படையாகக் கேட்டு விட்ட அதிர்ச்சியில் உள்ளுக்குள்ளே புழுங்கினாலும், மேலோட்டமாகச் சிரித்துக் கொண்டார் வேலாயுதம்.

தகப்பனார் காலத்தில், இங்கே களத்துக் கங்காணத்துக்குச் செல்லும் ஆளாக இருந்தவர் முத்தையா மாமா. இப்படியொரு சம்பந்தம் செய்யலாமென்று இதற்கு முன்னால் தோன்றவேயில்லையே.

பிடி இருக்கிறது. மாமா துணிந்து கேட்டு விட்டார். இந்தப் பாதையில் அடியெடுத்து வைத்து, இவ்வளவு தூரம் கைகோத்து வழி நடந்து விட்ட பிறகு, நினைத்ததை எட்டிப் பிடிக்கும் முன்னதாக, இருவருக்குமிடையே கீறல் விழலாமா?

பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்த முத்தையா, ''என்ன மாப்பிள்ளை—நான் மனம் விட்டுக் கேட்டதிலே தப்பா எடுத்துக் கிட்டியா?'' என்று கேட்டு இடையிலே நுழைந்தார்.

''எனக்கும் இப்படியொரு கருத்து இருந்திச்சு மாமா'' என்றார் வேலாயுதம் சுருக்கமாக.

முத்தையாவின் முகம் மலர்ந்தது.

''நீயே இதைச் சொல்லி இருக்கணும். மனசுக்குள்ளே வச்சுக்கிட்டே இருந்திருக்கே. அவசரப்பட்டு நான் முந்திக்கிட்டேன்'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டார் முத்தையா.

வேலாயுதமும் சிரித்தார்.

''சீக்கிரத்திலே ஒரு நிச்சயம்ன்னு நடத்திக் கிட்டா எனக்கொரு நிம்மதியாய்ப் போகும்'' என்று சிரிப்பைத் தொடர்ந்து ஒரு முத்திரையைக் குத்தினார் வேலாயுதம்.

## அடுத்த இதழில்

**சென்னை வானொலி நிலையமும் தமிழ்நாடு அரசு குடும்பநலத்துறையும் சென்னை நகரிலும் புறநகர்ப்பகுதியிலும் உள்ள மகளிர் மன்றங்களுக்காக 'நலவழிக்கல்வி' என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கம், மகளிர் மன்றங்கள் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரு முன்னோடிக் கருத்தரங்கம் ஆகும், இதைப்பற்றிய சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.**

''நடேசனையும் கேட்டுக்கிட்டு முடிவு செய்யலாம்'' என்றார் வேலாயுதம்.

''கேளு. அவனை இதுக்கு மேலேயும் கட்டுப்பாடு இல்லாம விடுறது நமக்குக் கெடுதல். நம்ம கண்ணுக்குப் பின்னாலே அவனும் நல்லா இருக்கணும். அதையும் யோசிச்சுப் பாரு'' என்று சொல்லி மேலும் அழுத்தினார் முத்தையா.

''எனக்கும் இது கவலையாத் தான் இருக்கு'' என்ற வேலாயுதம் சுற்றிலும் பார்த்துவிட்டு, ''பேசிக்கிட்டே இருந்திட்டோம். பொழுதும் இருட்டிப் போச்சு. அப்பப் போகலாமா? வண்டி வரலை நடந்தேதான் போகணும்'' என்று சொல்லி விட்டு எழுந்தார்.

''அது சரி—இங்கே இருக்கிற நடப்பைப்பற்றிச் சொல்லலையே! பெரியவர் எப்படி இருக்கார்? இப்ப, பொன்னையா செத்துப் போன அதிர்ச்சி போதுமே'' என்பதைச் சொல்லிவிட்டு முத்தையாவும் எழுந்தார்.

''செய்தியைச் சொன்னப்ப கலங்கித்தான் போயிட்டார். எங்கேயாவது கண் காணாத இடத்திலே தனியாகப் போய் இருக்கணும்ன்னு துடிச்சுக்கிட்டிருக்கார்'' என்றார் வேலாயுதம் நின்றவாறே.

''இந்த நேரத்திலே பெரியவரைத் தனியாகக் கொண்டு போய் இருத்தி வைக்கிறதே நல்லது. இடையிலே அவரை நினைக்கிறப்ப எனக்கே திகிலாத் தான் இருக்கு. இறங்கிட்டோம்; முழுசாப் பார்த்துப் போட வேண்டியதுதான்'' என்று ஊட்டம் கொடுத்தார் முத்தையா.

''அதான் ரெண்டு நாளையிலே வைத்தியம் பாக்குறதுக்கு வெளியூர் போறதா இருக்கோம்'' என்று சொல்லிவிட்டு மாமா பின் தொடர வாசலை நோக்கி நடந்தார் வேலாயுதம்.

அப்போதுதான், அரிகேன் விளக்கை ஏற்றி எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான் நாச்சிமுத்து.

விளக்கு வெளிச்சத்தில் கட்டில் காலியாகக் கிடப்பதுதான் முதலில் பட்டது முத்தையாவுக்கு.

''கட்டிலிலே சடையன் படுத்திருந்தானே. எங்கேடா?'' என்று கேட்டார் பதட்டத்துடன்.

''சடையன்........உள்ளே உக்காந்து பேசிக்கிட்டிருக்கிறதா நினைச்சிருந்தேன். அவன் இங்கே இல்லையே'' என்றான் நாச்சிமுத்து, விளக்கைத் தூக்கிப் பிடித்துப் பார்த்து.

''போடா மடையா...... அவன் இங்கதான் படுத்திருந்தான்'' என்று கோபத்தோடு சொல்லிக்கொண்டு படிகளில் இறங்கினார் வேலாயுதம்.

(வளரும்)




பண்டை மக்களின் அரும்படைப்புகள், சின்னங்கள், மண்ணியல், கல்வெட்டுகள், செப்பேடுகள், படிமங்கள், திமிங்கிலத் திலிருந்து பட்டுப் பூச்சிவரை உயிரினங் களின் உடல் வடிவங்கள் கெடாமல் பாதுகாக்கப்படும் நேர்த்தி - ஆராய்ச்சி யாளர்கள், மாணவர்கள், மற்றவர்கள் அனைவரையும் கவரும் தனிச் சிறப்பு அம்சங்கள் அனைத்தையும் ஒரு பெரும் கட்டடத்தில் கொண்ட அமைப்புத்தான் அரசினர் அரும் பொருட்காட்சி அகம்.

சென்னை எழும்பூரில் அரும் பொருட் காட்சிச்சாலை என்ற பெயரோடும், சாமான்ய மக்களிடையே 'செத்த காலேஜ்' என்ற செல்லப் பெயருடனும் விளங்கும் அரசினர் அரும் பொருட் காட்சி அகத்தின் பல்வேறு துறைகளை யும் குறித்துச் சிறப்புக் கட்டுரைகளைத் தொகுத்துத் தருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

# அரசினர் அரும் பொருட் காட்சி அகம்

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசினர் அரும் பொருட் காட்சியகத்தின் தொல்லியல் பிரிவு ஒரு வகையில் தனிச் சிறப்புக் கொண்டது. ஏனெனில், நிலவியல் பொருட்களுடன் தான் இக்காட்சியகமே தொடங்கப்பட்டது. இலண்டனிலிருந்த ஆசியச்சங்கம் என்பதன் கிளையாகிய சென்னை இலக்கியச் சங்கம் 1828-ஆம் ஆண்டில் சென்னையில் பொருளாதார நிலவியல் காட்சி சாலை ஒன்றைத் தொடங்க விரும்பி நிலவியல் மண்ணியல், புவியியல் அரும் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கியது. ஆனால், முறையான காட்சியகத்துக்கு வேண்டிய நிதி வசதி, இடவசதி ஆகியன கிடைக்காததால், அரும்பொருட் காட்சியகம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளும் படியாக அரசாங்கத்தை அச்சங்கம் கேட்டுக் கொண்டது.

திரட்டிய நில வியல் காட்சிப் பொருட்களைக் கொண்டு சென்னை செயிண்ட் சார்ஜ் கோட்டையில் மத்திய அரும் பொருட் காட்சி அகம் தொடங்கப் பெற்றது. அந்தக் காட்சிச் சாலை அமைத்திருந்த மேல் தளம் காட்சிப் பொருட்களின் சுமையால் சேதமடைந்த தாலும் அறைகளில் இட நெரிசலை முன்னிட்டும் 1854ஆம் ஆண்டில் பொருட் காட்சிச் சாலை பாந்தியன் சாலையில் உள்ள கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. அப்போது அக் கட்டடம் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலமாக இருந்து வந்தது.

நில வியல் பொருட்களுடன் ஏற்பட்ட இக் காட்சியகம் பின்னர் தொல்லியல், மானிடவியல், வரலாற்று முற்காலம், தாவரத் துறை, விலங்கியல் உயிரியல் துறை முதலியவைகளைக் கொண்டு விரிவடைந்தது.

**கோட்டையில் தொடக்கம்**

கனி வளங்கள் குறித்து நாட்டினரிடையே அக்கறை ஏற்படுத்து வதற்காக மட்டுமின்றி வேளாண்மை, மண் பண்பாடு ஆகியவை கருதியும் சிறிய அளவில் பொருட்காட்சிச் சாலை ஒன்றைத் தொடங்கும் படி, மேஜர் ஜெனரல் டபிள்யூ. கல்லன் 1843-ல் அரசினருக்கு யோசனை கூறினர். ஜெனரல் கல்லன், சென்னை இலக்கியச் சங்கச் செயலாளர் இவர் களிடையே நடந்த கடிதப் போக்குவரத்தின் விளைவாக, சென்னையில் மத்திய அரும் பொருட்காட்சி அகம் ஒன்றை அமைக்கப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி இயக்குநர்கள் 1846-ல் இசைவு தந்தனர். அன்று ஆளுநர் மாளிகைப் பணியில் உதவி சர்ஜனாகப் பணியாற்றி வந்த எட்வர்டு கிரீன் பெல்ஃபர் 1850-ல் பொருட் காட்சியகம் அமைக்க முன் வந்தார். 1851-ஆம் ஆண்டில் அதுவரை

பின்னால் ஏற்பட்ட மற்றத் துறைகளுக்கெல்லாம் தனித் தனிக் காப்பாளர்கள் (கியூரேட்டர்கள்) நியமிக்கப்பட்டனர் என்றாலும் காட்சிச் சாலை எதனை முதலாவதாக வைத்துத் துவக்கப் பட்டதோ அந்த நிலவியல் துறைக்கு 1961-ல் தான் தனிக் காப்பாளர் வரும் நிலை ஏற்பட்டது. அதற்கு முன்னால் நிலஇயல் பிரிவை, தாவரப் பிரிவு காப்பாளர் கவனித்து வந்தார். தனிக்காப்பாளர் ஏற்பட்ட பின்பு நிலவியல்பிரிவு, காட்சிப் பொருட்கள், நல்ல முறையில் தொகுக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே நிலவியல் காட்சிச் சாலைகளில் சிறந்த ஒன்றாக இப்பிரிவு விளங்குகிறது. இடவசதியும் மேம்படுத்தப்பட்டுப் பார்க்க வருவோர் தாராளமான முறையில் நடமாட முடிகின்றது.

**ஐந்து பிரிவுகள் :**

இக் கூடத்தில் காட்சிப் பொருட்கள் 5 பிரிவாகத் தொகுத்து வரிசை படுத்தப் பட்டு வைக்கப்பட்டுள்ளன. அவை : (1) பொது நிலவியல் ; (2) பாறைகள், (3) கனிப் பொருட்கள், (4) கால ஓட்டத்தில் மண்ணடியில் இறுகிக் கல் போல் இறுகிவிட்ட தாவரங்கள் விலங்கினப் பொருட்கள் ( Fossils ) (5) பொருளாதார நிலவியல் ஆகியன ஆகும். பொருளாதார நிலவியல் காட்சிப் பொருட்கள் —கனிப்பொருட்கள், இரத்தினக் கற்கள் போன்றவை— தனிப் பேழைகளில் வைக்கப்பட்டுள்ளன.

காட்சிப் பொருட்களில், பல் வேறு தரப்பினர் மனத்தையும் கவர்பவை எரி நட்சத்திரக் கற்கள், உலகக் கோளத்தின் உள் படிமங்கள் அமைந்திருக்கும் முறையைப் பிளாஸ்டர் மாதிரியில் காட்டியிருப்பது ; மணல் பாறைக் கற்கள், சிவப்பு நிறக் கற்கள், படிகக் கற்கள் ஆகியன ஆகும். வரலாற்று முற்காலத்தைச் சேர்ந்த அரிய விலங்குகளின் மாதிரிப் படங்கள், யானை மற்றும் இதர விலங்குகளின் எலும்புகள் கல்போல இறுகிய நிலையில் இருக்கும் காட்சிப் பொருட்களும் குறிப்பிடத் தக்கவை.

பொருளாதார நிலவியல் கூடத்தில் தங்கத் துகள் உள்ள பாறைப் பகுதிகள், மைகா நிலக்கரி, கதிரியக்கப் பொருட்கள், வெப்பம் தாங்கிக் கற்கள் இரத்தினக் கற்கள், கட்டடக்கல் வகைகள், களி மண்ணில் பல் வேறு வகைகள், வர்ணங்கள் செய்வதற்கு உதவும் கற்கள் மெருகேற்றிக் கற்கள் முதலியவை குறிப்பிடத் தக்கன ஆகும். இந்தப் பொருளாதார நிலவியல் கூடத்தின் பொருட்களிலிருந்து தான் மக்கள் நிலவியல் ஆய்வுப் பணிகளை நல்ல முறையில் அறிந்து கொள்ள முடிகின்றது. 'பாசில்' பொருட்கள் பல திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்றவை. ஆராய்ச்சியாளர்களுக்கும், குறிப்பிட்டுக் கேட்பவர்களுக்கும் காண்பிக்கப்படும். சில முக்கிய வகை காட்சிப் பொருட்கள் தனியாக ( Reserve Collections) வைக்கப்பட்டுள்ளன.

நிலவியல் காட்சிப் பொருட்களைப் பாதுகாக்கும் பணியுடன், இப்பிரிவு சம்பந்தப்பட்ட காப்பாளர், தனிப் பொருட்காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்கிறார். உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் களுக்குச் செயல்முறை விளக்கம் சொல்லுகிறார். ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்ற

மக்களுக்கும் வேண்டிய உதவிகள் செய்கிறார். இவ்வகைப் பொருட்களை மேலும் சேகரிக்கப் பயணம் செல்வதும் இவரது பணியாகும். இப்பகுதியுடன் இணைந்த ஆய்வுக் கூடம் ஒன்றும் உண்டு.

காட்சிப் பொருட்களை இன்னும் நவீன முறையில் பார்வைக்கு வைப்பதற்காகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிலவியல் கால அளவு அட்டவணை ஒன்றும் தனிப் பேழையில் வைக்கப் படும்.

இந்தியாவிலுள்ள மாநில அரும்பொருட் காட்சியகங்களில் மிகவும் பெரியது, முந்தியது சென்னை அரசினர் அரும் பொருட் காட்சியகமேயாகும். 1851-ல் தொடங்கப்பட்ட ஆர்வம் மிகக் கொண்ட இயக்குநர்களின் அரும்பணியால் இது படிப் படியாக வளர்ந்துள்ளது. தொடக்கத்தில் மண்ணியல் பற்றி மட்டுமே அமைந்திருந்தது. பிறகு, புதைபொருள், இன இயல், வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நிலை, இயற்கை வரலாறு ஆகிய அனைத்தும் இடம் பெற்றது. இக் காட்சியகத்தின் முதல் பொறுப்பு அலுவலராக இருந்த சர்ஜன் எட்வர்ட் க்ரீன் பால் போர் என்பவர், ஒவ்வொரு பிரிவுக்கும் தேவையான அரும்பொருட்களைச் சேர்க்கும் பணியினை விரைவு படுத்தினார்.

புதுக்கோட்டை மாநிலம் சென்னையோடு சேர்க்கப்பட்ட பிறகு புதுக்கோட்டை அரும் பொருட் காட்சியரங்குக்கும் சென்னை காட்சியகங்களுக்கும் பொதுவான நிருவாக இணைப்பு ஏற்பட்டது. அது முதல், காட்சியகங்களை எல்லாம் இணைக்கும் பணி தொடங்கியது.

நூற்றாண்டுக் காலமாகக் கல்விப் பணிக்குப் பெரிதும் பயன் பட்டுவந்த இக் காட்சியரங்கம் 1951-ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழா கொண்டாடியது. இவ்விழாவினை அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் பண்டித நேரு 27—11—1951-ல் தொடங்கி வைத்தார். அப்போது தேசியக்கலைக் கூடமும் திறக்கப் பட்டது.

சென்னை அரும்பொருட் காட்சியரங்கம் பல்வேறு துறைகளைக் கொண்ட ஒரு பன்னோக் குக் காட்சியரங்காகும். அங்கு கலை — புதை பொருள், மானிடவியல், விலங்கியல், நாணயங்கள், தாவரவியல், மண்ணியல் ஆகிய பல்வேறு பிரிவுகள் உள்ளன. அத்துடன், அரும் பொருட்களை அழியாது காத்திட உதவும் இரசாயன சோதனைக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் அத் துறையில் தேர்ச்சி பெற்ற ஒருவர் காப்பாளராக அமர்த் தப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கு உதவிடும் வகையில் கல்வி வளர்ச்சிக்கு உதவும் சிறந்த முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.



தென்னகத்தின் பண்டைய வரலாறு, பண்பாடு, இயற்கை வரலாறு ஆகியவற்றுக்கு ஆதாரமாக உள்ள சின்னங்கள் ஏராளமாக உள்ளன. இச்சின்னங்களில் சில பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இன்னும் சில ஆய்வுக்காக ஒதுக் கப்பட்டுள்ளன.

### ஆராய்ச்சி வெளியீடுகள்

இக்காட்சியகத்தின் தலை சிறந்த பணி ஆராய்ச்சிக்குத் துணைபுரிவதாகும். இங்குள்ள பல்வேறு பிரிவுகளில் நிகழ்ந்த ஆராய்ச்சிகள் நூல் வடிவிலும், இக் காட்சியகத்தின் செய்தி இதழிலும் வெளியிடப் பட்டு, பிற நாட்டுக் கல்வி நிபுணர்களின் பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறது. இவ்வெளியீடுகளைப் பெற்றுக் கொண்டு அவற்றுக்கு ஈடாகத் தமது வெளியீடுகளை வெளிநாட்டார் அனுப்பும் அளவுக்கு அரிய ஆய்வுக் கருத்துக்களை இக்காட்சியகத்தின் வெளியீடுகள் கொண்டுள்ளன. இயற்கை வரலாறு, புதை பொருளாராய்ச்சி ஆகியவை பற்றி அறிய உண்மைகளைக் கொண்ட வெளியீட்டுத் தொடர்களைத் தந்த பெருமை இக் காட்சியகத்துக்கு உண்டு. இந்த

ஆராய்ச்சி வெளியீடுகளைத் தவிர, காட்சியகத்தில் புதிதாகச் சேர்க்கப்படுகின்றவற்றின் விவரத்தையும், கல்விப் பணிக்காக இக்காட்சியகம் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் பற்றியும் ஆண்டுக்கு இரண்டு முறை துணை வெளியீடுகளும் வெளியிடப்படுகின்றன.

காட்சியகத்தின் அண்மைக் கால வளர்ச்சி.

இந்தியா முழுவதும் அரும் பொருட் காட்சியகங்களை வளர்க்க வேண்டும் எனத் திட்டமிட்டுத் தற்காலத்திற்கு ஏற்றபடிச் சீரமைக்க அண்மையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது, அரசின் நிதியுதவியுடன் இக்காட்சியகம் விரிவாக்கப்பட்டது. காட்சியகங்களுக்குரிய தற்கால புதிய கருவிகளும், அமைப்புகளும் இணைக்கப்பட்டன. ஒளியமைப்பின் மூலம் காட்சியரங்கு எழில் பெற்றது; காட்சியும் பொலிவு பெற்றது. வெண்கலப் பொருட்களின் பிரிவு, இயற்கை வரலாற்றுப் பிரிவு, இரசாயன சோதனைக் கூடம் ஆகியவை விரிவுபடுத்தப்பட்டன. இப் பகுதிகளை 1963-ஆம் ஆண்டு செப்டம்பரில் அன்றையத் தமிழக ஆளுநர் விஷ்ணுராம் மேதி திறந்து வைத்தார். இக்காட்சியகத்தின் வளர்ச்சியில் அது ஒரு புதிய கட்டம். மிக அண்மைக் காலத்தில் புத்தர் சம்பந்தப்பட்ட பழம் பொருட்களும், தபால் தலைகளின் பகுதியும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இத் தபால் தலைப் பிரிவில் பல நாடுகளைச் சார்ந்த 43,000 தபால் தலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

பொது மக்களுக்கான வசதி

இக்காட்சியரங்கும் தேசிய கலைப் பொருட் காட்சியரங்கும் நாள்தோறும் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும். வெள்ளிக் கிழமை தோறும் விடுமுறை. இக்காட்சியரங்கிற்குச் செல்லக் கட்டணம் இல்லை. காட்சிப் பொருட்களைப் பற்றி விளக்கம் தருவதற்கு, இலவசமாகவே உதவிட இவ்வேளைகளில் பணியாளர் இருப்பார்கள். காலை 10 மணி, 12 மணி, மாலை 2 மணி, 4 மணி ஆகிய வேளைகளில் இவர்கள் இருப்பார்கள். குறிப்பாக மாணவர்கள் இவர்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.



கடப்பையில் கிடைத்த செம்மறியாட்டின் உருவம்.

இங்கிருக்கும் காட்சிப் பொருட்களை ஆராய்ச்சியாளர்கள் படமெடுக்க விரும்பினால், அவர்கள் இயக்குநரிடம் அனுமதி கோரிக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும். அனு



ஆதிச்சநல்லூரில் கிடைத்த—வெண்கலத்தால் ஆகிய பெண் உருவம்.

மதி கிடைத்த பிறகு படமெடுத்துக் கொள்ளலாம். அலுவலகத்தில் அனுமதி கோர வேண்டிய விண்ணப்பப்பாரம் கிடைக்கும்.

இக்காட்சியகம் வெளியிட்டுள்ள புத்தகங்கள், படங்கள் எல்லாம் நுழைவாயிலில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. காட்சியரங்கில் உள்ள கையெழுத்துப் படிகள், பத்திரங்கள் போன்றவற்றைப் படம் பிடித்து ஆராய்ச்சியாளர்களுக்கும், கல்வி ஆய்வகங்களுக்கும் தந்து உதவிடுவதற்காக புகைப்படக் குழு ஒன்றும் இக்காட்சியகத்தில் உள்ளது.

கலை நிகழ்ச்சிகளுக்காக ஓர் கலையரங்கமும் இங்கே உள்ளது. அது "மியூசியம் தியேட்டர்" என்று பெயர் பெற்று மக்களுக்கு அறிமுகமாகியுள்ளது. அரசினர் நடத்துகின்ற கலை நிகழ்ச்சிகள், கல்வித் தொடர்பான விரிவுரைகள், சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துவதற்காகவே அமைக்கப்பட்டது.

அரசின் அனுமதியுடன், அரசின் விதிமுறைகளுக்கேற்ப நடக்கின்ற பிற கலை, கல்வி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் வாடகைக்கு விடப்படுவதும் உண்டு.

இங்குள்ள நூற்றுண்டுக் காட்சி மண்டபமும் விரிவுரை, கலை நிகழ்ச்சிகளுக்காக வாடகைக்கு விடப்படுகிறது.

சென்னை அரும்பொருட்காட்சியகத்தில் உள்ள தொல்லியல் பிரிவு, இந்நாட்டையும் அயல் நாடுகளையும் சேர்ந்த வல்லுநர்கள், மாணவர்கள் மற்ற மக்கள் அனைவரையும் கவரக்கூடியதாகும். இந்தக் காட்சிச்சாலை முதன்முதலில் *1851-ல்* நிலவியல் பொருட் பிரிவுடன் தான் தொடங்கப்பட்டது என்றாலும் அலுவலர்கள் அவ்வப்போது தொல்பொருள் சின்னங்களையும் திரட்டி வந்தனர்.

அரும்பொருட் காட்சி முதல் அலுவலர் டாக்டர் எட்வர்டு பால்ஃபோர் பின்னர் மூன்றாவது அலுவலர் டாக்டர் ஜார்ஜ் பிடி இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகப் புகழ்வாய்ந்த அமராவதி சிலைச் செல்வங்களைக் கொண்டு வரச் செய்து, காட்சிச் சாலைக்குப் பெருமை தேடித் தந்தனர். டாக்டர் ஜார்ஜ் பிடி காலத்தில் செப்பேடுகள் பல சேகரிக்கப்பட்டன.

டாக்டர் ஜெ. ஆர். ஹெடர்சன் பொறுப்பேற்றிருந்த காலத்தில் தொல்பொருள் உதவியாளர் பதவி ஏற்படுத்தப்பட்டு திரு ஆர். சீனிவாசராகவன் என்பார் அப்பதவியில் நியமிக்கப்பட்டார். பண்டை நாணயங்கள் சேகரிப்புப் பிரிவுக்கும் அவர் பொறுப்பு வகித்தார். 1920-லிருந்து 1940வரை டாக்டர் கிரேவ்லி காட்சிச் சாலையின் கண்காணிப்பாளராகப் பொறுப்பு வகித்த காலத்தில் ஏற்கெனவே சேகரிக்கப்பட்டிருந்த கற்சிலைகள், செப்புச் சிலைகள், ஓவியங்கள் முதலியன முறையாகத் தொகுத்து வைக்கப்பட்டு, ஆராயப்பட்டன. டாக்டர் கிரேவ்லி தலைமையில் தொல்பொருள் பிரிவு கியூரேட்டராக திரு சி. சிவராமமூர்த்தி இருந்த சமயம் சிலைகள், செப்பேடுகள் முதலியன கால வாரியாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டன. புகழ்வாய்ந்த காவேரிப்பாக்கம் சிலைச் சிற்பங்கள் பெரும் இடர்ப்பாடுகளுக்கிடையே கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

# தொல்லியல் பிரிவு



**சேகரித்த முறை :**

தொல்லியல் பொருட்களைச் சேகரித்தல், பாதுகாத்தல், காட்சிக்கு வைத்தல், வரலாற்றுக் காலத் தொல்பொருட்களை முறைப்படி வரிசைப்படுத்தல் ஆகியன இப்பிரிவின் முக்கியப் பணிகளாகும். இதில் நாணயங்கள் சம்பந்தப்பட்ட பகுதியைத் தனி அலுவலர் கவனிக்கிறார். பூமிக் கடியில் கிடைத்து எடுக்கப்பட்டவை, அரும்பொருட்களைப் பரிமாறிக் கொள்ளும் முறை, நீண்டகால அடிப்படையில் கடனாகப் பெறுதல், நன்கொடையாகப் பெறுதல், விலை கொடுத்து வாங்குதல் ஆகிய வகைகளில் காட்சிப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

இப்பொருட்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன:—

1. கற்சிற்பங்கள், உலோகச் சிற்பங்கள் :

2. கல்வெட்டுகள், செப்பேடுகள்.

3. கட்டடக் கட்டுமானக் கலை அழகுடன் கிடைத்துள்ள பொருட்கள்.

4. பல்வேறு பாணியில் அமைந்த ஓவியங்கள்.

5. மரச்சிற்ப வேலைப்பாடுகள், தக்கை மாதிரிகள், உலோகப் பொருட்கள், வார்ப்படங்கள்.

காட்சிப் பொருட்களில் மிகப் பெரும்பாலானவை கல், உலோகச் சிற்பங்கள், படிமங்கள் ஆகியவை ஆகும். கல்வெட்டுகள், செப்பேடுகள், கட்டடக் கலை அழகுள்ள பொருட்கள், பூமிக்கடியிலிருந்து எடுக்கப்பட்டுப் பெறப்பட்டவை; அல்லது நன்கொடையாகக் கிடைத்தவை.

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம்
# சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

*இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக*
*அஞ்சலகச் சேமிப்பு வங்கியை*
*நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே,*



தமிழ்நாடு அரசு
சிறுசேமிப்பு இயக்ககம்
வெளியிடப் பெற்றது

தொல்லியல் பிரிவை இந்து, பௌத்த, சமணச் சிற்பப் பகுதிகள் என்றும் ஓவியப் பகுதி என்றும் செப்புப் படிமங்கள் பகுதி என்றும் பிரிக்கலாம்.

தமிழ்நாட்டுச் சிற்பங்களின் நிலை, ஆந்திரச் சிற்பங்களின் கால வளர்ச்சி நிலை இதில் காண்பிக்கப்பட்டுள்ளன. பல்லவர் பிரிவில் உள்ள விஷ்ணுவின் சிலையும் கொம்பு கொண்ட வாயிற் காவலன் சிலையும் மிக நேர்த்தியானவை. பல்லவர் காலத்துச் சங்கநிதி, பதுமநிதி சிற்பங்களும் குறிப்பிடத் தக்கவை.

**பிச்சாண்டார் கோயில் :**

சிதைந்து உள்ள முருகன் சிலை சோழர் காலத் தொடக்கத்தைக் குறிக்கும். சோழர் காலப் பிரிவில் உள்ள அழகிய பிச்சாடனர் சிலை, பிச்சாண்டார் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். திருச்சுண்ணம் பூண்டியிலிருந்து கொண்டு வரப்பட்ட அர்த்தநாரீசுவரர், சிலை தென்னகத்துச் சிற்பக் கலையின் ஓர் அரிய படைப்பு. கொடும்பாளூர் திரிபுராந்தகர் ; திரிபுர சுந்தரி சிலைகள் வெண்மையான கல்லில் அழகிய வேலைப்பாடு உடையவை. திரிபுர சுந்தரியின் சிலை குறிப்பிடத்தக்க ஒன்று. சத்திய மங்கலம் விஷ்ணுவின் சிலை, சப்த மாதர்கள், காவிரிப் பாக்கத்துத் தட்சிணாமூர்த்தி, மாமல்லபுரத்து அர்த்தநாரீசுவரர் முதலியன பல்லவர் காலத்தவை.

அமராவதி சிற்ப அறைப் பகுதியில் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட மிகப் பெரிய புத்தர்சிலை, கூவம் புத்தர் சிலை, அமராவதி ஸ்தூபத்தின் மாதிரி வடிவம் ஆகியவை முக்கியமானவை. அமராவதி சிற்பங்களிலிருந்து அக்காலத்தின் சமூக நிலை குறித்துப் பல குறிப்புகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

சமணத் துறவிகளின் சிலைகள், தானவுலப்படு என்ற இடத்தில் சிதைந்த கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்டவை. இவை ராஷ்டிரகூடர் காலத்தவை. மைசூரிலிருந்து கொண்டு வரப்பட்ட சமணத் துறவிகள் சிலை, தூத்துக்குடியிலிருந்து கொண்டு வரப்பட்ட மகாவீரர் சிலை இப்பகுதியில் குறிப்பிடத் தக்கவை. சென்னை அரும்பொருட் காட்சியகத்தின் ஒரு தனிச் சிறப்பு உலோகப் படிமங்கள் சிற்பங்கள் மட்டும், இங்கு 1,500க்கு மேல் இடம் பெற்றிருக்கின்றன என்பதாகும்.



எண்ணிக்கையில் மட்டுமன்றித் தரத்திலும் இவை மதிப்பு மிக்கவை. நடுகல், வீரக்கல், சதிக்கல், பாம்புக்கல் ஆகியனவும் காட்சிப் பொருள்களில் இடம் பெற்றுள்ளன.

**100 கல்வெட்டுக்கள்**

அரும்பொருட் காட்சியகத்தில் சுமார் 100 கல் வெட்டுகள் உள்ளன. பிரமி, வட்டெழுத்து, நகரி, தெலுங்கு, தமிழ், கன்னட எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டுகள் இவை. காஞ்சிபுரம், கீழமுதுகூர், வீரசோழபுரம், முதலிய இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட கல்வெட்டுகள் இதில் உள்ளடங்கும்.

பல்லவர், சோழர், பாண்டியர், கீழைச் சாளுக்கியர் முதலிய பல்வேறு வம்சா வழியினர் காலங்களில் பொறித்துத் தரப்பட்ட375க்கு மேற்பட்ட செப்பேடுகள், பொருட்காட்சியகத்தில் உள்ளன. முதலாம் இராசேந்திரரின் திருவாலங்காட்டுச் செப்பேடு மிக முக்கியமான ஒன்று. முத்திரையிட்ட கெட்டியான வளையத்தினுள் 31 செப்பேடுகள் கோக்கப்பட்டுள்ளன. கூரம் செப்பேடுகள், காசக்குடி செப்பேடுகள். தண்டன் கோட்டம், சிவகாசிச் செப்பேடுகள் முதலியன வரலாற்றுக் கண்ணோட்டத்தில் முக்கியமானவை.

**மரவேலைப்பாடுகள்**

இப்பிரிவில் 500-க்கு மேற்பட்ட ஓவியங்கள் உள்ளன. தஞ்சாவூர்ப்பாணி, தக்காணப் பாணி, இராசபுதனப்பாணி, மொகலாயப்பாணி, ஓவியங்கள் அவை. அண்மைக் கால ஓவியங்களும் இப்போது சேர்க்கப் பட்டுள்ளன.

மரச்சிற்பங்கள், சிதைந்த தேரின் சிற்பப் பகுதிகள், தந்த உலோக வேலைப்பாடுகள் அடங்கிய காட்சிப் பொருட்களில் மரவேலைப்பாட்டுப் பொருட்கள் மட்டும் ஆயிரத்துக்கு மேல் இருக்கும். செங்கற்பட்டு மாவட்டம் கோயம்பேடு, இராமநாதபுர மாவட்டம் திருவாடானை, மற்றும் தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலிருந்து இந்து அறநிலைய நிர்வாகத் துறையின் ஒத்துழைப்புடன் மரவேலைப்பாட்டுப் பொருட்கள், படிமங்கள் பெறப்பட்டன. பயன்படுத்தப்படாத தேர்களிலிருந்தும், உருச் சிதைந்து ஏலத்தில் விடும் நிலையில் உள்ள தேர்ப் பகுதிகளிலிருந்தும்அவை எடுக்கப் பெற்றன. கல், உலோகம், ஆகியவைகளில் காணப் பெறாத பலவகைப் படிமங்கள், இந்த மரவேலைப்பாடுகளில் உள்ளன. மரச் சிற்ப வேலைப்பாடுகளுக்குத் தனிப்பிரிவு ஏற்படுத்துவது குறித்துப் பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

தொல்லியல் பகுதியின் கலைப் பொருட்கள் என்ற வகையில் கிளை விளக்கு, தஞ்சாவூர், கலை வேலைப்பாடு வடிவத்தட்டு முதலியன குறிப்பிடத் தக்கவை. தொல்லியல் பிரிவில் சேகரிக்கப்பட்ட மொத்தப் பொருட்கள் சுமார் பத்தாயிரம், இவற்றில் மூன்றில் ஒரு பகுதிதான் இங்கே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. மற்றவை ஆராய்ச்சிகளுக்கும், சிறப்புப் பொருட்காட்சி நேரங்களிலும் பயன்படுத்தப் படுகின்றன. தொல்பொருட் கலைச்செல்வம் குறித்து மாநிலமும் நாமும் பெருமை அடையலாம்.

**வி. என். சீனிவாச தேசிகன்.**

(கியூரேட்டர், தொல்லியல் பிரிவு.)

## ஒரு வேண்டுகோள்

வெளியிட முடியாதவைகளைத் திருப்பி அனுப்புவதற்கு இயலாதிருப்பதால், ‘தமிழரசு’க்கு கதை, கட்டுரை, கவிதைகள் அனுப்புவோர் அருள்கூர்ந்து பிரதி எடுத்துக்கொண்டு அனுப்பவும்.

# கல்விப் பணிகள்

பழங்காலத்திலேயே அரும் பொருட்காட்சி நிலையங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. பழமையான, அழகான பொருள்களை அந்நிலையங்கள் தம்மகத்தே கொண்டிருந்தன. அவை மக்களுக்கு வியப்பையும், கவர்ச்சியையும் தருவனவாக மட்டுமே இருந்தன. அவற்றைப் பேணிக் காத்தவர்கள் அக்காட்சி நிலையங்களின் தன்மையையும், நோக்கத்தையும் பிற்காலத்தில் பல்வகையில் மாற்றிவிட்டனர். காட்சிச் சாலையைப் பார்ப்பவர்களுக்கு அறிவுக்குவிருந்தாகவும், கலையழகு காட்டுவதாகவும், வரலாற்று வளர்ச்சியை விளக்குவதாகவும் அமையுமாறு அமைத்தனர். இக்காலத்தில் அரும் பொருட்காட்சி நிலையங்கள் சிரிய கல்விக் கருவூலங்களாக இயங்கி வருகின்றன. அந்த நிலையங்களின் பொருள்கள் கலையை வளர்க்கின்றன. மக்களின் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. அவர்தம் சிந்தனையையும் சுடர்விடச் செய்கின்றன.

இந்நோக்கத்தைக் கருத்திற் கொண்டே, சென்னையிலுள்ள அரசினர் அரும்பொருட் காட்சி நிலையத்தில் கல்விப் பணிப் பகுதி, 1971 மார்ச் மாதம் முதல் தொடங்கப் பெற்றது. இப்பகுதி தொடங்குவதற்கு முன்பே கல்வி வளர்க்கும் வேறு பணிகளையும் இக்காட்சி நிலையம் மேற்கொண்டிருந்தது. காட்சிப் பொருள்களை விளக்கும் பணிகளும், காட்சிப் பொருள் அமைப்புப் பயிற்சி வகுப்புகளும், சிறப்புப் பொருட் காட்சிகளும் அவ்வப் போது இங்கு நிகழ்ந்து வந்துள்ளன. இப்பணிகளை நடத்துவதில், இந்தியக் காட்சி நிலையங்களில் சென்னை நிலையமே முன்னணியில் நின்று வந்திருக்கிறது. இப்பணிகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் காட்சி நிலையத்தை மேலும் மக்களுக்குப் பயன்படுமாறு செய்வதே கல்வியதிகாரியின் நோக்கமாகும்.

பொருட்காட்சி நிலையத்தின் கல்விப் பணி இருவகைப்படும். ஒன்று:—பள்ளிச் சிறுவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும், அவர்களுடைய கல்விக்குத் துணையாக இக்காட்சி நிலையங்கள் அமைந்து, அவர்களது கல்வி, கலை ஆர்வத்தை மேலும் வளர்த்தல். மற்றொன்று:—பொது மக்களுக்கு அறிவை வளர்க்கும் வகையில் இந்நிலையங்கள் இயங்குதல் வேண்டும். இவை தவிர, ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், அரும் பொருட்காட்சி இயலைக் கற்போருக்கும் இந்நிலையம் உதவியாக இருக்க வேண்டும்.

முதலில் குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்கு இக்கருவூலம், பள்ளிகளுடன் தொடர்பு கொள்கின்றது. கருவூலப் பொருட்களைக் காண்பதற்கு மாணவர்களை அணி அணியாக அனுப்புமாறு பள்ளிகளைக் கேட்டுக் கொள்கின்றது. பார்க்க வருகின்ற மாணவர்களுக்குக் காட்சி நிலையத்திலுள்ள பிலிம் (திரைப்படம்) கருவூலத்திலிருந்து திரைப்படங்களும் அவ்வப்போது காட்டுவதுண்டு. ஆண்டு தோறும் குழந்தைகள் கலைப் போட்டி ஒன்றும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் போட்டி 1972 பிப்ரவரியில் நடந்தது. அரும்பொருட் கருவூலத்தின் காட்சிப் பொருள் விளக்கம் அடங்கிய கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. கருவூலத்திலுள்ள பொருள்களை விளக்கும் விரிவுரைகள் மாதந்தோறும் நிகழ்த்தப்படுகின்றன. இது பொது மக்களுக்கு மட்டுமன்றி, மாணவர்களுக்கும் பயன் படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்களுடன் தொடர்பு கொள்ளும் இரண்டாவது பணிக்குக் காட்சிப் பொருள் விளக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். படக் காட்சி, சொற்பொழிவுகள், சிறப்புக் காட்சிகள், ஆகியவையும் நடைபெறுகின்றன. விளக்குநர்கள் இலவசமாகவே வருவோரை வழி நடத்தி, அவர்கட்கு விவரமும் விளக்கமும் தருவார்கள். பார்வையாளர்களை ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று அங்குள்ள பொருட்களை அவர்கட்கு விளக்குவார்கள். இப்பணியை வேண்டுவோர் குறிப்பிட்ட நேரத்தில் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அன்றியும் சிறப்புப் பொருட் காட்சிகளும் அவ்வப்போது நடை பெறுவதுண்டு. அப்போது ஒரு சில பகுதிகளிலுள்ள பொருள்களைப் பற்றி தனியான விளக்கவுரைகள் வழங்கப்படுகின்றன. இதனால் ஒரு சில பொருள்கள் அல்லது ஒரே வகையான பொருள்களே சிறப்பாக விளக்கம் பெற முடிகின்றது. அப்போது, தொல்பொருட்களையோ, கல் பொருட்களையோ எவ்வாறு காத்துக் காப்பாற்ற வேண்டும் என்று மக்கள் தெரிந்து கொள்ள முடிகின்றது. தொல் பொருள் நிரப்பி வைக்கப் பட்டுள்ள முன் மண்டபத்தில் எளிதில் மக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கு பெறும்படி இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தொகுப்புப் பொருள் காட்சியும் சில நாட்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இதில் கருவூலத்தின் எல்லாப் பகுதிகளும் பங்கு கொள்ளும். இதனால் அவை தம்மிடையே உள்ள தொடர்பு விளங்க ஏதுவாகின்றது. 'குடிப்பதற்கு நீர்', 'ஆடைகள்', 'அணிகள்', என்ற தலைப்பில் இந்தத் தொகுப்புக் கண்காட்சிகள் நடைபெற்றன. மனிதனின் எழுத்து முயற்சியை விளக்கும் 'மனிதன் கையேடு' என்ற தலைப்பில் இந்நிகழ்ச்சி 1972 பிப்ரவரியில் நிகழ்ந்தது.

கடந்த அரை ஆண்டில் திரட்டப்பட்ட பொருட்களைப் பற்றியும், அடுத்த அரையாண்டில் நிகழவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் விளக்கும் அரையாண்டு செய்திக் கடிதம் ஒன்றும் வெளியிடப் படுகின்றது. வேண்டுவோர்க்கு இது வழங்கப்படுகின்றது. பொருட் காட்சிக் கருவூலம் அமைப்புப் பற்றிய சொற்பொழிவு மாதந்தோறும் நிகழ்கின்றது. இதில் பொது மக்களும் கலந்து கொள்ளலாம். ஒளிப்படங்களுடன், திரைப்படங்களும் காட்டப்பட்டுக் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன. மேலும், மாதந்தோறும் கல்வித் திரைப்படக் காட்சியும் நடத்தப்படுகின்றன. இதற்கும் பொது மக்களும் அனுமதிக்கப் படுகின்றனர். கல்வி இயக்குநர் அலுவலகத்திலுள்ள திரைப் படக் கருவூலத்திலிருந்தும் வெளிநாட்டுத் தூதரகங்களிலிருந்தும், படங்கள் இதற்காகத் தருவிக்கப் படுகின்றன. எல்லாத் தரத்திலுமுள்ள பொது மக்களுக்கும் இசைவான படங்கள் இக்காட்சியில் இடம் பெறு






1


2




3


4


5


6


7





# ராஜாஜி மறைவு
## இரங்கற் செய்திகள்

### குடியரசுத் தலைவர் :

ராஜாஜிக்கு அதிக வயது ஆன போதிலும் கூட, அண்மைக் காலம் வரை நாட்டின் நலனுக்
ாக, தேசப் பிரச்சினைகள், சர்வதேசப் பிரச்சினைகள் பற்றிய தமது கருத்துக்களை மிகத் தெளிவாக
ாடுத்துரைத்து வந்துள்ளார். தமது கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் நுட்பமான ஆற்றல்
படைத்திருந்த ராஜாஜி எடுத்துக் கொண்ட பல பிரச்சினைகள் அவரது கருத்தை ஏற்றுக் கொள்ளாதவ
ராக இருக்கக்கூடியவர்களது கவனத்தைக் கூடக் கவர்வதாக இருந்தன.

### தலைமை அமைச்சர் :

ராஜாஜி பேச்சுத்திறன், அவரது கவர்ச்சிகரமான தோற்றம் ஆகியவற்றில் பலருக்குச் சொந்த
அனுபவங்களிருக்கும். அவரது நடை, இலக்கியச் சுவை ததும்பக்கூடியது. வலிமையும், எளிமையும்
கலந்த நடையாக இருந்தது. அவரது சொற்களில் அனுபவமும், விவேகமும் நிரம்பியிருந்தன.

ராஜாஜி நீண்ட, முழு வாழ்க்கையை அனுபவித்தவர். கடைசிவரை அவரது சிந்தனை தெளி
வுடனிருந்தது. 90 வயதுக்கு மேலும் அவர் சுறுசுறுப்புடன் இயங்கி வந்தார். நாட்டிலும், உலகிலும்
நடந்துவரும் சம்பவங்களனைத்திலும் அவர் அக்கறை காட்டிவந்தார்.

### ஆளுநர் :

ராஜாஜியின் புத்திக் கூர்மைக்கு இணையாகச் சிலரே இருக்க முடியும். மனித உள்ளத்தினை
ஆழ்ந்து ஆராய்ந்து அறியும் திறமை படைத்தவர்.

புலமையும், ராஜதந்திரமும் ஒருங்கே அமையப் பெற்றவர் ராஜாஜி. அவரது பெருந்தன்மை
தலைவர் என்ற முறையில் மனிதர்களையும், பிரச்னைகளையும் அனுதாபத்துடன் புரிந்துகொள்ளும்
ஆற்றல், அவரது தேச பக்தி, நேர்மை ஆகியவை அநேக தலைமுறைகளுக்குச் சிறந்த படிப்பினைக
ளாக விளங்கும். அவர் எப்போதும் வலுவூட்டும் சக்தியாக இருந்தார்.

### முதல்வர் :

ராஜாஜி மறைவு குறித்துத் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்கள் செய்தி வெளியிட்ட போது அவர் கண்கள் கலங்கின. குரல் தழுதழுத்தது. மேலும்
பேசமுடியாத நிலையில் தமது இரங்கல் செய்தியை எழுதிக் கொடுத்தார்.

"அரசியலைக் கடந்து அன்பு காட்டிய ஒரு உள்ளத்தை நாம் இழந்துவிட்டோம். தேசத்தின்
தலைசிறந்த மூத்த தலைவர்களில் ஒருவர் தீபஸ்தம்பம் சாய்ந்தது போலச் சாய்ந்துவிட்டார்; அரசாங்க
முறைப்படி உரிய சடங்குகள் அனைத்தும் உண்டு. மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும்
வகையில் மதுக்கடைகள் அனைத்தும் நாளை மூடப்படும்; நாளை ஒருநாள் தேசிய விடுமுறையாக
விடப்படும். ஒருவாரகாலத்திற்குத் துக்கம் மேற்கொள்ளப்படும்" என்று தமது இரங்கற் செய்தியில்
அவர் குறிப்பிட்டிருந்தார்.

*முன் பக்கத்தில் ராஜாஜி*

1 பேரறிஞர் அண்ணாவுடன்,

2 முதல்வர் கலைஞருடன்,

3 முதல்வரிடம் தாமிர பத்திரம் விருது பெறுதல்,

4 பொதுத் தேர்தலின்போது வாக்களித்தல்,

5, 6, 7 குடியரசுத் தலைவர், ஆளுநர்; முதல்வர் ஆகியோர் மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செய்கின்றனர்,

8 இறுதி யாத்திரை.



சிரங்கப்பட்டணம் பதக்கம்

கின்றன. பொது மக்களும் இப்படக் காட்சியில் மிக்க ஆர்வம் காட்டுகின்றனர்.

ஒரு சில காட்சி மேடைகளிலுள்ள ஒரு பகுதியை மட்டும் தனியாக விளக்கும் அட்டைகளை வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனுல் பொது மக்கள் அவற்றைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள முடியும். இவ்வட்டைகளில் படங்களுடன், எளிதாகப் புரிந்து கொள்ளும் நடையில் விளக்கமும் இருக்கும். இதன் மூலம் படிப்பவர்கள் மேலும் மேலும் ஆர்வம் கொண்டு பொருள்களைக் காண மீண்டும் மீண்டும் வருவர்.

காட்சியகத்தின் கல்விப் பகுதியின் கீழ் ஒரு திரைப் படக் கருவூலமும், இரவல் காட்சிப் பொருள்கள் பகுதியும் அமைந்துள்ளன. கல்வி நிலையங்கள் இவற்றை இரவலாகப் பெற்று, மாணவச் சிறுர்களுக்கு விளக்கிக் காட்டலாம்.

சினிமாப் படங்களின் பெயர்களடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இது எல்லாக் கல்வி நிலையங்களுக்கும் அனுப்பப்படும். கண்காட்சிக் கருவூலத்திலுள்ள, தொல் இயல், நாணய இயல், உயிரியல், தாவர இயல், புவி இயல் முதலான துறைப் பொருள்களை விளக்குவதற்கு இந்த இரவல் காட்சிப் பொருள்கள் பயன்படும்.

மாணவர்களும், பொது மக்களும் பயன் பெறுவதோடன்றிப் புலவர்களும் தொழில் வல்லார்களும் காட்சிப் பொருள் கருவூலத்தால் பயனடைவார்கள். ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் கருவூலப்பொருள்களைப் பயன்படுத்த எல்லா வசதிகளும் செய்து தரப்படும். அவ்வாறு ஆராய்ச்சி நடத்திப் பல நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியாவில் இதுவே முன்னணியிலுள்ள பொருட்காட்சிக் கருவூலம்; எல்லாத் துறையும் நிரம்பப் பெற்ற நிலையமும் இதுவே ஆதலின் கண்காட்சிக் கருவூலம் பற்றிப் புலமை பெற விரும்புவோர்க்குப் பயிற்சி நிலையமாகவும் இது இயங்கி வருகின்றது. கல்வி இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளியாசிரியர்களுக்குக் கோடைக் காலத்தில் கண்காட்சிக் கருவூலம் பற்றிய நுணுக்கங்களை இந்நிலையம் கற்றுத் தருகின்றது. பல நிறுவனங்களால் அனுப்பப்பட்ட பயிற்சியாளர்களுக்கும், பள்ளியாசிரியர்களுக்கும் பயிற்சியளிக்கும் பணி, இக் கருவூலத்தின் கல்வியாசிரியரிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. கல்விப் பகுதியுடன் நுண்பிலிம் பதிவேட்டுப் பகுதியும்



சிரங்கப்பட்டணம் பதக்கம்

இணைக்கப்பட்டிருகின்றது. இது ஆராய்ச்சியாளர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் எளிதில் பயன்பட்டு வருகின்றது. குறைந்த செலவில், அவர்கள் புத்தகங்கள், ஏடுகளைப் பதிவு செய்து கொண்டு போகின்றுர்கள்.

இது மிகவும் அடக்கமான ஆரம்ப நிலையே ஆகும். செல்லச் செல்ல அத்துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு இதன் பயன் நன்கு தெரியும். அரும் பொருட்காட்சி நிலையத்தின் அருமை பெருமையை மக்கள் உணரும்போது, இக்கல்விப் பகுதியின் பணியும் தெளிவாக உணரப்படும். இக்கருவூலம் எய்த வேண்டிய சீரிய உயர் நிலையை அடைய, கல்விப் பகுதி தன் பங்கை விரைந்து நிறைவேற்றும்.

என். ஹரிநா ராயணு
(கல்வி அலுவலர்)



அரும்பொருட் காட்சியகத்தில் உள்ள சிற்பங்கள் இரசாயனக் கூடத்தின் உதவியால் அவ்வப்போது சுத்தம் செய்யப்படுகின்றன.

அன்பளிப்பாகவும், நன்கொடையாகவும், இங்குப் பணியாற்றுவோர் பயணம் செய்து திரட்டியும், அரிதிற் பெறப்பட்ட சில பொருட்களைக் கொண்டு 1851-ஆம் ஆண்டு முதலே உயிரியல் பகுதியானது இயங்கி வருகின்றது. சிப்பிகள், மீன்கள் பறவைகள், புழுக்கள், முதலியன பிற காட்சிக் கருவூலங்களிலிருந்து, மாற்றுப்பொருள்களாகப் பெறப்பட்டன.

அறுபது அடி நீளமுள்ள திமிங்கிலத்தின் எலும்புக்கூடு வாங்கப்பட்டுப், பத்திரப்படுத்தப் பட்டு மிகவும் நுட்பமாக எலும்புக்




கூடு மேடையில் தொங்கவிடப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சிக் கருவூலத்தின் சிறப்பு அதிகாரியாக இருந்த டாக்டர் எட்வேர்டு கிரீன் பால் பேர் என்பவர் சோதனைக்காகச் சில வனவிலங்குகளைக் கருவூலத் தோட்டத்தில் வைத்து வளர்த்தார். இது பொது மக்களின் ஆர்வத்தை மிகவும் கவர்ந்தது. 1856-ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் சென்னைக் கருவூலத்தில் 360 விலங்குகளைக் கொண்ட உயிரியல் தோட்டம் இருந்தது. 1863-ல் மாநகராட்சி இந்த உயிரியல் தோட்டத்தை எடுத்துக் கொண்டு, இப்போதுள்ள 'பீப்பிள்ஸ் பார்க்' என்னும் இடத்தில் அதைக் கொண்டு போய் வைத்தது.

உயிரியல் பகுதியில் பணியாற்றுவோரின் 120 ஆண்டுக் கால அயராத உழைப்பினால் இன்றுள்ள நிலைக்கு உயிரியல் மேடை உருவாயிற்று. கடந்த இருபது ஆண்டுகளில் இப்பகுதி நன்கு விரிந்து நிரம்பியுள்ளது. இப்பகுதியிலுள்ள அடுக்குகள் 12 ஆகப் பெருகித், தொல்பொருள் பகுதியின் சிற்ப மேடைகளுக்கு அருகிலுள்ள கீழ்த்தளத்திலும், முதல் தளத்திலும் விரிவடைந்திருக்கின்றது. இப்பகுதியை மெதுவாகச் சுற்றி வந்து பார்த்தால் நல்ல படிப்பினையாகவும், பொழுது போக்காகவும் இருக்கும். இயற்கையின் விந்தைப் பொருள்களைக் காணும் வாய்ப்பும் கிட்டும். நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்கள் பற்றிய அறிவு நம்மை வியப்பில் ஆழ்த்தும்

இங்கேயுள்ள எல்லாப் பொருள்களிலும் புகழ் பெற்றது அறுபது அடி நீளமுள்ள திமிங்கிலத்தின் எலும்புக் கூடே ஆகும். இது மிகவும் விலை மதிப்புள்ளது. இது மண்டபத்தின் மையக் கூரையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. இத்தகைய திமிங்கிலங்கள் வங்கக் கடலிலும், அரபுக் கடலிலுந்தான் காணப்படுகின்றன. இதற்குத் துடைப்பம் போன்ற பகுதிகள் அதன் வாயின் இரு பக்கங்களிலும் இருக்கின்றன. இவற்றின் உதவியால் அது சிறிய மீன்கள், நண்டுகள் நத்தைகள் போன்ற சிறிய உயிர் இனங்களை உணவாக உட்கொண்டு, பெரியவற்றை வடிகட்டி வெளியேற்றி விடுகின்றது. இத்தகைய திமிங்கிலங்கள் 150 அடிநீளம் வரை வளர்கின்றன. உயிர்வாழும் விலங்கினங்களில் பெரியது இதுவே யாகும்.

இதே மேடையில் மற்றொரு மூலையில் பற்களையுடைய ஒரு திமிங்கிலத்தின் தலை எலும்பு வைக்கப்பட் டிருக்கின்றது. அதன் தலை மிகப் பெரியது. அது அதன் உடலில் மூன்றில் ஒரு பங்கு நீளம் உடையது. அதனுள் திரவமான கொழுப்பு மிகுதியாக இருக்கும் ; இந்தக் கொழுப்பு மிகவும் விலை மதிப்புடையது. மேலும் இந்திய யானையின் எலும்புக் கூடும் மிக நுட்பமாகஇணைக்கப்பட்டுநிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. குதிரையின் எலும்புக்கூடும், மனித எலும்புக்கூடும் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு, அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகள் பார்ப்பவர்க்குப் புலனாகுமாறு செய்யப் பட்டிருக்கின்றது. இன்னும் பற்களுடைய மண்டை யோடுகள், கண்ணாடிக் கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. புல், தழைகளை, உண்ணும் விலங்குகள், ஊன் தின்னும் விலங்குகள், மீனினங்கள் ஆகியவற்றின் வடிவங்களின் அமைப்பை இவை விளக்குகின்றன.

எலும்புக் கூட்டுப் பகுதியை அடுத்து, முதுகெலும்புடைய விலங்குகளின் பாய்ச்சல் நிலையை விளக்கும் பல பொருள்களைக் காணலாம். பறக்கும் நிலையைப் பறவைகளே அடைந்துள்ளன என்றாலும், பிற உயிரினங்களும் ஓரளவு பாய்ந்து செல்லும் தன்மையுடையனவே. முதுகெலும்புடைய மீன்கள், தவளைகள், அணில்கள், பாம்புகள் பறக்காவிடினும் பறப்பதற்கு இணையாகப் பாயும் வலிமை கொண்டவை. கடல் நீரின் மேல், வான வெளியில் பாய்ந்து இயங்கும் மீன் வகைகள் இம் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன. இம்மீன்களின் மார்பு, இடுப்பு எலும்புகள் விரிந்து வானில் பாய்ந்து செல்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.

சில சமயங்களில் மிகவும் உயரமாகப் பறந்து அவை கப்பல்களின் மேல் தளத்தில் சென்று விழுந்து விடுகின்றன. இது போன்றே பறக்கும் தவளை, பல்லி, வௌவால் ஆகியவைகளின் எலும்பு உருவங்கள், பறக்கும் நிலையில் பொருத்தி வைக்கப்பட்டுள்ளன. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற வெள்ளை நிறக் கழுகின் உடல், அதன் சிறகுகள் விரித்த நிலையில் இம்மேடையில் வைக்கப்பட்டுள்ளன. இன்னும் சிறு சிறு பிராணிகளின் வண்ண வேறுபாடு, பால் வேறுபாடு, சுற்றுப்புற வேறுபாடு ஆகியவை விளங்குமாறு அவற்றின் உடல்கள் பொருத்தப் பட்டுள்ளன.

பிற நாடுகளிலிருந்தும் பல பொருள்கள் இக்காட்சிப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மனிதக் குரங்கு (ஒராங் குட்டான்), கங்காரு, மலேயாத் தபீர், பெரிய வாத்து, மரங் கொத்திப் பறவை, நெருப்புக் கோழி அதன் முட்டை, வெளி நாட்டுக் கடல்களிலுள்ள சிப்பிகள் ஆகியவை குறிப்பிடத் தக்கவை.

இப்பகுதியின் பின் மேடையில் கூர்ந்து பார்க்கும் மனிதக் குரங்கு பார்வையாளர்களை வரவேற்கின்றது. இக்குரங்கு போர்னியோ, சுமத்திராவின் அடர்ந்த காடுகளில் வாழ்கின்றது. அதன் நீண்ட கைகள் மரத்துக்கு மரம் எளிதில் தாவ ஏதுவாக உள்ளது. ஆஸ்திரேலியக் கங்காரு தாவரப் பட்சிணியாகும்; பெண் கங்காருவின் வயிற்றில் ஒரு பை இருக்கின்றது. அந்தப் பையில் தனது இளம் குட்டியை அது வைத்து வளர்க்கின்றது; அதன் முன் கைகள் உண்பதற்கும், ஊட்டுவதற்குமே பயன்படுகின்றன. பின் கால்களால் விரைவாகத் தாவி ஓடிச் செல்கின்றது. வாத்துப் போன்ற வாயுடைய பிராணியும், எலும்பு உண்ணும் பிராணியும் பழங் காலத்தைச் சேர்ந்த பாலூட்டிகளாகும் ஆனால், அவை குட்டி போடுவதில்லை. முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பவை. நெருப்புக் கோழி மிகப் பெரிய பறவை; ஆனாலும் பறக்க முடியாது. காசோரி என்ற பெரிய பறவை ஆஸ்திரேலியாவில் வாழ்கின்றது. நெருப்புக் கோழி ஆப்பிரிக்கப் பறவை. உலகத்தில் மிகப் பெரிய பறவையும் இதுவே. மிகவும் விரைவாக ஓடும் பறவையும் இதுவே. இதன் முட்டையும் ஏனைய எல்லா முட்டைகளையும் விட மிகப் பெரியது.

ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் அடங்கிய மேடையில் எல்லாரையும் கவர்வது தோல் ஆமைதான். இதன் மேல் தோடு மென்மையாகத் தோல் போன்றிருக்கின்றது. தோட்டின் மீது பொதுவாகக் காணப்படும் செதில்கள் இதில் இல்லை. இது 8 முதல் பத்து அடி நீளம் வரை வளர்கின்றது. இந்திய நாட்டின் ஊர்ந்து செல்லும் உயிர் இனத்தில் பல்வேறு அளவில் முதலைகள் உள்ளன. எட்டடி முதல் பத்தடி வரை நீளமுள்ள முதலைகள் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டுள்ளன. இரண்டு நவீனக் கண்ணாடிப் பெட்டிகளில் தென்னிந்தியப் பாம்பு வகைகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் நிறங்கள், கொஞ்சமும் மாறா வகையில் கண்ணாடிப் பேழைகளில் அடைக்கப் பட்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட கிலுக்குப் பாம்பு ஒன்றும் கண்ணாடிக் குவளையில் வைக்கப்பட்டிருக்கின்றது. அதன் வால் நுனியில் ஓசையெழுப்பும் கிலுகிலுப்பை இருக்கிறது. அதிலிருந்து எழும் ஓசை வறட்சிக் காலத்தில் பெரிதாகவும் குளிர் காலத்தில் மெல்லியதாகவும் இருக்கும். இதன் உதவியால் அது தன் பகைப் பிராணிகளைத் துரத்திவிடுகின்றது. சில சமயங்களில் அதன் ஓசை செவிடுபடும் படியாக இருக்கும். மற்றும் ஊர்வன வைக்கப்பட்டுள்ள மேடையின் மேற்குப் புறத்தில் தவளைகளும், தேரைகளும் காணப்படுகின்றன. பெரிய தவளை ஒன்று பாம்பை விழுங்கும் நிலையில் கண்ணாடிக் குவளையில் அமைக்கப் பட்டிருக்கின்றது. பாம்பு போன்ற உருவமுடைய கண்ணில்லாப் புழுக்களும் இங்கு இடம் பெற்றுள்ளன. அவை பாம்பைப் போல் உருவம் கொண்டிருந்தாலும் தவளை, தேரை இனத்தைச் சேர்ந்தவையே.

பல பறவைகள், இரு கண்ணாடி அடுக்குகளில் அடைந்து கிடக்கின்றன. அவற்றுள் ஒரு கண்ணாடி அடுக்கு அண்மையில் புதுமையாக்கப்பட்டுள்ளது. அதனுள் பறவைகள் வகைப்படுத்தப்பட்டு நிறுத்தப் பட்டுள்ளன. பச்சைநிறப் பின்னணியில், ஒளி பொருந்திய கண்ணாடிப் பேழைகளில் அவை வைக்கப்பட்டுள்ளன. சில பறவைகள் அவைகளின் இயற்கைச் சூழ்நிலையில் பெட்டிகளில் இருக்கின்றன. தோகையை விரித்தாடும் மயில், மணல் கூட்டில் அடைகாக்கும் நாரை, மர உச்சியில் குஞ்சு

> காலம் முறைகளை மாற்றுமே தவிர மனப் போக்கையும் உணர்ச்சியையும் மாற்றி விடாது.
>
> —பேரறிஞர் அண்ணா

களைக் காத்து நிற்கும் கொக்கு, கடற்கரையில் உலாவரும் கடற்பறவை, காட்டுப் புதரிடையே மறைந்து திரியும் காட்டுக் கோழி, உயர்ந்த மலைப் பொந்தின் வெளியே தலையை நீட்டிக் கொண்டிருக்கும் ஆந்தை, கூடுகளைப் பின்னிக் கட்டும் தூக்கணாங் குருவி, வெள்ளை மயில், இயற்கைச் சூழ்நிலையில் நிற்கும் பெரிய கொக்கு, பெரிய மரங் கொத்தி முதலியன பார்வையாளர்களை மிகவும் கவர்வனவாகும். பலவிதமான முட்டைகளும் இங்குச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அவை பல வண்ணங்களில் உள்ளன. சாய்ந்த பெட்டியினுள் அவை இருக்கின்றன. அன்றியும் ஒவ்வொரு பறவையின் அருகில் அதன் முட்டையும் வைக்கப்பட்டுள்ளது.

பாலூட்டி வளர்க்கும் உயிரினங்கள் தனியே இருக்கின்றன. ஆப்பிரிக்கச் சிங்கம், தனியாக ஒரு பேழையில் அடைப்பட்டுக் கிடக்கின்றது. சிறுத்தை உயிருடனிருப்பது போல் அமர்ந்திருக்கின்றது. காட்டுப் பன்றி எழுந்து நிற்கின்றது. மான்களும், குட்டிகளும் மிரண்டு பார்க்கின்றன. கருங்குரங்கு, வாலில்லாக் குரங்கு, நீர் நாய், நீர்ச் சிங்கம், பறக்கும் அணில்கள், காட்டு அணில், முள்ளம் பன்றி, காட்டு வௌவால் ஆகியவையும் உயிருடையவை போல் காட்சி தருகின்றன. பாலூட்டி வளர்க்கும் பிராணிகளில் வௌவால் மட்டுமே நெடுந்தூரம் பறக்கக் கூடியது. பறக்கும் அணில் என்ற பெயருடன் மரத்தின் மீது ஏறுவது போல் தெரிகிறதே, அந்தப் பிராணிதன் கால்களின் இடையேயுள்ள அகன்ற தோல் முறத்தால் தாவிச் செல்லுமே தவிரப் பறக்காது.

இனி மீன் அறைக்கு வருவோம். இது முதல் தளத்தில் இருக்கின்றது. இங்குப் பல வகையான மீன்கள் உள்ளன. என்றாலும் மேல் முகட்டிலிருந்து தொங்கும் திமிங்கிலமே மக்களைப் பெரிதும் கவர்கின்றது. இதுவே மீனினத்தில் மிகப் பெரியது. ஐம்பது அடி நீளம் கூட இருக்கும்

ஆனால், இங்கு வைக்கப்பட்டிருப்பது 21 அடி நீளம் கொண்டதே; 1889-ஆம் ஆண்டில் சென்னையில் இது பிடிக்கப்பட்டது. கடலில் வாழும் ஒரு வகை உயிரினத்தையே இது உணவாகக் கொள்கின்றது. அந்த உணவைத் தேடி இது அலைந்து வாழ்கின்றது. பெரிய சுரு மீன், சுவரில் தொங்கும் மீன் வகைகள், வான் மீன், அதனுடைய எலும்புக்கூடு, பாம்பு மீன், உணவு மீன் முதலானவை பார்க்கத் தக்கவை. முதுகெலும்பு இல்லாத உயிரிணங்களில் பவழப்புழு, மரப் பவழப்புழு, கூடைப் புழு, குவளைப் புழு, ஜெல்லி மீன், முத்துச் சிப்பி ஆகியவை கடலுக்கடியில் காணப்படுவது போல் வைக்கப்பட்டுள்ளன. முத்துச் சிப்பியிலிருந்து முத்து எவ்வாறு தோன்றி வளர்கின்றது என்பதை விளக்கும் காட்சி, கூடை போன்ற பல வண்ணச் சிப்பிகள், சங்குகள், அரிதாகக் கிடைக்கும் வலம்புரிச் சங்கு, பல நிறங்களில் நண்டுகள், அந்தமான் தீவுகளிலுள்ள தேங்காய் நண்டு; கொடுவாள் போன்ற கையுடைய அசுர நண்டுகள், நட்சத்திர மீன்கள், கடல் தாமரைகள், கடற் புழுக்கள், யாவும் அறிவிற்கும் கண்ணுக்கும் விருந்தாகும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளன.

அடுக்குப் பரண்களில் வைக்கப்பட்டுள்ள உயிரினங்கள் தவிர, மேலும் திரட்டப்பட்ட உயிரினங்களும் தனியாக, இப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளன. காட்சிக்காக வைக்கப்பட்ட பொருள்கள் கெட்டுப் போனால் அவற்றிற்குப் பதிலாக இவை வைக்கப்படுகின்றன. அதோடு உயிரினங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்த வல்லுநர்களுக்கும், மாணவர்களுக்கும் போதிய வசதியளிக்கப்படுகின்றது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பணியாற்றும் உதவியாளர்களுக்கு இங்கே பயிற்சியளிக்கப்படுகின்றது. கோடைப் பயிற்சியின் போது விரிவுரைகளும் செய்முறை வகுப்புகளும் இங்கு நிகழ்கின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களுக்கும் வேண்டும் போதும் இத்தகைய வகுப்புகள் நடைபெறுகின்றன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நடைபெறும் பொருட்காட்சிகளில், உயிரினப் பகுதியில் பொருள்களை வகைப்படுத்துதலிலும் உதவியளிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பொருட்காட்சி கருவூலத்தில், விளக்கவுரையும் அவ்வப் போது தரப்படுகின்றது. இப்பகுதியின் பாதுகாப்பாளர், சிறப்பு ஆராய்ச்சியும் மேற்கொள்கின்றார். இவையாவும் உயிரியல் பிரிவின் கல்விப் பணியாகும்.

ஜி. கேசவராம்,
(உயிரியல் பகுதிக் காப்பாளர்)

* * *


# கவனிக்க!



## அரசாங்கத் துறையினர்கள்

ஜீப் உறைகள், வேன் உறைகள், தார்பாலின்கள், ஜீப் & லாரி குஷன்கள், "யூ" ஃபோம் அடைக்கப்பட்ட தரமான சிறந்த ஃபோம்டெக்ஸ் ரெக்ஸின் கொண்டு தயாரிக்கப்பட்ட கார் குஷன் உறைகள் போன்றவை அநேக டிசையின்களில் குறைந்த விலையில் கிடைக்கும்.



எல்லா விதமான சீட் உறை போடும் வேலைகளும் கவனிக்கப்படும். அல்லது லேபர் காண்ட்ராக்ட் அடிப்படையிலும் செய்யப்படும்.

சிறுதொழில் நிறுவனத்தில் எண் M.S.(S) SFI/24/231—1/0361 Rr·ன் கீழ் தேதி 7—1—1972 படி நாங்கள் பதிவு செய்துள்ளோம்.

வர்த்தக விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

இந்கோஸ்

19-C/8, உட்ஸ் ரோடு, மவுண்ட் ரோடு,
சென்னை-2. போன்: 812318

RAE

# கேளுங்கள் கொடுக்கப்படும்

**வினா:**—அண்மையில் பெய்த பெருமழையினுல் எங்கள் தாளடி நெல் பாழாகிப் பெரும் நட்டம் ஏற்பட்டு விட்டது. உடன் எந்த ரகத்தைப் பயிரிடலாம்? தண்ணீர் இறைக்க வசதி உள்ளது. குறு கிய கால வயதுடைய ரகமாகக் கூறுங்கள். இதற்குரிய பதிலை அடுத்து வரும் ஜனவரி 1, 1973 'தமிழரசு' இதழிலேயே விளக்க வும். (இதுபோன்ற கேள்வியைப் பலர் கேட்டுள்ளனர்).

—வி. கண்ணன்,
மகாமகம் குளத் தெரு,
கும்பகோணம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை:**—பெரும் மழையின் கார ணமாகத் தங்கள் தாளடி நெல் பாழாகி விட்டதென்று குறிப்பிட் டுள்ளீர்கள். நீங்கள் உடனடியாக 'அன்ன பூர்ணு'(கல்ச்சர்-28)என்ற ரகத்தைப் பயிரிட்டுப் பயனடை யலாம். இதன் வயது 95 நாட் களே. இதற்குக் குறைந்த வய துடைய உயர் விளைச்சல் ரகங் கள், தற்பொழுது கிடைக்காது. தங்களுக்குத் தண்ணீர் வசதி இருக்கிறது என்று குறிப்பிட்டுள் ளதால், மார்கழி மாதம் வரை இந்த ரகத்தைப் பயிரிடலாம். இதை நாற்றுவிட்டும் நடவு செய்யலாம் அல்லது நேரடியாக வும் விதைக்கலாம். தண்ணீர் வசதி உள்ளோர் அனைவரும் இதே பரிந்துரையைப் பின்பற்றலாம். ஒரு ஏக்கருக்கு 35 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இட வும்.

ஒரு ஏக்கரில் விதைப்பதற்கு 32 கிலோ விதை தேவை. விதைத்த 10 நாட்கள் வரை, சேறு காயாமல் தேவையான போது தண்ணீர் விட்டு (தொழி நாற்றங்காலைப்போல்) வடித்து விடவேண்டும். விதைத்த 20-வது நாள், 40-வது நாள் ஆக இரு முறை மேலுரம் இட வேண்டும். ஒவ்வொரு முறை யும் ஏக்கருக்கு 27 கிலோ யூரியா வை மேலுரமாக இடவேண்டும்.

அன்னபூர்ணுவின் அரிசி சிவப் பாக இருக்கும். இவ்வகை அரி சியைக் கேரள மாநிலத்தினரும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்ட மக்களும் விரும்பி வாங்குகின்றுர்கள். எனவே, இந்த ரகத்தை நீங்கள் துணிந்து பயிரிடலாம். இந்த ரகத்தைத் தஞ்சை மாவட்டத்தில் பெரும் பரப்பில் சாகுபடி செய்ய, வேளாண்மைத் துறையினர் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள் ளதால், இதுபற்றி உங்கள் ஊராட்சிஒன்றியத்துணைவேளாண் மை அலுவலரையோ அல்லது கிராமச் சேவகரையோ அடிக்கடி கலந்து ஆலோசனை பெற்று அவர் கள் கூறும் சாகுபடி முறைகளைத் தவருமல் செய்து ஏக்கருக்கு 45 கலம் நெல் மகசூல் பெற லாம்.

**வினா:**—மாசிப் பட்டத்திற்கு ஏற்ற சிறந்த பருத்தி ரகம் எது?

—ஆர். தியாகராசன்,
திருப்பூர் (அஞ்சல்),
கோவை மாவட்டம்.

**விடை:**—மாசிப் பட்டத்திற்கு ஏற்ற சிறந்த பருத்தி ரகமாக எம். சி. யு. 4 விளங்குகிறது. இது ஏக்கருக்கு 8 முதல் 10குவிண் டால் பருத்தி மகசூல் கொடுக் கிறது. இந்த ரகத்தைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடியுமாதலின், விற்பனைக் கூடங்களில் இந்த ரகம் நல்ல விலைக்குப் போகிறது. எனவே மாசிப்பட்டத்தில் எம். சி. யு. 4 ரகப் பருத்தியைப் பயிரிடுவதே சிறந்தது.

**வினா:**—பிப்ரவரி-மார்ச்சு மாதத் தில் இறைவையில் எச்.பி. 3 கம்பு பயிரிடலாமா? ஏக்கருக்கு எவ் வளவு விதையை நிலத்தில் நாற்று விட வேண்டும்?

—மு. அருணுசலம்,
பெரம்பலூர்,
திருச்சி மாவட்டம்.

**விடை:**—பிப்ரவரி-மார்ச்சு மாதங் களில் எச்.பி. 3 கம்பு ரகத்தை இறைவையில் பயிரிடலாம். ஒரு ஏக்கர் எச்.பி. 3 கம்பு பயிரிட 1 கிலோ விதையை, 3 சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும்.

**வினா:**—எங்கள் கிராமத்தில் ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய நெற் பயிர்களுக்குச் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் கொள்ளைநோய் தாக்கியுள்ளது. நாங்கள் சின்ன மனூர் துணை வேளாண்மை அலு வலர் அவர்களின் ஆலோசனைப் படி மூன்றுதடவை'பாரத்தியான்-டைத்தேன், டெம்க்ரான் டைத் தேன், பாரத்தியான்-டைத்தேன் மருந்து அடித்தும் இந்தக் கொள்ளைநோய் தாக்கியுள்ளது. ஆகையால் எங்கள் கிராமத்தில் இந்த நோய் வராமல் தடுக்க என்ன மருந்து அடிக்கவேண்டும்?

—இராமநாதன்,
அமைப்பாளர்,
உழவர் ஆய்வு மன்றம்,
சின்னமனூர்,
மதுரை மாவட்டம்.

**விடை:**—'கொள்ளை நோய்' (Blast) என்பது ஒரு வகைப் பூஞ்சாளத்தால் ஏற்படுகிறது. இந்நோயைத் தடுப்பதற்குக்குறிப் பிட்ட காலத்தில், குறிப்பிட்ட அளவில், குறிப்பிட்ட மருந் தினைத் தெளிப்பதே சிறந்தது. தங்கள் துணை வேளாண்மை அலுவலர் பொதுவாகப் பூச்சி களும், நோய்களும் வராமல் தடுப்பதற்கான முன் தடுப் பாகவே, பூச்சி மருந்துகளையும், பூஞ்சாள மருந்துகளையும் கலந்து (தாங்கள் கூறியுள்ளபடி) 3 முறை தெளிக்கச் சொல்லியிருப்பார். அப்படித் தெளித்தும் கொள்ளை நோய் வந்து தாக்கியுள்ளதென் ருல், பாரத்தியான், டெமக்ரான் போன்ற பூச்சி மருந்துகளையும், டைத்தேனையும் கலந்து தெளிப்ப தால் பயன்படாது. கொள்ளை நோயைக் கட்டுப்படுத்த, பின் கண்ட அளவில் பூஞ்சாள மருந்து களைத் தெளிப்பதே மிகவும் சிறந்தது.

'ஹைனோசான்' (Hinosan) மருந்தில் ஏக்கருக்கு 300 மில்லி லிட்டர் அல்லது டைத்தேன் மருந்தில் 400 கிராம் எடுத்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளித்தால் கொள்ளை நோயைக் கட்டுப் படுத்தலாம். செரசான்—சுண் ணும்புக் கலவைத் தூளை ஏக்க ருக்கு 6 முதல் 10 கிலோவரை தூவியும் கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தலாம். குமான் அல்லது சீராம் என்ற மருந்தில் 200 கிராம் வீதம் எடுத்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தும் கொள்ளை நோயைக் கட்டுப்படுத்தலாம்.

கொள்ளை நோய் தங்கள் கிராமத்தில் தொடர்ந்து தோன்றிவருவதால், இதைத் தடுக்க நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக ஒரு தடவையும், நடவு செய்த பிறகு 15 முதலில் 20 நாட்களுக்குள் இரண்டாம் தடவையும் தொண்டைக் கதிர் தருணத்தில் மூன்றும் தடவையும் ஆக 3 முறை தவறாமல் மேற்கூறிய மருந்துகளில் ஒன்றைத் தெளிக்க வேண்டும். பூச்சி மருந்துகளுடன் பூஞ்சாள மருந்தைக் கலந்து தெளித்தாலும் மேலே குறிப்பிட்டுள்ள மருந்துகளின் அளவு குறையாமல், பரிந்துரைக்கப்பட்ட அளவிலேயே தெளிக்க வேண்டும்.

கொள்ளைநோயை ஏற்படுத்தும் பூஞ்சாளம் 'புல்' பூண்டுகளிலும் வாழுமாதலின் வரப்புகளில் உள்ள புல் பூண்டுகளிலும் மருந்து தெளித்தல் வேண்டும். மணிச்சத்து, சாம்பல் சத்து போடாமலோ அல்லது குறைவாகவோ போட்டு தழைச்சத்தை மட்டும் குறிப்பிட்ட அளவிலோ அல்லது அதிகமாகவோ இட்டால் கொள்ளை நோய் பரவுவதற்கு ஏதுவாகும். எனவே, வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் அளவில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளை இடவேண்டும். கொள்ளை நோய் தாக்கிய நெற்பயிர்களிலிருந்து கிடைத்த தானியங்களை விதைக்காகப் பயன்படுத்தக் கூடாது. அவ்விதைகளையே பயன்படுத்துவதெனில் வெந்நீர் சிகிச்சை செய்து பின்பு, முளைக்கச் செய்வதே சிறந்தது. வெந்நீர்ச் சிகிச்சை சிரமமான செயலாதலின் வேளாண்மைத் துறையிலிருந்து புதிதாக விதைகளை வாங்கி நாற்று விடுவதே சிறந்தது.

**வினா**—மேச்சேரி, கீழக்கரிசல் போன்ற மிகுபயன் (வீரிய) ஆடுகள் வளர்க்க விரும்புகின்றோம். அவை எங்குக் கிடைக்கும்? பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது? 'கோ—1' பப்பாளி விதை எங்குக் கிடைக்கும்?

ப. இரேணுகாதேவி,
12, விநாயகர் பாளையம்
தரங்கம்பாடி, தஞ்சாவூர்
மாவட்டம்.

**விடை**—'மேச்சேரி' இன ஆடுகளை, சின்னச்சேலம், ஓசூர், ஆகிய இடங்களில் உள்ள ஆட்டுப் பண்ணைகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். 'கீழக்கரிசல்' இன ஆடுகளைச் செட்டிநாடு, ஆட்டுப் பண்ணையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். உயர்ந்த இன ஆட்டுக் கடாக்களைக் கொண்டு சாதாரண இன ஆடுகளின் தரத்தை உயர்த்துவதற்காகக் கால்நடைப் பராமரிப்புத் துறை ஆட்டுக்கடாக்களை மட்டுமே விற்பனை செய்கின்றன. உங்களுக்குத் தேவையான ஆட்டுக் கடாக்களைப் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் கால்நடை விரிவாக்க அலுவலர் அவர்களையோ அல்லது ஆணையாளரையோ அணுகி, விவரம் கேளுங்கள்.

'கோ-1' பப்பாளி விதை பெறக் கீழ்க்கண்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

பேராசிரியர்,
தோட்டக்கலைப் பிரிவு,
தமிழ்நாடு வேளாண்மைக்
கழகம், கோயம்புத்தூர்—3.

**வினா**.—எனக்குத் தொல் பொருள் ஆராய்ச்சிகளில் மிகுந்த ஆர்வம் உள்ளது. அதை முறைப்படிக் கற்க யாரிடம் தொடர்பு கொள்ள வேண்டும்?

ஆர். இளங்கோவன்,
45, பெருமாள் கோயில்
தெரு, கள்ளக்குறிச்சி,
தென்னார்க்காடு மாவட்டம்.

**விடை**—தொல் பொருள் ஆராய்ச்சியில் குறுகிய காலப் பயிற்சி தமிழ்நாடு அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையால் நடத்தப்பெறுகிறது. அப்பயிற்சியில் தாங்களும் பங்கு பெறுதல்நல்லது. தொல்பொருள் ஆராய்ச்சியில் பயிற்சி பெறப் பின்கண்டுள்ள முகவரிக்கு எழுதி விவரம் தெரிந்து கொள்ளலாம்.




திரு நாகசாமி,
இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத்துறை
3/4, தெற்கு கரைச்சாலை,
மந்தைவெளி, சென்னை—28.

**வினா**.—துணி வெளுக்கச் சோப்பு இங்கே' என்ற கட்டுரையில் பல விளக்கங்களைத்தெரிந்து கொண்டேன். ஆனாலும் மூலப் பொருள்கள், சோப்பு அறுக்கும் மெசின், முத்திரையிடும் மெசின் ஆகியவைகளை வாங்குவதற்குரிய முகவரிகளைக் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். 'தமிழரசு' சேவை என் போன்றவர்களுக்கு அதிகம் தேவையாதலின் கீழ்க் கண்டுள்ள கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள்.

(1) சோப்பு அறுக்க மிசின் எங்கு வாங்கலாம்?

(2) சோப்பின் மேல் முத்திரை போடும் மெசினை எங்கு வாங்கலாம்.?

(2) சோப்புக்குத் தேவையான மூலப்பொருள்களை எங்கு வாங்கலாம்? முகவரி தெரிவிக்கவும்.

—அ. நாகூர் பிச்சை,
சைல்ஸ் சோப் ஒர்க்ஸ்
மதுக்கூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**விடை**—சோப்பு அறுக்கும் இயந்திரத்தைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ், கிண்டி, சென்னை 32-ல் செயல்படும் தச்சுக் கருமாரத் தொழிற் கூடத்தில் வாங்கலாம்.

சோப்பின் மேல் முத்திரை போடும் இயந்திரத்தைப் பின் கண்ட முகவரியில் வாங்கலாம்.

''பிரெஸ்டு மெட்டல்
புராடெக்ட்ஸ்''
1/143, வால்டாக்ஸ் ரோடு,
சென்னை.

சோப்பு செய்வதற்குத் தேவையான மூலப் பொருள்களைக் கீழ்க்கண்டுள்ள முகவரிகளில் பெறலாம்:—

எண்ணெய்—உங்கள் ஊரிலேயே கிடைக்கும்.

சிலிகேட்—மரகதம் சிலிகேட் இண்டஸ்ட்ரீஸ், சென்னை-21.

காஸ்டிக் சோடா — மேட்டூர் கெமிக்கல்ஸ், மேட்டூர்.

ரோசின்—மண்டல விற்பனை நிலையம், ஈரோடு.

விறகு—உங்கள் ஊரிலேயே கிடைக்கும்.

சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் சிறுநீரகப் பிரிவு, திறக்கப்பட்டுள்ளது. மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இதனைத் திறந்து வைத்துள்ளார்.

சிறுநீரக, கருவக நோய்ப் பிரிவில் செவ்வாய் வியாழன் ஆகிய இரண்டு நாட்களிலும் நோயாளிகளைச்சோதித்துச்சேர்த் துக் கொள்கிறுர்கள். சிகிச்சை யளித்த பிறகு ஓராண்டுக்கும் மேலாக அவர்களது உடல் நல முன்னேற்றத்தைக் கவனித்து வருகின்றனர்.

சிறுநீரகம், கருவகம் ஆகிய வற்றில் ஏற்படும் உருக்கி நோய், மலட்டுத் தன்மை, சிறுவர்களுக்கும், பெரியோருக் கும் சிறுநீர்ப் பாதையில் ஏற் படும் தடை போன்ற பல்வேறு நோய்களை எளிய அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்து கின்றனர்.

இச் சிறுநீரகப் பிரிவின் முதல்வராகப் பணியாற்றும் டாக்டர் டி. ஜகதீசன், எம்.பி. பி.எஸ்., எம்.சி.எச்., ஆஸ்தி ரேலியாவுக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெற்றவர். கொழும் புத் திட்டத்தின்கீழ் சிறப்புப் பட்டம் பெற்றவர். பிரிட்டிஷ் சிறுநீரக மருத்துவர் கழகத்தின் உறுப்பினராகவும் இருக்கிறுர். அவரது குழுவில் டாக்டர்கள் ஏ. எம். சத்தியநாராயணு, என். ராமமூர்த்தி, ஆர். என். சுஜீர், ஏ. ஜெயமணி, சம்பந்தம் ஆகியோர் பணியாற்றுகின்ற னர்.

1971–72ஆம் ஆண்டில் 1,100 நோயாளிகளுக்குச் சிகிச்சை யளிக்கப்பட்டது. அதில் 800 பேருக்கு அறுவைச் சிகிச்சையளிக் கப்பட்டது.

சிறுநீர்ப்பையின் தொடக்கத் தில் அதனைச் சுற்றியுள்ள ஒரு சுரப்பி பெரிதாகி விடுவதால் பலர் தொல்லைக்கு ஆளாகின்ற னர். பொறுப்பும் புகழும் வளமை கொண்டு வாழ வேண் டிய 40 வயது முதல் 50 வயது வரை உள்ள கால கட்டத்தில் இந் நோய் வருகிறது.

சிறுநீர்ப்பையில் கல் வளர்வது சரியான சத்துணவு பெற முடி யாத ஏழைகளுக்குத் தான் அதிகம் என்று டாக்டர் ஜகதீசன் கருதுகிறுர். அவரது கருத்துக்கள் இங்கே கட்டுரை யாக ஆக்கம் பெற்றிருக்கிறது.

சிறுநீரக அமைப்பும் ( Urological System) நல்லின்ப நல்வாழ்வுக்கு நலம் சேர்க்கும் உடற்கூறுகளில் ஒன்றுகும். உட லின் வேறு சில முக்கிய உறுப்புக் களைப் போலவே இதுவும் இன்றி யமையாதது. சிறுநீரகத் தாலோ ஏற்படலாம். வீக்கம் ஏற்பட்டு அதைத் தொடக்கத்தி லேயே கண்டுபிடித்துக் குணப் படுத்தாவிட்டால் மரணம் நேர லாம்.

சிறுநீரக நோய் பற்றி அதிக அக்கறை காட்டப்படுகிறது. ஏனென்றுல் வாழ்வின் வசந்தத் தில் இருப்போர்க்குச் சிறுநீர்ப் பையிலிருந்து சிறுநீர்ப் பாதை ( Tract ) தொடங்கும் பகுதி யில் வளையம் போன்று சுற்றி



# சிறுநீரகத்துக்கும் ஒரு சிறப்புப் பிரிவு

தொடரில் ஏதாவது ஒரு பகுதி யில் கோளாறு ஏற்பட்டால் இரண்டு சிறுநீரகங்களுமே ( Kidneys ) பாதிக்கப்படலாம். அக் கோளாறு முற்றி விட்டால் உயிருக்கே ஆபத்து. சிறுநீர்ப் போக்கு வழியிலிருந்து திடீரென வலியுடனே வலி இல்லாமலோ இரத்தம் வடியத் தொடங்கி நோயாளியை அச்சுறுத்தும். இந்த இரத்தக் கசிவு சிறுநீர்ப் பையில் கல் உருவாகி விடுவ தாலோ, வீக்கம் ஏற்படுவ

யிருக்கும் சுரப்பி பெரிதாகி அவர்கள் அல்லற்படும் நிலை அதிகமாக இருக்கிறது. இப் படிப்பட்டவர்களுக்கு இரவில் படுக்கையிலேயே சிறுநீர் கழிந்து விடுவது உண்டு. இந்த அறி குறி ஏற்பட்டால் உடனே கவ னிக்க வேண்டும். மேலும் சில அடையாளங்கள் ஏற்படும் வரை காலங்கடத்தக் கூடாது. பெண்களுக்கும் அதேபோல எரிச்சலுடன் அடிக்கடி சிறுநீர் கழிவதும் உண்டு. சிறுநீர்ப்

பாதையைச் சுற்றியுள்ள சுரப்பியில் ஏற்படுகிற நோயினால் இது உண்டாகிறது. சிறுநீர்ப் பாதை சுருங்கி விடுவதால் தொல்லை ஏற்படுவதுண்டு.

நான்கு அல்லது ஐந்து வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் படுக்கையில் சிறுநீர் கழித்தால் அதைக் கவனிக்காமல் விட்டு விடக் கூடாது. சிறுநீர்ப் பாதையில் அல்லது சிறுநீர்ப் பையின் கீழ்வாயில் ஏதாவது தடுப்பு ஏற்பட்டிருக்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும்.

களையும் நாம் பெற்றுக் கொண்டாலும், கருவக-சிறுநீரகத் தொடரில் உருக்கி நோய் வருவது வழக்கம். இந் நோய்வந்ததும் அவசரப்பட்டு அறுவை மூலம் அப்பகுதியை நீக்கி விடும் முயற்சியை மேற் கொண்டு விடக்கூடாது. ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுக் காலச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்தலாம் அல்லது மிகச் சிறிய அறுவை மூலம் குணப்படுத்தலாம்.

சிறுநீர்ப் பையில் கல் உரு

என்னென்ன இயற் பொருட்கள் கலந்துள்ளன என்பதைக் கண்டறிந்தால் அது மீண்டும் ஏற்படாமல் தடுக்கலாம்.

மக்கள் தொகை பெருகி வரும் இக்காலத்தில் கூடப் பிள்ளைப் பேறு இல்லையே என்று ஏங்குகிற நிலையும் சிலருக்கு ஏற்படுகிறது. பிள்ளைப் பேறின்மை மனிதன் தோன்றிய காலந் தொட்டு இருந்து வருகிறது. ஆகவே பிள்ளைப் பேற்றுக்காக மந்திரத்தையும் மாயாஜால வித்தைகளையும் நம்பி மக்கள் ஏமாந்து வந்திருக்கின்றனர். பிள்ளைப் பேறில்லாத மலட்டுத் தன்மை பெண்களுக்கு மட்டுமே இருப்பதாக நினைத்துப் பெண்களை மட்டுமே மருத்துவ மனைக்கு அனுப்புகின்றனர். மருந்து சாப்பிட்டு மாற்றம் பெற முயல்கின்றனர். ஆண்கள் தான் அந்நிலையில் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை இன்று கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. பிள்ளைப் பேறின்மைக்குப் பெண் மட்டும் பொறுப்பென்று தட்டிக் கழித்து விடக்கூடாது. பிள்ளைப் பேறு இல்லாத ஆண்களையும் சோதித்துச் சிகிச்சையளிக்கப்படுகிறது. அத்துடன் அறுவை மூலம் கருத்தடை செய்து கொண்ட ஆண்களுக்குக் கருத்தரிக்கும் சக்தியை மீண்டும் பெற்றிடச் செய்ய முடிகிறது.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு, அது இயங்காவிட்டால் நோயாளி மரணமடைய நேரிடும். இப்படிப்பட்ட நோயாளிகளை வேறொரு சிறுநீரகத்தை இணைப்பது மூலம் காப்பாற்ற முடியும். இம்முறை நம் நாட்டில் வெற்றி பெற வேண்டுமானால், பழுதின்றித் தொடர்ந்து இயங்கக்கூடிய செயற்கைச் சிறுநீரகம் (Artificial Kidney) தேவை. அதை இயக்குவதற்கு வெளிநாடுகளில் பயிற்சி பெற்று வந்திருக்கும் மருத்துவர்களின் திறமையைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சிறுநீரகத் தொடர்பு பற்றிய நோய்களின் ஆராய்ச்சியும், சிகிச்சையும் பால் நோய் வல்லுநர்களிடமே (Venerialogist) இருந்து வந்தது. ஆனால் இப்போது அது சிறுநீரக மருத்துவ வல்லுநர்களிடம் பிரித்து ஒப்படைக்கப்பட்டு விட்டது.



**ஸ்டான்லி மருத்துவ மனையின் சிறுநீரகப் பிரிவில்உள்ள ஒரு கருவியை மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பார்வையிடுகிறார்கள்.**

**சிறுநீரகப் பாதையில் தடைகளாக வளரும் தசைப்பகுதியைநீக்கும் கருவி இது. உடலை அறுக்காமலே, சிறுநீர்ப் பாதைவழியாகவே இக் கருவியைச் செலுத்தி தடையாக வளரும் தசைகளை நீக்கமுடியும். விலை உயர்ந்த இக்கருவியைக் கையாளத் திறமைமிக்க மருத்துவர் தேவை. செயற்கைச் சிறுநீர்ப்பையினுள் இக் கருவி இயங்கும் முறையை அமைச்சருக்கு விளக்கிக் காட்டுகிறார் டாக்டர் ஜகநீசன்.**

சிறுநீரகத்தில் கோளாறு ஏற்பட்டுச் சிறுநீர்ப் பாதையில் தடை ஏற்படும்போது சிறுநீரகத்தை நீக்க வேண்டியது வரும். ஆனால் சிறுநீரகமே இல்லாமல் இருப்பதைவிட அதன் பகுதியாவது உடலில் இருப்பது நல்லது. ஆகவே பிளாஸ்டிக் அறுவை மேற்கொள்ளப்படுகிறது. உலகெங்கும் இந்த அறுவை முறை பரவலாகச் செய்யப்படுகிறது.

நல்ல உணவையும், உடல் நலத்தையும் பேணும் உறுதி

வாவது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாக ஏற்படுகிற நோயாகும். கல் உருவாக்கும் தன்மை சில உடல்களில் தனிப்பட இருந்தாலும் நமது மாநிலத்தில் சில மாவட்டங்களில்இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. அதற்கு அம் மாவட்டங்களில் குடிநீரில் உள்ள சில இயற்கைக் குணங்கள் எனக் கருதப்படுகிறது. இது பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி உருவாகும் கல்லை அறுவை மூலம் நீக்கியோ தானாக வெளி வரும்போதோ எடுத்து அதில்

# பயிர்களைக் காப்போம்!
## பசிப்பிணி போக்குவோம்!

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று பைந் தமிழ் மொழியின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன மணிமேகலை கூறுகிறது. உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் அரும்பணியில் தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் மனமுவந்து ஈடுபட்டுள்ளார்கள்.

பெருகிவருகின்ற மக்கள் தொகைக்குத் தேவையான ஊட்டச் சத்துள்ள உணவுப் பொருள்களையும், வளர்ந்து வரும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற குறிக்கோளுடன், தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களுக்குத் தேவையான ஊக்கத்தையும், ஆக்கத்தையும் அளித்து வருகிறது.

நாட்டு மக்களின் நன்மைக்காகவும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் ஓயாது உழைத்து வரும் உழவர் பெருமக்களுக்கு எதிராகப் பூச்சிகளும், நோய்களும், நுண்ணுயிர்களும் (பேக்டீரியா), நுண்ணிய அங்ககக் கிருமிகளும் (வைரஸ்), புல்லுருவிகளும் (பூக்கும் செடிகள்), விலங்கினங்களும் இடையருத தொல்லைகளைக் கொடுத்து வருகின்றன. சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமானல் உழவர் பெருமக்களின் உழைப்பைப் பாழ்படுத்தும் முக்கிய எதிரிகளாகப் பூச்சிகளும், நோய்களும் விளங்குகின்றன.

'' வயல் '' என்னும் போர்க்களத்திலே, '' உற்பத்திப் பெருக்கம் '' என்னும் வெற்றியைக் காண, '' உழவர்கள் '' என்னும் படைவீரர்கள் ஒரு மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்ருல் மிகையல்ல!

ஆம்! பூச்சிகள், நோய்கள் என்னும் பயிர் அழிக்கும் பகைவர்களுடன் போராடி வருகின்ருர்கள்.

ஆனல், இந்தப் போராட்டம்வெற்றி தோல்வி காணமுடியாத நெடுநாளைய போராட்ட மாகவே இருந்து வருகிறது!

பூச்சிகள், நோய்கள் என்ற பகைவர்களால் இந்திய உழவர் பெருமக்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் கொஞ்ச நஞ்சமல்ல! நினைத்தாலே நெஞ்சம் வேதனைக்குள்ளாகிறது!

* இன்றுள்ள நிலையில் ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு தானியங்களைப் பூச்சிகளும், நோய்களும் நட்டப்படுத்துகின்றன.

* மொத்த விளைச்சலில் 10 முதல் 20 சத அளவைப் பூச்சிகளும், நோய்களும் பாழ்படுத்துகின்றன. இவ்வாறு பூச்சிகளாலும், நோய்களாலும் ஏற்படும் சேதத்தை 10 சதம் என்று குறைந்த அளவிலேயே கணக்கிட்டாலும், ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 80 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் நட்டமாகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

* நமது நாட்டில் உள்ள எலிகள் மட்டும் ஆண்டுதோறும் ஏறத்தாழ 2½ இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களைத் தின்பதோடல்லாமல், பயிர்களைச் சேதப் படுத்தி நாசம் செய்கின்றன.

எனவே, பூச்சிகளையும் நோய்களையும் கட்டுப்படுத்தினல் ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவு தானியங்களைச் சேதமடையாமல் காப்பாற்றி, நமது நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அந்த 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள 80 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களைக் கொண்டு சமநிலை உணவுத் திட்டப்படி ஒருவருக்கு ஒரு நாளைக்கு 515 கிராம் உணவு தானியங்கள் என்ற அடிப்படையில் உணவு வழங்கினல், 4,25,53,191 பேர்களுக்கு (வயது வந்தவர்கள்) ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பசிப்பிணி போக்க இயலும். எனவே பல மாநிலங்களில் உணவுப் பற்ருக்குறை நிலவும் இந்நேரத்தில், பூச்சிகள், நோய்களின் தாக்குதலில் இருந்து பயிர்களைப் பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

பூச்சிகளாலும், நோய்களாலும், எலிகளாலும் இத்தகைய மாபெரும் நட்டம் ஏற்படும் என்று எண்ணியே, இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருவள்ளுவர்

'' ஏரினும் நன்ருல் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு '' என்று பயிர்ப் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.



இதிலிருந்து உழுது, பரம்படித்து, நாற்று நட்டு, தண்ணீர்ப் பாய்ச்சி, களையெடுத்து விட்டால் மட்டும் பயிர் விளைந்து விடாது என்பதும், பூச்சிகள், நோய்கள், எலி முதலிய விலங்குகள் ஆகியவைகளின் தாக்குதலால் பாதிக்கப்படாதிருக்கப் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதும் புலனுகின்றன.

நமக்கு சிறு அளவில் தலைவலி வந்தாலும், உடனே மருந்துகளை நாடுகிறோம் ; மருத்துவர்களைத் தேடி ஓடுகின்றோம்! ஆனால், உண்ண உணவையும், உடுக்க உடையையும், இன்னபிறவற்றையும் கொடுக்கும் பயிர்களைப் பூச்சிகளும், நோய்களும் தாக்கினால், நம்மில் பலர் வாளாயிருந்து விடுகின்றோம்.

பூச்சிகளும், நோய்களும் தோன்றி பயிர்களைத் தாக்குவதற்கு முன்பாகவே, தடுப்பு முறையாக ( Prophylactive Measures ) மருந்து தெளிக்குமாறு வேளாண்மைத் துறையினர் கூறி வந்தாலும், பூச்சிகளும், நோய்களும், தோன்றிய பின் மருந்து தெளித்துக் கொள்ளலாம் என்று வாளாயிருந்து விட்டு, பயிர்களைத் தாக்கிய பின்பு அவைகளைப் போக்க முடியாமல் அவதிப்படும் உழவர்கள் பலர் உள்ளனர்.

இத்தகைய உழவர் பெருமக்களும் '' வருமுன் காப்பதே, வந்தபின் காப்பதிலும் மேல் '' (Prevention is better than cure) என்ற பழமொழிக் கேற்ப, பூச்சிகளும், நோய்களும் தாக்கினாலும், தாக்காவிட்டாலும் குறிப்பிட்ட காலங்களில், குறிப்பிட்ட பக்குவத்தில், பயிர்ப் பாதுகாப்புப் பணிகளைச் செய்வதே உழவர்களின் உயர்விற்கும், நாட்டின் செழிப்பிற்கும் துணை செய்யும்.

இதுவரை கூறியவைகளிலிருந்து உழவர் பெருமக்கள் பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை உணர்ந்து கொண்டிருக்க முடியும் என்று நம்புகின்றோம்.

அடுத்து, உழவர்களின் பகைவர்களாக உள்ள பூச்சிகள், நோய்கள், எலிகள் ஆகியவற்றின் சக்தியையும் புரிந்து கொள்ள வேண்டும். மற்றெல்லாவற்றையும் விட பூச்சிகளே பெருமளவில் தீங்கு விளைவிப்பதால் பூச்சிகளைப்பற்றி முதலில் புரிந்து கொள்ள வேண்டும். போரில் பகைவர்கள் கூரிய கத்தியும், கவசமும், கொண்டு போரிடுவதுபோல், இயற்கையிலேயே பல தடுப்பு சாதனங்களைப் பூச்சிகள் பெற்றுள்ளன. எனவேதான், பூச்சிகள் தந்திரமாகவும், வெகு சாமர்த்தியமாகவும் உழவர்களுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றன. ஆகவே, பூச்சிகளைப் பற்றி நன்கு புரிந்து கொள்ளுங்கள்.



**பூச்சிகளைப்பற்றி புரிந்துகொள்ளுங்கள்**

குறுகிய காலத்தில் பெருமளவில் இனப் பெருக்கம் செய்யும் சக்தியைப் பூச்சிகள் கொண்டிருப்பதால் உழவர் பெருமக்கள் மேற்கொள்ளும் எல்லா பயிர்ப்பாதுகாப்பு முயற்சிகளையும் வீணாக்கிவிடுகின்றன. உழவர்களின் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தப்பி ஒரு பூச்சி உயிர் வாழ்ந்துவிட்டாலும், அது விரைவில் பல்லாயிரக் கணக்கான பூச்சிகளை உற்பத்தி செய்து விடுகிறது. இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டு நிலக்கடலையில் தோன்றும் சிவப்பு கம்பளிப் பூச்சியாகும்.

ஒரு சில பூச்சி இனங்கள் ஒரே நாளில், பல மைல் தூரம், கடந்து செல்லும் சக்தியையும் பெற்றிருப்பதால், (வெட்டுக்கிளி போன்றவை) வழி நெடுகக் காணப்படும் பயிர்களை அழித்துக் கொண்டே சென்று விடுகின்றன. போர் முனையில் தோற்று ஓடுகின்றவர்கள் வழியில் காணும் பொருட்களையெல்லாம் சேதப் படுத்திச் செல்வது போல் பூச்சிகளும் செய்துவிடுகின்றன.

'' உழவர்கள் '' என்னும் போர் வீரர்களின் தாக்குதலிலிருந்து தப்பிக்க, '' பூச்சிகள்'' என்னும் '' பகைவர்கள் '' ' புற்று ' என்னும் ' கோட்டைகள் ' அமைத்து, அவைகளில் புகுந்து கொள்கின்றன.

சிலப் பூச்சிகள் மறைவிடங்களில் மறைந்து வாழ்வதுடன், திருடர்கள் பகலில் மறைந்து இருந்து, இரவில் வெளிவந்து திருடுவது போல், பகலில் மண்ணிற்குள் சென்று மறைந்து இருந்து விட்டு, இரவில் வெளியே வந்து பயிர்களைத் தாக்குகின்றன.



சில பூச்சிகள் கண்களுக்குப் புலப்படாத அளவுக்கு மிகவும் நுண்ணியதாக இருப்பதால், உழவர்களின் கண்களுக்குப் புலப்படாமல் பயிர்களில் வாழ்ந்து, பயிர்களின் சாற்றினை உறிஞ்சி, பயிர்களைத் தாக்கிவிடுகின்றன.

உயர்விளைச்சல் ரகங்கள் தோன்றிய பின்பு அதிக அளவில் உரமிடப்படுவதாலும், பல பயிர் செய்யப்படுவதாலும், முறையே பூச்சிகள் தோன்றவும், தொடர்ந்து உயிர் வாழவும் வழி பிறந்துள்ளது. இவ்வாறு பல்வேறு இயற்கை அனுகூலங்களைப் பெற்றுள்ள பூச்சிகள் பின்கண்டுள்ள முறைகளில் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன.



1. பயிர்களின் இலை (தோகை), தண்டு, காய், பழம் ஆகியவைகளைச் சுவைத்து உண்கின்றன.

2. பயிர்களின் இலை, தண்டு, இளம் மொட்டுகள், பழங்கள் ஆகியவைகளில் உள்ள சாற்றினை உறிஞ்சி விடுகின்றன.

3. குறுத்துப் புழு போன்றவை பயிர்களின் பாகங்களைத் துளைத்து நாசம் செய்துவிடுகின்றன.

4. கறையான் போன்றவை பயிர்களின் வேர்களைத் துளைத்து சாகடிக்கின்றன.

5. சில பூச்சிகள், உணவிற்காகப் பயிர்களைத் தாக்குவதுடன், பல விரோதிப் பூச்சிகளைச் சுமந்து வந்து பயிர்களில் புகுத்திவிடுகின்றன.

6. பூஞ்சாள நோய், வைரஸ் நோய் ஆகியவைகளைப் பரப்பும் கிருமிகளையும் பூச்சிகள் சுமந்து வந்து பயிர்களில் பரவச் செய்கின்றன.

7. ஒரு சில பூச்சிகள் உணவிற்காகப் பயிர்களைத் தாக்காவிட்டாலும், தங்குமிடம் தேடி அலையும்பொழுது பயிர்களின் விரோதிகளைப் பரப்பி நாசம் விளைவிக்கின்றன.

மேற்கூறிய வகைகளில் பொதுவாகப் பூச்சிகள் சேதம் விளைவிக்கின்றன. ஆனால் ஒவ்வொரு வகைப் பூச்சியும் ஒவ்வொரு வகையில் சேதம் விளைவிக்கின்றன. சில வகைப் பூச்சிகள் புழுப் பருவத்தில் (இளமைப் பருவம்) மட்டுமே தீங்கிழைக்



கின்றன. சில வகைப் பூச்சிகள் முதிர்ந்த பருவத்தில் ( Adult Stage ) மட்டுமே சேதம் ஏற்படுத்துகின்றன. சில வகைப் பூச்சிகள் இளமைப் பருவம், முதிர்ந்த பருவம் ஆகிய இரு பருவத்திலும் பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்துகின்றன. பல்வேறு வகைப் பூச்சிகளால் ஏற்படும் சேதம் பின்கண்டுள்ளபடி அமைந்துள்ளன.

### பூச்சிகள் விளைவிக்கும் சேதத்தின் வகை.

**புழுக்கள்:**—வண்ண வண்ண இறக்கைகளுடன்பகலிலே பறந்து திரியும் எண்ணற்ற வண்ணத்துப் பூச்சிகள், இரவிலே பறந்து திரியும் அந்துப் பூச்சிகள், ஈக்கள், வண்டுகள் ஆகியவற்றின் இளமைப்பருவம் புழு உருவில் உள்ளது. (முதிர்ந்த பூச்சிகள் இனவிருத்தி மட்டுமே செய்கின்றன, அவைகளால் நேரடி



யாகப் பயிர்களுக்குப் பெருந்தீங்கு ஏற்படுவதில்லை). இளம்பருவப் புழுக்கள் இலையைச் சுரண்டியும், கடித்தும், குருத்தினுள் புகுந்து கொண்டும், குருத்தை அரித்தும் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன. சிவப்புக் கம்பளிப் புழு நிலக்கடலையைப் பெருமளவில் தாக்கக்கூடியது.

**பேன்கள் :**—இளம் குஞ்சுகளுக்கு இறக்கை இருக்காது. முதிர்ந்த பேன்கள் இறக்கையுடன் இருப்பதுடன், பறந்து செல்லக்கூடியவை. இவ்விரு வகையுமே பயிர்களின் சாற்றை உறிஞ்சி தீங்கிழைக்கின்றன.

**தத்துப்பூச்சிகள்:**— தத்தி தத்தி, குதித்துச் சென்று, இலை, தண்டு முதலிய வற்றின் சாற்றை உறிஞ்சி விடுகின்றன. இவைகளின் இளங் குஞ்சுகள் ஊர்ந்து சென்று பயிர்களின் சாற்றை உறிஞ்சி விடுகின்றன.

**மாவுப் பூச்சிகள்:**—இவைகள் வெண்மையாகவும், சிறு சிறு முட்டை போன்றும், மாவு போன்ற ஒருவகைப் பொருளால் மூடப்பட்டும் காணப்படும். இவைகளால் பறக்க முடியாது. ஆயினும் நீரில் மிதந்தும், ஊர்ந்தும் செல்லக்கூடியவை. இவை பயிர்களின் சாற்றை உறிஞ்சி, சாகடிக்கின்றன.



**நாவாய்ப் பூச்சிகள்:**—இறக்கையுடன் கூடிய நாவாய்ப் பூச்சிகள் பறந்து சென்று பயிர்களின் சாற்றை உறிஞ்சி விடுகின்றன. அதுவும் குறிப்பாக கதிர்களில் பால் பிடித்து தானிய மணிகள் உருவாகும் பருவத்தில்நாவாய்ப் பூச்சிகள் பெருமளவில் தாக்கி பாலை உறிஞ்சி, பதராக்கி விடுகின்றன.

**வெட்டுக் கிளிகள்:**— இவை தாவிச் செல்லக்கூடியவை. இவை கூட்டங் கூட்டமாக இடம்விட்டு இடம் சென்று தீங்குவிளைவிக்கும். இளம் வெட்டுக் கிளிகளும், முதிர்ந்த வெட்டுக்கிளிகளும் பயிர்களின் தோகையைக் கடித்து பெருமளவில் தேசம் விளைவிக்கக் கூடியவை.

**சிலந்திப் பூச்சி:**—இவை மஞ்சள் நிறமாகவும், கூட்டங் கூட்டமாகவும் இலைகளின் அடிப்பாகத்தில் காணப்படும். இச்சிலந்திப் பூச்சிகள் இலைகளின் பசுமையான பாகத்தைச் சுரண்டி சாப்பிட்டு விடுவதால் பயிர்களின் தோகைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

மேற் கூறிய வகைகளில் பூச்சிகள் சேதம் விளைவிப்பதால்,, பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற, பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

பயிர்ப் பாதுகாப்பில் ‘இயற்கை முறை’, ‘செயற்கை முறை’ என இருவகைகள் உள்ளன. மனித முயற்சியின்றி, காலநிலை (சீதோஷ்ணம்), பகைப் பூச்சிகள் முதலியவற்றால் இயற்கையிலேயே பயிர்ப்பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதுவே ‘இயற்கை முறை’ என்று கூறப்படுகிறது. பருவ மாறுபாடு, தீவிர சாகுபடித் திட்டம், உயர் விளைச்சல் ரகங்களைப் பெரும் பரப்பில் பயிரிடுதல், அதன் காரணமாக பெருமளவில் தழைச்சத்து உரங்களை மட்டும் (மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களைத் தேவைக்கேற்ப இடாமல்) பயன்படுத்துதல் ஆகியவற்றின் காரணமாக இயற்கையின் சமநிலை கெட்டுவிட்டதால், பயிர்களின் முதல்பகைவர்களான பூச்சிகளின் பலம் ஓங்கிவிட்டது. , இவ்வாறு பூச்சிகள் பெருகுவதை இயற்கையே காலப் போக்கில் கட்டுப்படுத்தி விடும். ஆனால் அதுவரை நாம் வாளாயிருந்தால், நாட்டின் தேவைக்கேற்ற அளவில் உற்பத்தி கிடைக்காது! எனவே, இயற்கையே பூச்சிகளைக் கட்டுப்படுத்திவிடும் என்று நாம் காத்திருக்கக் கூடாது ; உடனடி

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

**19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை–600001.**

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'

தொலைபேசி எண் : 20367, 20368, 20369

தபால் பெட்டி எண் : 226.

டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

## வட்டி விகிதங்கள்

| | | | |
|---|---|---|---|
| நடப்புக் கணக்குகள் | .. | (வருடத்திற்கு) | $\frac{1}{2}$% |
| சேமிப்புக் கணக்குகள் | .. | | 4% |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

**காலாந்திர கணக்குகள் :** ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

| | | |
|---|---|---|
| 15 நாட்கள் | — | 2% |
| 46 நாட்கள் | — | 3% |

**நிரந்தரக் கணக்குகள் :** ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் | $4\frac{3}{4}$% | 24 மாதங்கள் | $6\frac{3}{4}$% |
| 6 மாதங்கள் | $5\frac{1}{4}$% | 36 மாதங்கள் | $7\frac{1}{4}$% |
| 12 மாதங்கள் | $6\frac{1}{4}$% | 60 மாதங்கள் | $7\frac{1}{2}$% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட $\frac{1}{2}$% கூடுதல் வட்டி தரப்படும்.

| தொடர் கணக்குகள் | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் ரூ | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், ஷெனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், கிரீன்வேஸ் ரோடு, மயிலாப்பூர்–குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸண்ட் நகர்.

ஆர். கனகசபை,
தலைவர்

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி,
துணைத் தலைவர்.

டி. வர்த்தமானன்,
செயலர்

யாக செயற்கை முறைகளை மேற்கொண்டு பூச்சிகளைக் கட்டுப் படுத்த வேண்டும்.

பயிர்ப்பூச்சிகளை அழிக்கவும், அவைகள் வராமல் தடுக்கவும் பின் கண்ட செயற்கை முறைகளை முறையாகவும், காலத்திலும் கடைபிடிக்க வேண்டும்.

(1) பூச்சிகளைப் பிடித்து அழித்தல் (Mechanical Control).

(2) பகைப்பூச்சிகளை உற்பத்திசெய்து, வெளியே விடுவதன் மூலம் பூச்சிகளை அழித்தல் (Biological Control).

(3) இரசாயன மருந்துகள் மூலம் பூச்சிகளை அழித்தல் (Chemical Control).

(4) ஒரே விதமான பயிரைத் தொடர்ந்து சாகுபடி செய்யாமல் மாற்றி, மாற்றி, வெவ்வேறு பயிர்களைச் சாகுபடி செய்தல், பயிரிடாமல் நிலத்தைத் தரிசாகப் போட்டுவிடுதல், வரப்புகளில் பூச்சிகள் தங்கியிருக்காமல் புற்களை அகற்றித் தூய்மையாக வைத்திருத்தல் போன்ற சாகுபடி முறைகளின் மூலம் பூச்சிகளை அழித்தல் ( Cultural Control ).

## காவல்துறை பெற்ற பரிசு

**காவல்துறை அதிகாரிகளின் திறமை, வீரம் ஆகியவற்றைச் சோதிக்கும் 16-ஆவது அனைத்திந்தியப் போட்டியில், தமிழ் நாடு காவல் துறையினர் இந்த ஆண்டும் 'களத்திறன் முதன்மை' (சாம்பியன்சிப்) கேடயத்தைப் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டுக் காவல் துறையினர் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக 'சாம்பியன்சிப்' பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.**

(5) குறிப்பிட்ட பயிர்களைக் குறிப்பிட்ட காலம் வரை பயிரிடக் கூடாது என்றும், கட்டாயமாக எல்லா இடங்களிலும் மருந்து தெளிக்க வேண்டும் என்றும் அரசாங்கமே சட்டம் இயற்றி பூச்சிகள் தோன்றுவதைத் தடுத்தல் (Legal Control).

மேற்கூறிய முறைகளில், இரசாயன மருந்துகள் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்துவதே எல்லாராலும் எளிதில் மேற்கொள்ளக்கூடியதாக அமைந்திருப்பதுடன் விரைவாகப் பலன் தரக்கூடிய சிறந்த முறையாக விளங்குகிறது.



பூச்சிகளைப் பிடித்து வளர்த்து அவைகளின் நடவடிக்கைகளை நன்கு ஆராய்ந்த பிறகே, அவைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய பல பூச்சிக் கொல்லிகள் கண்டு பிடிக்கப் படுகின்றன. பூச்சிக் கொல்லிகள் பின்கண்ட வகைகளில் பூச்சிகளுக்கு நஞ்சாக அமைகின்றன (அவைகளுக்கான எடுத்துக்காட்டுகளும் கொடுக்கப் பட்டுள்ளன).

(1) நேரடியாகத் தொட்டாலே தீங்கிழைக்கும் நஞ்சு (Contact poison)—கந்தகம்.

(2) வயிற்று நஞ்சு (Stomach poison)— 'சிங் பாஸ்பைடு'.

(3) பூச்சிகளினுடையதோல் மூலமாகவும், சுவாசிப்பதன் மூலமாகவும் மூச்சைத் திணற வைக்கும் நஞ்சு (Respiratory poison)—பாரத்தியான்.

(4) நச்சுப் புகையை வெளி விடும் நஞ்சு (Fumigant poison)—நூவான்.

(5) பயிர்களில் ஊடுருவி, பயிர்ச்சாறுடன் இரண்டறக் கலந்து நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று பூச்சிகளை அழிக்கும் நஞ்சு (Systemic poison)—'மெட்டாசிஸ் டாக்ஸ்'.

பொதுவாகப் பயிர்களைக் கடித்துச் சுவைத்து உண்ணும் பூச்சிகளுக்கு வயிற்று நஞ்சு மருந்துகளையும், பயிர்களின் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளுக்கு மூச்சைத் திணற வைக்கும் நஞ்சுகளையும், பயிர்களின் உள்ளே புகுந்து கொண்டு நாசம் செய்யும் பூச்சிகளுக்கு நச்சுப் புகையை வெளிவிடும் நஞ்சுகளையும் பயன்படுத்த வேண்டும்.



பூச்சிக் கொல்லிகளில் சில நேரடியாகத் தூவுவதற்கு ஏற்றதாகவும், பல தண்ணீரில் கலந்து தெளிப்பதற்கு ஏற்றதாகவும், உள்ளன. தற்பொழுது சில பூச்சிக் கொல்லிகள் குருணை வடிவில் உள்ளன. அவைகளை வயலில் தூவி, தண்ணீர் பாய்ச்சி, 3 நாட்கள் வரை அத் தண்ணீர் வெளியேறிவிடாமல் தடுத்து நிறுத்திவிட வேண்டும். அத் தண்ணீரைப் பயிர்கள் உறிஞ்சும் பொழுது, பயிரிலுள்ள பூச்சிகள் இறந்து விடுகின்றன.

தூவும் மருந்துகளை ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் தூவுதல் சிறந்தது.

தெளிக்கும் மருந்துகளைத் தகுந்த அளவு தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். கலக்க வேண்டிய தண்ணீரின் அளவு, தெளிப்பானைப் பொருத்த தேயாகும். சாதாரண கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் தேவையான மருந்தைக்



கலந்து தெளிக்க வேண்டும், விசைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்க ஒரு ஏக்கருக்குத் தேவையான அளவு மருந்தை 40 முதல் 60 லிட்டர் தண்ணீரில் கலந்தால் போதுமானது. தெளிப்பானைப் பொருத்துத் தண்ணீரின் அளவு மாறுபடுமே தவிர மருந்தின் அளவு மாறுபடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பல்வேறு பெயர்களுடன், பல்வேறு பூச்சிக் கொல்லிகள் விற்பனையாவதால், அவைகளில் எதை, எந்த அளவில் பூச்சிக்கு, தூவுவது அல்லது தெளிப்பது என்று அறியாமல் உழவர் பெருமக்கள் சங்கடப்படுகின்றார்கள். உழவர் பெருமக்களின் சங்கடங்களைப் போக்கவே, தற்பொழுது விற்பனையாகிவரும் முக்கியப் பூச்சிக் கொல்லிகளையும், அவைகளை எந்தெந்தப் பூச்சிகளுக்கு, என்ன அளவில் தெளிக்க வேண்டும் என்பதையும் கீழே கண்டுள்ள அட்டவணைகளில் விளக்கப்பட்டுள்ளன.

## பழக்கத்திலுள்ள சில முக்கியப் பூச்சிக்கொல்லிகளின் பயன்கள்

### 1. தெளிக்கும் மருந்துகள்

| வரிசை எண். | மருந்தின் பெயர் (வாணிகப் பெயர்கள்.) | கட்டுப்படுத்தும் பூச்சிகள். | ஒரு ஏக்கருக்குத் தேவையான மருந்தின் அளவு (மில்லி லிட்டர்) | ஒரு ஏக்கர் தெளிப்பதற்கு கலக்க வேண்டிய தண்ணீரின் அளவு (லிட்டர்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பாரத்தியான் (பாலிடால், பாரமர், எகாடாக்ஸ், பாரத்தியான்.) | குருத்துப்புழு, படைப்புழு, சூரைப் பூச்சி, புகையான் பூச்சி, ஆனைக் கொம்பன், கம்பளிப் பூச்சி, மாவுப் பூச்சி, அசுவணி. | 200 | 200 |
| 2. | என்ட்ரின் (என்ட்ரின், என்டரக்ஸ்) | குருத்துப்புழு, பச்சைத் தத்துப்பூச்சி, நெற்பேன், தோகை வெட்டும் புழு, தண்டு துளைக்கும் புழு, காய்ப்புழு, அசுவணி. | 400 | 200 |
| 3. | பெனிட்ரோதயான் (சுமதியான்) | நெற்பயிரில் தோன்றும் எல்லாப் பூச்சிகளுக்கும் ஏற்றது. | 250 | 200 |
| 4. | என்டோசல்பான்(தையோடான்) | எல்லாப் பூச்சிகளுக்கும் ஏற்றது. | 300 | 200 |
| 5. | பாஸ்பாமிடான் (டெமக்ரான்). | ஷை | 110 | 200 |
| 6. | டைமிதியோட் (ரோகார்) .. | குருத்துப்பூச்சி, தத்துப்பூச்சி, குறிப்பாகச் சிவப்புப்பேன். | 250 | 200 |
| 7. | டி.டி.டீ. 50சதம் நீரில் கரையும் தூள். | இலை சுருட்டும் பூழு, சுருள் பூச்சி, தென்னை கருந்தலைப்புழு, மா மரத்துப் பூச்சி. | 1 கிலோ | 200 |
| 8. | பி.எச். சி. 50 சதம் நீரில் கரையும் தூள். | வேர் அசுவணி, தண்டு துளைப்பான், சிவப்பு கம்பளிப் பூச்சி, தென்னை வண்டு, கரையான். | $1\frac{1}{2}$ கிலோ | 200 |
| 9. | கார்பரில் 50 சதம் .. .. (செவின்) | குருத்துப்புழு, காய்கறிப் பயிர்களில் காணும் பூச்சிகள், தத்துப் பூச்சிகள், காய்களைத் துளைக்கும் புழு. | 1 கிலோ | 200 |

### 2. தூவும் மருந்துகள்

| வரிசை எண். | மருந்தின் பெயர். | கட்டுப்படுத்தும் பூச்சிகள். | தூவுவதற்கு ஏக்கருக்குத் தேவைப்படும் அளவு (கிலோ). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | பி. எச். சி. 10 சதத்தூள் .. | வெள்ளைத் தத்துப் பூச்சி, நெற்பேன், இலையைத் தின்னும் பூச்சிகள், புகையான் (பல்காரிட்), கதிர் நாவாய்ப் பூச்சிகள். | 10 |
| 2. | டி. டி. டீ. 5 சதத்தூள் .. | பச்சைத் தத்துப் பூச்சி, படைப்புழு, வெட்டுப் புழு, புள்ளி வண்டுகள், சுருள்பூச்சி. | 10 |
| 3. | லிண்டேன் 0.65 சதத்தூள் .. | காய்கறிப் பயிர்களிலும், பூச்செடிகளிலும் காணப்படும் பூச்சிகள். | 7 |
| 4. | கார்பரில் 10 சதம்(செவின்) .. | காய்களைத் துளைக்கும் புழுக்கள், இலைகளைத் தின்னும் புழுக்கள், வண்டுகள், தத்துப்பூச்சிகள். | 7 |

### 3. குருணைகள்

| வரிசை எண். | மருந்தின் பெயர். | கட்டுப்படுத்தும் பூச்சிகள். | பயன்படுத்தும் முறை. | ஏக்கருக்குத் தேவைப் படும் அளவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | எண்ட்ரின் 2 சதம். | நெல் மற்றும் சோளப் பயிர்களின் குருத்துப் புழுக்கள். | பாசன நீரில் கலக்க வேண்டும் அல்லது செடியில் தூவவேண்டும். | 4 முதல் 6 கிலோ. |
| 2. | டயாசினுன் 5 சதம். | நெல் குருத்துப் புழு, ஆனைக் கொம்பன், மற்றும் இதரப் பூச்சிகள். | பயிர்களைச் சுற்றிலும் மண்ணில் தூவிக் கொத்தி விட வேண்டும். | 12 கிலோ. |
| 3. | போரேட் 10 சதம் (திமெட்.) | சோளத் தண்டு ஈ, சோளத் தண்டுப் புழு. | விதைப்பதற்கு முன்பு படைச் சாலில் ஒரு மீட்டர் நீளத்திற்கு 1·5 கிராம் வீதம் தூவவேண்டும். | 6 கிலோ. |
| 4. | ஃப்ருமின் 5 சதம் (சால்விரெக்ஸ்.) | உண்ணிகள், இலைப் பேன்கள், தத்துப் பூச்சிகள், சோளக் குருத்துப் பூச்சிகள். | விதைப்பதற்கு முன்பு படைச் சாலில் ஒரு மீட்டர் நீளத்திற்கு 3 கிராம் வீதம் தூவவேண்டும். | 12 கிலோ. |

குறிப்பிட்ட பூச்சிக்கு, குறிப்பிட்ட பூச்சிக் கொல்லியைக் குறிப்பிட்ட அடர்த்தியில் தெளிக்குமாறு வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கின்றனர். உதாரணமாக நெல் குருத்துப் பூச்சிக்கு 0·05 சத பாரத்தியான் அல்லது 0·04 சத என்ட்ரின் தெளிக்குமாறு கூறப்படுகிறது. இதுபற்றி தெளிவு ஏற்படுத்தவே, கீழ்க்கண்ட அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

### அடர்த்திற்கேற்ப, பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவும் தண்ணீரின் அளவும்

| வரிசை எண். | மருந்தின் பெயர். | தெளிப்பதற்குத் தேவைப்படும் மருந்துக் கலவையின் அடர்த்தி (சதவீதம்). | மருந்தின் அளவு. | மருந்துக் கலவைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் தண்ணீர் அளவு (லிட்டர்.) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பாரத்தியான் 50 சதவீதம் இ.சி. | 0·025 | 100 மி.லி. | 200 |
| | | 0·05 | 100 மி.லி. | 100 |
| 2. | பாலிடால் இ. 605 .. .. | 0·025 | 100 மி.லி. | 200 |
| | | 0·05 | 100 மி.லி. | 100 |
| 3. | என்ட்ரின் 50 சதவீதம் இ.சி. | 0·02 | 100 மி.லி. | 100 |
| | | 0·04 | 200 மி.லி. | 100 |
| 4. | பி. எச்.சி. 50 சதவீதம் .. | 0·05 | 1 கிலோ. | 110 |
| | | 0·1 | 2 கிலோ. | 110 |
| 5. | லிண்டேன் 6·5 சதவீதம் .. | 0·05 | 1 கிலோ. | 110 |
| | | 0·1 | 2 கிலோ. | 110 |
| 6. | டி.டி.டீ. 50 சதவீதம் .. | 0·1 | 1 கிலோ. | 500 |
| | | 0·2 | 2 கிலோ. | 500 |
| 7. | டயல்ட்ரின் 50 சதவீதம் .. | 0·1 | 1 கிலோ. | 500 |
| 8. | டயல்ட்ரின் 18 சதவீதம் .. | 0·02 | 100 மி.லி. | 100 |
| 9. | தயோமிடான் (எகாடின்) .. | 0·08 | 80 மி.லி. | 80 |
| | | 0·1 | 100 மி.லி. | 100 |
| 10. | பாஸ்போமிடான் (டெமக்ரான்) | 0·025 | 25 மி.லி. | 100 |
| 11. | கார்பரில் (செவின்) 50 சதவீதம் | 0·1 | 1 கிலோ. | 500 |
| 12. | மாலத்தியான் 50 சதவீதம் இ.சி. | 0·1 | 200 மி.லி. | 100 |
| 13. | மிதைல் டிமோடான் (மெட்டா சிஸ்டாக்ஸ்). | 0·1 | 100 மி.லி. | 100 |
| 14. | கார்போ பினுதியான் (ட்ரைதியான் 20 சதவீதம் இ.சி. | 0·6 | 300 மி.லி. | 100 |
| 15. | நீரில் கரையும் கந்தகம் .. | .. | 1 கிலோ. | 500 |
| 16. | ரோகார் .. .. .. | 0·5 | 100 மி.லி. | 200 |

மேலே அட்டவணைகளில் கூறப்பட்டுள்ளபடி பூச்சிகளுக்கு ஏற்ற மருந்தை, பரிந்துரைக்கப்பட்ட அளவில் தெளித்தல் அல்லது தூவுதலே பூச்சிகளைக் கட்டுப்படுத்தி மகசூலைப் பெருக்குவதற்குரிய நல்வழியாகும். எனவே, பயிர்ப்பாதுகாப்புப் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, பயன் அடையுமாறு தமிழ்நாடு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர்.எம்.





# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத் தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்




# ஒளி ஏற்றுவோம்!

"அடுப்பைப் பற்ற வைக்கணும், தீப் பெட்டியைக் காணோமே!" என்று அம்மா அடுக்களையிலிருந்து வெளியே வந்தாள்.

"தீப்பெட்டிதானே? அண்ணா வைத்திருப்பார். நேற்றே உன்னிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்..." என்றாள் திலகம்.

"என்ன? தீப் பெட்டியை உன் அண்ணன் வைத்திருக்கிறானா? அவனென்ன தீப் பெட்டிக் கடையா வைத்திருக்கிறான்? காஃபி போடத் தீப் பெட்டியைத் தேடுறேன், கிண்டலா பண்றே?" என்று அம்மா சிறிது கோபமாகக் கேட்டாள்.

"கிண்டல் இல்லேம்மா, உண்மையைத்தான் அவள் சொன்னாள். இந்தாங்க உங்களுக்குத் தேவையான தீப்பெட்டி" என்று தன்னறையிலிருந்து வெளியே வந்த குமார் ஒரு 'டஜன்' தீப் பெட்டிகளை அம்மாவிடம் கொடுத்தான்.

"ஏதுடா இத்தனை பெட்டி? எங்கே வாங்கினே?"

"நேற்று திருத்தணிக்குப் போனேன் இல்லே. அங்கே வாங்கி வந்தேன். விலை கூட மலிவு!" என்று குமார் சொன்னதும், அவன் தங்கை திலகம் அதை ஆமோதித்தாள். அவளும் அவனுடன் திருத்தணிக்குச் சென்றிருந்தாள்.

குமாரின் அம்மா அந்தத் தீப் பெட்டிகளில் ஒன்றை எடுத்துப் பார்த்தாள்; அது அழகாகவும், அதில் தீக்குச்சிகள் நிறைந்தும் இருந்தது. உடனே ஒரு குச்சியை எடுத்துப் பற்ற வைத்தாள். அது மிக்க ஒளியுடன் எரிவதைக் கண்டாள்.

"இந்தத் தீக்குச்சி மிக நன்றாக எரிகிறதே! பெட்டியின் மேல் வி.ஐ.பி. என்று போட்டிருக்கிறதே! இவையெல்லாம் என்ன?" என்று ஆவலாகக் கேட்டாள் அம்மா.



## முதன் முதலில்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தியாவிற்குத் தேவையான தீப் பெட்டிகள் சுவீடனிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. 1914-ஆம் ஆண்டில், 2,160 மில்லியன் தீப்பெட்டிகள் இறக்குமதி ஆயின. அப்போதைய ஆங்கில அரசு அதிகமான சுங்கவரி விதித்தது. அதனால், சுவீடன் நாட்டுத் தீப்பெட்டி நிறுவனம், இந்தியாவுக்குத் தீப்பெட்டிகளை அனுப்புவதைக் கைவிட, இந்தியாவிலேயே தீப்பெட்டித் தொழிலைத் துவக்குவது நல்லதென்று முடிவு செய்து, பம்பாய் அருகில் உள்ள அம்பர்நாத் என்ற ஊரில் 1924-ஆம் ஆண்டு ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையைத் துவக்கியது. இந்தியாவில் உருவான முதல் தீப்பெட்டித் தொழிற்சாலை இதுதான். 1929-ஆம் ஆண்டு வாக்கில், சென்னையிலும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எழுந்தன.

"மணி ஐந்தாகப் போகிறது. முதலில் காஃபி போட்டுத் தாருங்கள்! பிறகு கதை பேசுவோம்..." என்றான் குமார். அவன் அம்மாவும் காஃபி போட அவசரமாக அடுக்களைக்குள் நுழைந்தாள்.

மாலை மணி ஆறு.

திலகம் குத்து விளக்கை ஏற்றி விட்டுக் கூடத்துக்கு வந்தாள். குமாரும், அவன் அம்மாவும் கூடத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் வந்து அமர்ந்தனர்.

"வி.ஐ.பி. என்றால் கிராமத் தொழிற் பொருட்கள் (Village Industries Products) என்று பொருள்" என்றான் குமார்.

"ஆமாம், திருத்தணிக்கு வேலை விஷயமாகத் தானே போனாய்? அங்கு எப்படித் தீப் பெட்டியைப் பிடித்தாய்?" என்று அம்மா கேட்டாள்.

அதற்குக் குமார் "அங்கே ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை இருப்பது முன்பே எனக்குத் தெரியும். எப்படியும் அதைப் பார்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தேன். நேற்றுதான் அதற்கு வாய்ப்புக் கிடைத்தது" என்றான். உடனே திலகம், "ஆமாம் அம்மா, அண்ணா கூட நானும் போய்ப்பார்த்தேன். என்னைப்

போலப் பல பெண்கள் அங்கே வேலை செய்கிறார்கள் !'' என்றாள் உற்சாகமாக.

'ஆக்கவும், அழிக்கவும் வல்ல இந்தத் தீக்குச்சிகள் அன்றாடம் தேவைப்படும் மிக இன்றியமையாத பொருளாகும். ஆனால், இதைச் செய்யும் விதத்தைத்தான் ஒருவரும் தெரிந்துகொள்ள முன் வருவதில்லை ! நாம் எத்தனையோ பொருள்களை உபயோகிக்கிறோம் ; அவற்றைப் பற்றிக் கேள்விப்படுகிறோம் ; அவைகளெல்லாம் எங்கு, எப்படி உருவாகி வருகின்றன என்று தெரிந்து கொண்டால் பொது அறிவு வளருமல்லவா ? '' என்று குமார் சொன்னதும், அவன் அம்மா அதற்கு, ''ஆமாம், ஆமாம்!'' என்று தலையாட்டினாள். குமார் மேலும் சொல்ல ஆரம்பித்தான் :—



பெட்டிகள் உருவாகின்றன

''கதர்-கிராமத் தொழில்கள் பலவற்றில் தீப்பெட்டித் தொழிற் கூடமும் ஒன்று. ஏழை எளிய மக்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் இதைப் போன்ற பல தொழில்கள் இன்னும் பல இடங்களில் செயற்பட்டு வருகின்றன. திருத்தணியிலுள்ள இத் தொழிற்கூடம் 1970-ஆம் ஆண்டு முதல் மிக நன்றாக இயங்கி வருகிறது'' என்றான்.

''இங்கு நிறையப் பெண்கள் வேலை செய்கிறார்கள். பல பெண்கள் தங்கள் வீட்டிலிருந்து கொண்டே தீப்பெட்டிகளைச் செய்து இங்கு அனுப்புகிறார்கள். இதனால் அவர்களுக்கு வேலையும், கணிசமான வருமானமும் கிடைக்கிறது '' என்றாள் திலகம்.



வெறும் குச்சிகள் மரச்சட்டங்களில் பொருத்தப்படுகின்றன

''அப்படியா ? இந்தத் தீக்குச்சியை எப்படிச் செய்கிறார்கள்? அதைக் கொஞ்சம் சொல்லுங்களேன். . .'' என்று ஆவலாகக் கேட்டாள் குமாரின் அம்மா.

''முதலில் தீக்குச்சிகள் செய்யத் தேவையான மூலப்பொருள்கள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். பஞ்சு மரப்பட்டை, மட்டி மரம், நீலக் காகிதம், மைதா, பொட்டாசியம் குளோரைடு, சல்பர், மாங்கனிஸ் டை ஆக்சைடு, அயர்ன் ஆக்சைடு, கிளாஸ் பவுடர், ரோசின், பொட்டாசியம் டை க்ரோமைட், பிசின், நீர், மெழுகு ஆகியவையாகும்'' என்று குமார் சொன்னதும் அவன் அம்மா, '' பஞ்சும், மரப்பட்டையும், மட்டி மரமும் எதற்கு ?'' என்று கேட்டாள்.

அதற்குக் குமார், ''பஞ்சு—மரப்பட்டை தீப்பெட்டிகள் செய்யவும், மட்டி என்ற ஒருவகை மிருதுவான மரம் தீக்குச்சிகள் செய்யவும் பயன்படுகிறது. நீலக் காகிதமும், மைதாவும், பெட்டிகள் செய்யவும், மேற்சொன்ன மருந்துகளெல்லாம் தீக்குச்சியின் முனையிலுள்ள மருந்துக்கும் பயன்படுகின்றன'' என்றான்.



கருவியின் உதவியால் மருந்து கலக்கப்படுகிறது

''இதே மருந்து, பெட்டியின் ஓரத்திலும் பூசப்படுகிறதா ?'' என்று குமாரின் அம்மா கேட்டாள்.

''இல்லை. அதற்குச் சிவப்புப் பாஸ்பரஸ், ஆண்டிமனி சல்பைட், கிளாஸ் பவுடர், பிசின் முதலியன தேவைப்படுகிறது.'' என்று சொல்லிவிட்டுக் குமார் திலகத்தைப் பார்த்து, ''முதலில் இங்கே என்ன



குச்சிகள் மருந்தில் தோய்த்து எடுக்கப் படுகின்றன



தீக்குச்சிகள் பெட்டிகளில் நிரப்பப் படுகின்றன



பெட்டியின் ஓரத்தில் மருந்து பூசப்படுகிறது

செய்கிறார்கள் என்று சொல் பார்க்கலாம்?'' என்று கேட்டான்.

''முதலில் வெறும் பெட்டிகளைத்தான் செய்கிறார்கள். அடுத்து, குச்சிகளை மரச் சட்டத்தில் வரிசையாகப் பொருத்துகிறார்கள். ஒரு வரிசைக்கு ஐம்பது குச்சிகள் இருக்கும். பிறகு, குச்சிகள் பொருத்தப்பட்ட மரச்சட்டத்தை, உருகிக் கொண்டிருக்கும் மெழுகில் அழுத்தி எடுக்கின்றார்கள். . .'' என்று திலகம் சொன்னதும், ''நன்றாக நினைவு வைத்திருக்கிறாயே!'' என்று அவளைப் பாராட்டிய குமார் தொடர்ந்து மேலும் சொன்னான்.

''மெழுகில் குச்சிகளை அமுக்கி எடுத்ததும், மருந்து நிறைந்த நீண்ட இரும்புத் தட்டில் இந்தக் குச்சிகள் நன்றாகத் தோய்த்து எடுக்கப்படுகின்றன. அப்போது, மரச்சட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள எல்லாக் குச்சிகளின் முனையிலும் ஒரே சீராக மருந்து ஒட்டிக் கொள்கிறது. பிறகு இந்தக் குச்சிகள் மரச் சட்டங்களோடு காய வைக்கப்படுகின்றன. இதற்கு மூன்று மணி நேரம் ஆகும்!''

'' பிறகு, மரச் சட்டத்திலிருந்து காய்ந்த குச்சிகள் எடுக்கப்பட்டுப் பெட்டிகளில் அடைக்கப்படுகின்றன. குச்சிகள் அடைக்கப்பட்ட பெட்டிகளை மரச் சட்டத்தில், பெட்டியின் ஓரப் பகுதி தெரியும்படி வரிசை வரிசையாகப் பொருத்திவைத்து, மருந்துக் குழம்பைப் பிரசினால் பூசி விடுவார்கள். இது ஒரு மணி நேரத்தில் காய்ந்துவிடும். பிறகு 'லேபிள்' ஒட்டப்பட்டு, டஜன் கணக்கில் 'கட்டுகள் ஆக்கப்படுகின்றன'' என்றாள் திலகம்.

உடனே குமாரின் அம்மா, ''மெழுகில் குச்சிகளைத் தோய்த்து எடுப்பதேன்?'' என்று கேட்டாள்.

''வெறும் குச்சிகள் எளிதில் எரியாது. குச்சிகளில் மெழுகு ஏற்றினால்தான் அவை எளிதாக நின்று எரியும்''.

''இந்தக் குச்சிகளை இங்கேயே தயாரிக்கிறார்களா?''—குமாரின் அம்மா கேட்டாள்.

'' இல்லை. மருந்து தடவாத இந்த வெறும் குச்சிகள், மைசூரிலுள்ள தார்வாரிலிருந்து அனுப்பப்படுகின்றன'' என்றான் குமார்.

''ஒரு தீப்பெட்டி என்ன விலை ஆகிறது?'' என்றாள் அம்மா.

'' மற்றத் தீப்பெட்டிகளைக் காட்டிலும் இதன் விலை குறைவானதுதான். ஐம்பது குச்சிகள் நிறைந்த ஒரு தீப்பெட்டியின் விலை ஐந்தே காசுகள்தான்! குறைந்த விலையில் நல்ல தரமானப் பொருட்களை வழங்குதல், கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் முதலியன கதர் கிராமத் தொழிலின் நோக்கமாகும்'' என்றான் குமார்.

'' இங்கு எத்தனை பெண்கள் வேலை செய்கிறார்கள்? அவர்கள் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள்?'' என்ற அம்மாவின் கேள்விக்குத் திலகம், ''இத்தொழிற் கூடத்தில் 40 முதல் 50 பெண்கள் பணி புரிகின்றனர். இவர்களுக்கு மாதம் சுமார் ரூ. 40-லிருந்து ரூ. 60 வரை வருமானம் கிடைக்கிறது'' என்றாள்.

''இதே போலத் தமிழ் நாட்டில் திருநெல்வேலி, தருமபுரி, திருச்சி, சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலும் தீப்பெட்டி உற்பத்திக் கூடங்கள் இயங்கி வருகின்றன ?'' என்றான் குமார்.

உடனே அவன் அம்மா, ''ஒரு நாளைக்கு இங்கு எவ்வளவு தீப்பெட்டிகள் தயாரிக்கின்றனர்? அவை எங்கெல்லாம் அனுப்பப் படுகின்றன ?'' என்று கேட்டாள்.

அதற்குத் திலகம் பதில் சொன்னாள் : ''இங்கு ஒரு நாளைக்கு 25 குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. இவை காதி விற்பனை நிலையங்கள், மருத்துவ மனைகள், சிறைச் சாலைகள். நகர மன்றங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.''

''இவை மட்டுமா? இந்தத் தீப்பெட்டிகள், பம்பாய் கதர்-கிராமத் தொழிற் குழுவின் முயற்சியினால், நமது பாதுகாப்புப் படையினருக்குப் பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றன. இது வரை 10 ஆயிரம் குரோஸ் தீப்பெட்டிகள் அனுப்பப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் 80 ஆயிரம் ரூபாய்!'' என்றான் குமார்.

தீப்பெட்டிகள் கட்டுகள் ஆக்கப்படுகின்றன



''1971–72-ஆம் ஆண்டில் ரூ. 21,700 மதிப்புள்ள தீப்பெட்டிகள் விற்பனையாகியுள்ளன என்றால் இதன் தரத்தினை மக்கள் வெகுவாக வரவேற்கின்றனர் என்று தானே பொருள்'' என்றாள் திலகம்.

''ஒரு சிறிய தீப்பெட்டிக்குள் இத்தனை இரகசியம் அடங்கியிருக்கிறதே!'' என்று வியந்தாள் குமாரின் அம்மா.

''ஏழை எளியவரின் உள்ளங்களிலும், நம் அனைவரின் இல்லங்களிலும் ஒளியேற்றிடும் வண்ணம் தீப்பெட்டித் தொழில் திகழ்ந்து வருவதைப்பார்க்கிறோம். இது போன்ற எண்ணற்ற கிராமத் தொழில்களுக்கு நல்ல ஆதரவு கொடுப்பதன் மூலம், அந்தத் தொழில்கள் வளர்ந்து வளம் பெறுவதற்கு நாம் வழிவகை செய்தவர்களாவோம்!'' என்று பெருமிதத்துடன் கூறினான் குமார்.

—பி.வி.ஜி.

---


காலக் கண்ணாடி



சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

# தீப்பெட்டியின் கதை

நெருப்பு! இது மனிதனின் அரிய சொத்தாகும். செயற்கையாக நெருப்பை உண்டாக்கும் வழியை ஆதி காலந் தொட்டு மனிதன் முயன்று கண்டான். கட்டையோடு கட்டையை உராய்த்தும், 'சக்கி முக்கி'க் கல்லாலும் தீயை உண்டாக்கினான். நூற்றாண்டுகள் பலவாக இவ்வாறு இரண்டு வழிகளால்தான் நெருப்பைக் கண்டான். நெருப்பை உருவாக்கியது பற்றி முதன் முதலாக எகிப்து வரலாற்றில் கி.மு. 4000-ல் குறிப்புக் காணப்படுகிறது. அதில், ஒரு வில், நெருப்புக் குச்சி ஆகியவை பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது. ஏறத்தாழ கி.மு. 2000-ல் தீயும்-விறகும் என்னும் பொருள் படும்படியாக 'ஜெபில்' என்னும் பெயருடன் ஒரு பாபிலோனிய தெய்வத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

ஆனால், 1669-ஆம் ஆண்டில் ஜெர்மானிய வேதியல் நிபுணர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்ட 'பாஸ்பரஸ்' தான், இன்று எளிதாக நெருப்பினை உண்டாக்கும் அரிய சாதனமாகிய தீப்பெட்டி உருவாக முதற் காரணமாகும். 1680-ஆம் ஆண்டில் இராபர்ட் பாய்ல் என்பவர் 'சல்பர்' தடவிய ஒரு குச்சியால், 'சல்பர்' தடவிய ஒரு தாளில் உராய்த்தால் நெருப்பு உருவாகும் என்பதைக் கண்டார். ஆனால் அதைச் செயற்படுத்துவதில் ஒரு தொல்லை இருந்தது. அந்த முறையில் நெருப்பு எளிதில் தானாகவே பற்றிக் கொள்ளும் நிலை இருந்தது. தானாகப் பற்றிக்கொள்ளாமல் நெருப்பைத் தடுப்பதற்கு அதிகப் பணச் செலவு தேவைப்பட்டது. ஆகவே, அந்த முறை செயற்பட முடியவில்லை.

காற்றுப் பட்டவுடன் பாஸ்பரஸ் பற்றிக் கொள்ளும் என்கிற உண்மை தெரிந்ததால், 1780-ஆம் ஆண்டில் பிரான்சில் பாஸ்பரஸ் மெழுகுவத்தி கண்டுபிடிக்கப்பட்டது. மெழுகு நூல் அல்லது தாள் இவற்றின் நுனியில் பாஸ்பரஸ் தடவி ஒரு கண்ணாடிக் குழாயில் வைத்து அடைக்கப்படும். அந்தக் குழாய் திறக்கப்பட்டுக் காற்றுப் பட்டவுடன் பாஸ்பரஸ் எரியத் தொடங்கி விடும். இப்படி, பாஸ்பரஸ், சல்பர் ஆகியவற்றின் உதவியால் நெருப்பை உண்டு பண்ணும் பல முறைகள் கண்டு பிடிக்கப்பட்டன.



தீக்குச்சி மூலம் தீ உண்டாக்கும் முறை 1827-ஆம் ஆண்டு ஆங்கில வேதியல் நிபுணராகிய ஜான்வாக்கர் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. அந்தக் குச்சிகள் மூன்று அங்குல நீளமிருந்தன. அவற்றின் நுனியில் ஆண்டிமனி சல்பைட், பொட்டாசியம் குளோரேட், 'அரபிக் கோந்து' ( Gum Arabic ) ஸ்டார்ச் ஆகியவை தடவப்பட்டிருந்தன. அவற்றில் ஏதாவது சிறிது உராய்ந்தாலும் தீப் பொறி பறப்பதும், கொஞ்சம் வெடித்து விடுவதும் உண்டு.

அவ்வகையான தீப்பெட்டியைத் தயாரித்தோர், தீப்பெட்டியின் மேல் 'இத் தீக்குச்சி எரியும் போது வரும் வாயுவை உட்கொண்டுவிடக் கூடாது' என்று எச்சரிக்கை விட்டனர். அது எரியும் போது வரும் நெடி மிகவும் ஆபத்தானது. 1831-ஆம் ஆண்டில், பிரெஞ்சு நாட்டவரான டாக்டர் சார்லஸ் சௌரியா என்பவர் பாஸ்பரசுக்குப் பதிலாக 'சல்பைட்' பயன்படுத்தினார், இது உலகெங்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அதில் கிளம்பிய நாற்றம் உடலைக் கெடுத்துச் சிலரை முடமாக்கியது ; சிலரைக் கொன்றது ; பல நோயை உண்டாக்கியது.

அதன் பிறகு காஹென், சேவீன் என்ற இரண்டு பேர், பாஸ்பரசை, நச்சு நீக்கிப் பயன்படுத்தினர். அதனால் அவர்களுக்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் 1898-ஆம் ஆண்டில் விற்பனை உரிமை அளிக்கப்பட்டது. இந்த முறை அந்தந்தத் தட்ப வெப்ப நிலைக்கேற்ப மாற்றிக் கொள்ளப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் புதுப் புது வகையான தீப்பெட்டிகள் விற்பனைக்கு வரலாயின. 'ப்ரோமதியன்' தீக்குச்சி என்றொரு வகை வந்தது. ஊசி மருந்து அடைக்கப்பட்டுள்ளது போன்ற சிறிய கண்ணாடிக் குமிழ் ஒன்றுக்குள் 'சல்ப்யூரிக்' அமிலத்தை அடைத்து, அக்குமிழின் மேலே பொட்டாசியம் குளோரைட், சர்க்கரை, பிசின் ஆகியவை தடவப்பட்டு அதன் மேல் ஒரு தாளும் ஒட்டப்பட்டிருக்கும். பல்லால் கடித்துக் குமிழினை உடைக்க வேண்டும். உடனே தாளில் தீப்பிடிக்கும்.

குடிப் பழக்கம் உள்ளவர்க்குத் தனியாக ஒரு தீக்குச்சி தயாரிக்கப்பட்டது. இதைப் பயன்படுத்தும் போது விரலில் தீப்பட்டுக் கருகிவிடாதபடி பாதுகாப்பான முறையில் அது செய்யப் பட்டிருந்தது. அதைப் பற்ற வைத்தால் ஒரு நுனியில் தொடங்கும் தீ, மறு நுனிக்கு வருவதற்குள் தானாக அணைந்துவிடும். ஆகவே பயன்படுத்துவோரின் விரலைக் குச்சியின் நெருப்பு நெருங்காது.

1845-ஆம் ஆண்டில் 'அமார்பஸ் பாஸ்பரஸ்' கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பயனாக இன்றையப் பாதுகாப்பான தீக்குச்சி ( Safety Matches ) கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் குச்சியில் இரசாயனக் கலவையில் ஒரு பகுதிதான் நுனியில் உள்ளது. 'அமார்பஸ் பாஸ்பேட்' தீப்பெட்டியின் பக்கங்களில் தான் தடவப்படுகிறது. தீப் பெட்டியின் மேல் உராய்ந்தால் தான் குச்சியில் தீப்பற்றும். மற்றப்படி, தீ தானாக உருவாகாது. சுவீடன் நாட்டைச் சார்ந்த ஜே.ஈ. லண்ட்ஸ்டார்ம் என்பவர் இந்த வகையை 1855-ல் கண்டுபிடித்தார். இதுதான் இன்று உலகெங்கும் உள்ள தீக்குச்சியாகும்!



# புதிய வாழ்வு

கோ.கண்ணன்



அந்தப் பசுமை, குளிர்ச்சிக் கண்ணாடி இல்லாமலேயே கண்ணுக்குக் குளுமையைத் தந்தது. கிணற்று மேட்டில் நின்ற கருப்பையா பசுமை விளையாடும் வயல்வெளியை ஒரு அரைவட்டக்கோணத்தில்சுற்றிப் பார்த்துவிட்டு, வீரம் சுரக்கும் தன் கொடுவாள் மீசையின் நுனியை, மடித்த தன் நடு விரலால் இருமுறை மேல் நோக்கித் தட்டி விட்டுக்கொண்டார். அந்த வயல்வெளி பூராவுமே தன் ஒருவனுடைய உழைப்பினுல் சிரித்துப் பொங்குகின்றது என்பதை நினைக்கும் போது அவருடைய நெஞ்சு தானகவே மேலே ஏறித் தாழ்ந்தது.

கொய்யா மரத்தடியில் நின்றிருந்த தன் மனைவி செல்லம்மாவை அவர் ஏறிட்டு நோக்கினுர். ''ஏ புள்ளே! இங்கே வா''. பக்கத்தில் வந்துநின்ற செல்லம்மாவிடம், தன் உழைப்பின் மகிமையை விளக்குவதுபோல் வயல்வெளி முழுவதையும் ஆட்காட்டி விரலால் சுட்டிக் காட்டினுர். ஆண்மையின் இலக்கணமாக நிற்கின்ற இந்த வீரனுக்குத் தன்னுல் ஒரு வாரிசைத் தர இயலவில்லையே என்ற ஏக்கம் அவள் கண்களில் பளிச்சிட்டது. ''என்ன இருந்து என்னங்க.... ஒரு மவனைப் பெத்து, ஆளாக்கி, அவனையும் உங்களாட்டம் வயலுக்கு அனுப்ப முடியலையே'' என்று பெருமூச்சு விட்டாள். ''போடி பயித்தியம்....—குழந்தையாம் குழந்தை! பெத்தாத்தான் குழந்தையா — இதோ பாரு வளந்து நிக்குதே வாழைமரம் அது ஒரு குழந்தெ—கதிரு முத்தித் தள்ளாடப் போற நெல்லு வயல் பூராவுமே நிறஞ்ச குழந்தைங்க தான் — கண்ணு மூக்குன்னு குழந்தையெ வளர்க்கறதவிடக் கரும்பு, நெல்லுன்னு பயிரை வளர்த்தா, நாட்டுக்கு நல்லது, நமக்கும் நல்லது'' என்று நிறைவோடு குறிப்பிட்டார் கருப்பையா.

அந்தப் பக்கம் வந்துகொண்டிருந்த பக்கத்துக் காட்டுக்காரனை தானப்பன், கருப்பையாவுக்குப் பக்கத்தில் வந்து நின்று, அவருடைய வயல் செழிப்பைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுவிட்டு ''பெரியண்ணே! நீங்க ஒத்தையிலே உழைச்சு இவ்வளவு நல்லா வயலெ வெச்சிருக்கீங்க. நான் பாருங்க, இந்த மூணு மக்கமாரோட சேந்து உழைச்சும் கூட உங்க அளவுக்கு வெள்ளைவைக் காண முடியலியே'' என்று ஏக்கத்தோடு கூறினுன்.

தொடர்ந்து மேலும், ''உங்களுக்கென்ன, உங்க வயல்தான் உங்க கொழந்தே'' என்றுன். இதைக் கேட்டுப் பரவசப்பட்ட கருப்பையா, ஓரக் கண்ணுல் தன் மனைவியைப் பெருமை பொங்கப் பார்த்தார். மடித்த அவருடைய நடுவிரல் மீசை நுனியை இருமுறை மேல் நோக்கித் தட்டிவிட்டது.

* * *

நன்கு உழைத்து, நிறைந்த விளைவைக் காணும் உழவர் பெருமக்களுக்கு அரசாங்கம் தந்து ஊக்கமூட்டும் பரிசை, ஏதாவது ஒரு பயிர் மேல் வைத்துக் கருப்பையா ஆண்டு தோறும் பெற்றுவந்தார். அதனுல் கிராமச் சேவகரான அருளப்பன் அவருக்கு நல்ல பழக்கமானுர். அவருடைய உதவியால் தான், அரசாங்கம் பசுமைப் புரட்சித் திட்டத்தில் தரும் எல்லாச் சலுகைகளையும் பெற்றுப் புதிய முறையில் பயிர்களை விளைவிக்கலானுர். பக்கத்துக் காட்டுக் காரர்களுக்குப் பொறுமை ஏற்படுகிற அளவுக்கு அவருடைய உழைப்பு செழித்தது.

ஒரு நாள், வேலங்குச்சியால் பல் விளக்கிக் கொண்டு கிணற்று மேட்டில் நின்று கொண்டிருந்த கருப்பையா, ''ஐயோ! ஐயோ'' என்ற அலறலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். பக்கத்து வீட்டு செவத்தாயியை, ஒரு முரட்டுக் காளை கொம்பைத் தாழ்த்திக் கொண்டு விரட்டிக்கொண்டு வந்தது. வேலங்குச்சியைத் தூக்கி எறிந்துவிட்டுப் பாய்ந்த கருப்பையா, அதன் இரு கொம்புகளையும் பற்றிக்கொள்ள, காளை பாய்ந்து ஓட, தலைகீழாகச் சிரசாசனம் செய்வது போல், கொம்பில் ஊன்றிய கைகளுடன் அவர், காளைக்குமேல் காணப்பட்டார்; என்றுலும் பிடித்த பிடியை விடவில்லை. அவருக்கு வயது ஐம்பது என்று அந்த நிலையில் சொன்னல் யாரும் நம்பவே மாட்டார்கள். காளை முரண்டு பிடித்துச் சுற்றிச் சுற்றிப் பாய்ந்தது. உடம்மை வளைத்து நிலத்தில் காலூன்றிய கருப்பையா, இரண்டு கொம்புகளையும், எதிரெதிர்ப் பக்கங்களில் அழுத்தித் தலையை வேகமாகக் குலுக்கினுர். பெரும் போராட்டத்திற்குப் பின்பு, வாயில் நுரைதள்ளக் காளை தளர்ந்து விழுந்தது. அதுவரை அக்கம் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த அனைவரும் கருப்பையாவின் அருகில் ஓடிவந்துநின்றுகொண்டனர். முதுமையிலும் பூரித்துக் கிளர்ந்தெழுந்த ஆண்மை மிக்க அவருடைய தோற்றம், அவர்களுக்கு ஒரு மலைப்பாகவே இருந்தது. அவரையும் அறியாமலே அவருடைய நடுவிரல் மடிந்து மீசை நுனியை இரு முறை மேல் நோக்கித் தட்டி விட்டது.

* * *

''இத்தனை நாள் நமக்குத் தெரியாமல் இந்தச் செடி எப்படி வயலில் களையாக வளர்ந்து நிற்கிறது?'' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்ட கருப்பையா, செல்வம்மாவை உரக்க அழைத்தார். ''ஏ புள்ளே! இங்கெ இருக்குதே இந்த முள்ளுச்செடி, இத என் இத்தனை நாளா உட்டு வெச்சிருக்கே?'' அவள் பக்கத்தில்

வந்து சொன்னான், ''இது வெஷச் செடியாம். இதனுடைய தண்டுலெ விஷப்பால் இருக்குமாம். அதனுல்தான் புடுங்கறதுக்குப் பயப்பட்டுக்கிட்டு உட்டுட்டேன்''. ஏதோ பகைவனைப் பார்ப்பதுபோல் அந்தச் செடியைப் பார்த்த கருப்பையா சரேலென்று கருக்கரிவாளைத் தன் இடுப்பிலிருந்து உருவினார். உடனே செல்லம்மா, 'என்னங்க, உங்க முரட்டுத்தனத்தை அந்தச் செடிகிட்டத்தான் காண்பிக்கணுமா? ஏதாவது ஆயிடப்போவுது' என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே குனிந்து, ஒரே வீச்சாகச் செடியைத் துண்டித்தார். அதே சமயம் தண்டிலிருந்து பீறிட்ட விஷப்பால் அவர் முகத்தில் அடித்துக் கண்களில் தெறித்தது. அப்படியே அரிவாளைப் போட்டு விட்டு முகத்தைப் பொத்திக் கொண்டு ''ஐயோ எரியுதே, எரியுதே, கண்ணு எரியுதே'' என்று துடி துடித்தார் கருப்பையா.

கண் இமைகளிலும், முகத்திலும் ஏற்பட்ட புண்களைவிடக் கண்ணில் பால் பட்டதால் ஏற்பட்ட எரிச்சலை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. வந்து பார்த்த நாட்டு வைத்தியர், சாதாரணமாகப் புண்ணுக்குக் கட்டுவதுபோல் பச்சிலையை அரைத்துக் கண்களின் மேல் அப்பிக் கட்டுபோட்டுவிட்டு ''எட்டு நாள் கழிச்சுதான் கட்டை அவுக்கணும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். எட்டு நாட்களுக்குக் கண்ணை விழிக்காமல், வயலைப் பார்க்காமல், தன்னால் எப்படி இருக்க முடியும் என்று எண்ணிப் பார்க்கவே அவரால் முடியவில்லை.

மறுநாள் காலையில், ''இன்னிக்கி வயலுக்குத் தண்ணி கட்டுற முறையில்லே'' என்று மமிட்டியைத் தூக்கிய கருப்பையாவை, ''என்னங்க கண்ணுக் கட்டோட எப்பிடித் தண்ணி கட்றது'' என்று கூறித் தடுத்தாள் செல்லம்மா. ''போடி—கட்டெ அவுத்து எறியப் போறேன்'' என்று கையைக் கட்டருகே கொண்டு சென்ற கருப்பையாவின் கால்களைக் கட்டிக் கொண்டு கெஞ்சித் தடுத்து நிறுத்துவதற்குள் போதுமென்ருகிவிட்டது செல்லம்மாவிற்கு. ''ஐயோ! இன்னிக்குத் தண்ணி கட்டாமப் போனு பயிரெல்லாம் வாடிடுமே.... பிறகு காஞ்சிடுமே'' என்று துடித்தார். ''பரவால்லீங்க! என்ன பண்றது......இந்தப் பட்டம் தப்பனக்கூட, நம்ம ஊட்டுலே வேண்டிய தானியம் சேத்து வச்சிருக்கேன். உங்க கண்ணு நல்லானு போதும். அடுத்த பட்டம் வெள்ளவு செஞ்சிக்கலாம்.'' என்று சமாதானப்படுத்தினள் செல்லம்மா.

எட்டாம் நாள் வைத்தியர் வந்தார்.

''என்னப்பா கட்டெ அவுக்கலாமா?''

''சீக்கிரமா அவுத்து எறிங்க. நான் போயி வயலெப் பாக்கணும்'' வைத்தியர் கட்டை அவிழ்த்தார். அடுத்த கணம் கருப்பையா இடி இடிப்பதுபோலக் கத்தினர். ''ஐயோ செல்லம்மா, கண்ணு தெரியலியே—வைத்தியரய்யா, எதுக்கால இருக்கிறது ஒண்ணுமே விளங்கலியே நான் என்ன பண்ணுட்டும்...? வயலெ எப்படிப் பாத்துக்கறது? எனக்கு ஒரு மவன் இருந்தாலும் வயலெப் பாத்துக்குவான். இப்ப யாரு வந்து பாத்துக்குவா?'' என்று அலறினர் கருப்பையா. ''என்னலெ முடிஞ்சதெ நான் பண்ணினேன். இனிமேல வேணும்ன டவுனுக்குப் போயி பெரிய—கண் டாக்டராத்தான் பாக்கணும்'' என்று சொல்லிவிட்டு நழுவினர் வைத்தியர்.



டவுனுக்குப் போறது—டாக்டரப் பாக்கறது—ஆஸ்பத்திரியிலெ தங்கறது—அங்கெ செலவு—மருந்துச் செலவு இதையெல்லாம் நினைத்துப்பார்த்து, ஒரு ஐநூறுவது வேணுமே என்று சொல்லிக்கொண்ட கருப்பையா, பணமில்லாக் குறையால் தளர்ந்து உட்கார்ந்துவிட்டார்.

அவரால் வயலைவிட்டு விட்டு வீட்டிலிருக்க முடியவில்லை. தடுமாறியபடியே வயலுக்குச் சென்று, வரப்பில் நெடுக கோல் ஊன்றிய வண்ணம் நடந்து கொண்டாவது இருப்பார். அன்றைக்கு எதிரில், ஒரு கன்றுக் குட்டி, வரப்பில் வேகமாக வந்து கொண்டிருந்தது. பின்னலேயே

ஓடிவந்த தானப்பன், ''பெரியண்ணே ஒதுங்கிக்கிங்க ...... கன்னுக்குட்டி ஓடியாருது '' என்று சொல்லிக் கொண்டே வந்தான். கோலை எறிந்துவிட்டுக் கன்றைப் பிடிக்கக் கையை முன் பக்கமாக நீட்டிக்கொண்டு தடுமாறிய கருப்பையாவைத் தள்ளிவிட்டுக் கன்றுக் குட்டி ஓடியது . . . வயலில் போய் விழுந்தார் கருப்பையா. பழக்க தோஷத்தால், அவருடைய, நடுவிரல் மடிந்து மீசை நுனியை இருமுறை மேல்நோக்கித் தட்டி விட்டது.

ஓடிவந்த தானப்பன் அவரைத் தூக்கி, நிறுத்தினான். ''என் நெலமையெ பாத்தியா தானப்பா—கண் இருந்தப்போ முரட்டுக் காளையையே அனுவசியமா அடக்கினேன். இப்ப கண் தெரியலே . . . ஒரு கன்னுக் குட்டிகூட என்னெத் தள்ளி விட்டுடிச்சே'' என்று கண்களில் நீர்வழியக் கூறினார். பொறுமைக் கண்களோடு மூப்பனாரைப் பார்த்துப் பழக்கப்பட்ட தானப்பன், இப்போது பரிதாபத்தோடு அவரைப் பார்த்துவிட்டுக் கீழே கிடந்த கோலை எடுத்து, அவர் கையில் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

மறுநாள் நடுப்பகல் கொய்யா மரத்தடியில் உட்கார்ந்து முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்த கருப்பையாவிடம் வந்து நின்றாள் செல்லம்மா.

''விசயம் தெரியுமா உங்களுக்கு ....செவிடனூர் பொன்னப்பன் ....''

''யாரு ....நாலஞ்சி வருசமா கண் தெரியாமல் கிடக்கறானே அந்தக் கிழவனா?''

ஆமா—அவரு மவன் பட்டாளத்திலே இருந்து வந்திருக்கு ; கிழவனெ டவுனுக்கு கூட்டிக்கிட்டுப் போயி, கண் ஆப்பரேசன் பண்ணிக்கிட்டு வந்துதாம். இப்ப கிழவன் கண்ணாடி போட்டுக்கிட்டு உத்து உத்துப் பாக்குறானாம் ?''

''நமக்கு ஒரு மகன் இருந்திருந்தா என்னைக் கூட இப்படிச் செஞ்சிருப்பானில்லே- அதானெ சொல்ல வந்தே'' என்று கண்களில் நீர் மல்கக் கூறி விட்டு, மனைவியின் கையில் கண்களைப் புதைத்துக் கொண்டு சின்னக் குழந்தை மாதிரித் தேம்பித் தேம்பி அழுதார் கருப்பையா.

* * *

''என்ன பெரியவரே சவுக்கியமா? ஒரு மாசம் வீடுலே போயிட்டேன். அதான் இந்தப் பக்கமே வரலே'' என்று கூறிக்கொண்டே வந்த கிராமச் சேவகர் அருளப்பன், கருப்பையாவின் பக்கத்திலே வந்ததும் திடுக்கிட்டுப் பதைபதைத்துப் போனார்.

''கண் அவிஞ்சுப் போச்சே சாரு . . . . . கோல் ஊனாமலே நடக்கற தெம்பு உடம்பிலே இருந்தும், கண் தெரியாமப் போயி கோல் ஊனவேண்டி வந்துட்டதே சாரு '' என்று நாத்தழுதழுக்கக் கூறினார் கருப்பையா. ''ஏன் இப்படி ஆச்சு?'' என்று கேட்ட அருளப்பனிடம் நடந்த செய்திகளைக் கூறினார் கருப்பையா.

''என்ன பெரியவரே, இத்தினி நாளா கவனிக்காம விடலாமா? டவுனுக்குப் போயி ஆப்பரேசன் செஞ்சிக்கிட்டிருக்கிறது தானே?'' என்று கேட்டார் அருளப்பன். ''நான் என்னா பண்ணுவேன் சாரு? அதுக்கு ஆவற செலவுக்கு ஒன்னு கொஞ்சம் நிலத்தெ விக்கணும். இல்லேன்னா மாடுகன்னே விக்கணும் . . . . . . என் கொழந்தெ மாதிரி வளத்துட்டு, விக்கறதுக்கு என் மனசு இடம் தரலியே'' என்று வேதனையோடு கூறினார் கருப்பையா.

''நீங்க நிலத்தையோ, மாட்டையோ விக்காமயே உங்களுக்குக் கண் ஆப்பரேசன் செய்ய ஒரு வழி பொறந்திருக்குது பெரியவரே . . . . . நம்ம மாநிலத்தின் முதல் அமைச்சர், ஏழைங்களுக்குக் கண் ஆப்பரேசன் செய்ய ஒரு வழி செஞ்சிருக்கார். அதுப்படி இந்தப் பகுதியிலே வர்ற மாசம் 14-ஆம் தேதி பெரிய பெரிய டாக்டருங்க வருவாங்க . . . . . . செலவே இல்லாம ஆப்பரேசன் செய்வாங்க . . . . . . அதுக்கு வேண்டிய ஒத்தாசையெ நான் பண்றேன். தைரியமா இருங்க'' என்று கூறிவிட்டுச் சென்றார் அருளப்பன்.

கண்சிகிச்சை முகாமிற்கு அருளப்பரின் உதவியோடு வந்த கருப்பையாவுக்கு எல்லாம் நல்லபடி நடந்தது. அவர் வாங்கிய உழவுப் பரிசுகளைப் பற்றிக் கிராமச் சேவகர் டாக்டர்களிடம் குறிப்பிட்டதால், டாக்டர்கள் அவருக்குக் கண் சிகிச்சை செய்வதையே ஒரு பெருமையாகக் கருதிச் செயல் பட்டனர். இழந்த கண்களை மீண்டும் பெற்ற கருப்பையா கண்ணாடி அணிந்துகொண்டு கிராமத்திற்குத் திரும்பினார்.

கிணற்று மேட்டில் நின்று கொண்டிருந்த கருப்பையாவிடம் வந்த தானப்பன், ''பரவாயில்லையே . . . . . . . . கண் வந்துட்டதா?'' என்று கேட்டான். ''செவிடனூர் கிழவன் பொன்னப்பனுக்கு மவனாலெ கண் கெடச்சுது. எனக்கு யாரோ ஒரு புண்ணியவானாலே கண் கெடச்சுது. இதுக்குக் காரணமாயிருந்த அந்தப் புண்ணியவானே நான் நேரிலேகூட பாத்தது கிடையாது . . . ஆனா, அவராலெ என் கண் குணமாயிட்டுது. அவரு எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும் . . . . . . . என்னைக் கூட்டிக்கிட்டுப் போயி உதவி செஞ்ச கிராமச் சேவகர் ஐயா, டாக்டருங்க எல்லாரும் நல்லா இருக்கணும்'' என்று மனம் நிறைய வாழ்த்திய கருப்பையாவிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றான் தானப்பன்.

கருப்பையா வயல்வெளியை ஓர் அரை வட்டக் கோணத்தில் சுற்றிப் பார்த்தார். மண் திட்டுகளாகக் காட்சி அளித்தது வயல்வெளி. ''இன்னும் ரெண்டே மாசத்துலெ இந்த வயலெ பழையபடி பச்சப் பசேலுன்னு ஆக்கிக் காட்றேன்'' என்று தனக்குள் கூறிக்கொண்டார் கருப்பையா. மனத்தில் நம்பிக்கை பாய்ந்ததும், அவருடைய நடுவிரல் மடிந்து மீசைநுனியை இருமுறை மேல்நோக்கித் தட்டிவிட்டது; அத்துடன் மூக்குக் கண்ணாடியையும் சரிசெய்தது.

கருப்பையா கம்பீரத்தோடு மனைவியை அழைத்தார். ''ஏ புள்ளே ! அந்த மமிட்டியைக் கொண்டா - வயல்லெ இறங்கறேன்''.

செல்லம்மா மமிட்டியோடு வந்து கொண்டிருந்தாள். வயல் குழந்தைக்குப் பச்சை சட்டை போடும் புதிய வேகத்துடன் வயலில் காலூன்றினார் கருப்பையா.

# வேலையின்றி இருப்போரின் வேதனை தீர்ந்து வருகிறது

பொறியியல் பட்டம் அல்லது 'டிப்ளமா' அல்லது தொழில் நுட்பப் பயிற்சி பெற்றிருந்தும் வேலை வாய்ப்பின்றி இருப்பவர்களின் வேதனையைத் தீர்ப்பதற்காக, வேலை பழக்கும் சிறப்புப் பயிற்சித் திட்டம் (Special Apprenticeship Programme) ஒன்றை, இந்திய அரசின் முழு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு அண்மையில் துவக்கியது. இத் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் 600 பொறியியல் பட்டதாரிகளுக்கும், 1,000 டிப்ளமா தாரர்களுக்கும், 1,000 தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலைஞர்களுக்கும் (Craftsman) இரண்டு ஆண்டுக்காலப் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. இத் திட்டத்திற்கு 47 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்குத் தேவையான முழுநிதியையும் இந்திய அரசு வழங்கிட முன் வந்துள்ளது.

இத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் இதுவரை (6–12–1972 வரை) 503 பொறியியல் பட்டதாரிகளும், 762 டிப்ளமா தாரர்களும் 874 தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலைஞர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வேலை பழகும் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு திங்கள் தோறும் கீழ்க்கண்டுள்ள வாறு உதவித் தொகை (Stipend) வழங்கப் பெறும்.

பட்டதாரிகள்—ரூபாய் 250
டிப்ளமாதாரர்கள்—ரூபாய் 150.

சென்னை நகரில் பயிற்சி பெறும், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலைஞர்கள்—ரூபாய் 90 முதல் 110 வரை.

பிற இடங்களில் பயிற்சி பெறும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலைஞர்கள்—ரூபாய் 80 முதல் 100 வரை.

இவ்வளவு குறுகிய காலத்திலேயே, தொழில் நுட்பத் தகுதி பெற்றிருந்தும் வேலை வாய்ப்புப் பெறுதிருந்த 2,134 பேர்களுக்கு வேலை பழகும் வாய்ப்பையும், உதவித் தொகை பெறும் வாய்ப்பையும் கொடுத்துள்ளது மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

வேலை வாய்ப்பின்றி இருக்கும் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற கலைஞர்களுக்கு வட்டி இல்லாக் கடன் கொடுத்து உதவும் திட்டத்தைச்(Interest—Freeloan assistance Scheme unemployed craftsman) செயல்படுத்துவதிலும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டம் முதலில், ரூபாய் 1,000 மதிப்புள்ள கருவிகளையும், தளவாடங்களையும், வாங்குவதற்கு வட்டியில்லாக் கடன் கொடுக்க வகை செய்தது. பிறகு இத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு வட்டியில்லாக் கடனுகை, வழங்கும் தொகை 1,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடனுகை வழங்க ரூபாய் 30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர்த் திங்களில் துவக்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ், கடன் உதவி கோரி 1,000 பேர்கள் மனுச் செய்து கொண்டுள்ளனர். அவர்களில் 630 மனுதாரர்கள் கடன் உதவி பெற வேளாண்மை மற்றும் பயிற்சித் துறையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் 193 பேர்களுக்கு—அவரவர் துவங்கவிருக்கும் தொழிலுக்குத் தேவையான—1,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையான மதிப்புள்ள கருவிகளும், தளவாடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சி அளித்து, மறு வாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் திட்டப்படி 22,300 ரூபாய் செலவில் புத்தகம் 'பைண்ட்' செய்யும் நிலையம் ஒன்றை (A book binding Unit) கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அந் நிலையத்தில் துவக்கத்தில் உடல் ஊனமுற்ற 16 பேர்களுக்குப் புத்தகங்களைப் 'பைண்ட்' செய்வது பற்றிய பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெறுகின்றவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் தோறும் 25 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும். ஆறு மாத காலப் பயிற்சிக்குப் பிறகு, அவர்களுக்குத்தேர்வு நடத்தப்படும். அத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள், அரசினர் அச்சுக்கூடத்தில் பணியாளர்களாக நியமிக்கப் படுவார்கள்.

இவ்வாறு பயன்மிகு திட்டங்களை நிறைவேற்றிக் குறிப்பிடத் தகுந்த சாதனைகளை ஏற்படுத்தி வருகிறது : தமிழ்நாடு அரசு!




கயற்கண்ணி — நப்பின்னை! சங்கத் தமிழ் முழங்குகின்ற தமிழகத்துச் சோலையிலே இரு மயில்கள்! இணைந்திருந்து இன்பங் கூறுகின்ற இசைக் குயிலினங்கள்! மூத்தவள் முத்தெடுத்துக் கோத்தது போல் சிரிப்புக்காரி—முழுநிலவு காட்டுகின்ற முகத்துக்காரி! மொண்டு தரும் சுவையனைத்தும் உண்டு களிப்பதற்கு உலகினிலே யாருக்கு வாய்ப்போ என்று ஊர் பேசும்; உவகை சிந்தும் பவள இதழ் கண்டு.

கற்கண்டு இன்னொருத்தி—வயதினிலே இளைய தோழி! தங்கம் மேனி . . . . . குணத்தினிலே கொஞ்சம் '' கூனி ''!

ஓடையிலே—குளிர் தென்றல் மிதக்கின்ற மேடையிலே—அருவியோரத்து அழகுக் காவின் வாடையிலே—அவ்விருவர் ஆடிப் பாடிச் சோடிப் புள்ளெனவே பறந்திடுவர்! காண்போர், தம்மை மறந்திடுவர்!

கிரேக்கத்து எழிலாரும் யவனத்துப் பெருமகனும்—தமிழகத்துக் கரையோரம் இவர்களைக் கண்டதனால் மறுமூச்சு வாங்குவதற்கும் மறந்து போனார்—தலை குனிந்தார்—நிலை குலைந்தார் . . . . . . . . . . .

தென்னகத்துச் சந்தனத்தை வாங்குவதற்கும், மலைப்பாம்பு—மயில்—மிளகு—ஏற்றிச் செல்வதற்கும்—யானைத் தந்தத்தை நாவாயில் அடுக்கிப் போவதற்கும் வெளிநாட்டு வாணிபக் கோமான்கள் வரும்போது கயற்கண்ணி—நப்பின்னை இருவரையும் கண்டு விட்டால், '' கிரேக்கத்தை, யவனத்தைப் பண்ட மாற்று செய்து கொள்வோம்; இந்தக் கிள்ளைகளைத் தந்திடுவீர் '' எனக் கேட்பார் என்று கூறிக் கிழட்டுப் பெண்டிரெல்லாம் அவர் தம் அழகுக் கீர்த்தி தன்னை வியந்துரைப்பார்!

வாய்ச் செம்புட்கள் தங்குவதற்கு இதயக் கூண்டுதனைப் பெற்றிருக்கும் ஆடவர் தாம்

தேனலைகள்

யாரோ—எந்த ஊரோ—என்ன பேரோ—எனப் பேசி விணுக் குறி முகங் காட்டிக் கலைந்தார் அவ்வூரார்!

'' கயற்கண்ணி, நப்பின்னை தோழிதானே—நப்பின்னை நம தருந் தங்கைதானே—இவள் மூலம் முயன்று பார்த்தால் அந்தத் தித்திக்கும் செந்தேனை யார் கொள்வார்; நம்மையன்றி? '' என எண்ணி உழைக் கலானுன், மணி வேலன்! மாணிக்கச் சிற்பத்தின் அண்ணன்; மான், புலி, வேழம் கொல்வதையே தொழிலாய்க் கொண்ட பெருவீரன்!

நல்ல தருணம் வாய்க்கின்ற போதெல்லாம் கயற்கண்ணி காதினிலே அண்ணனது அழ காற்றல் வலிவை யெல்லாம் அளந்தளந்து சலித்து விட்டாள் நப்பின்னை!

துடிக்கின்ற அண்ணனிடம் ஓர் நாள், '' தொட்டவுடன் துவளுகின்ற தோகையல்ல கயற்கண்ணி! முயற்கொம்பே அவளிடத்தில் காதல் எதிர் பார்க்கும் வேலை யென்பேன்; எதற்கும் புலி கொன்று நகம் கொண்டு வருவாய்! . . . . . புலி நகத்தாலி கட்டும் போர்க்குடி மகனுக்கு ஒப்புவாய் என்று அவள் மனத்தை மாற்றுகின்றேன். அதுவும் முழு உறுதி அல்ல அண்ணு! '' என மொழிந்து காட்டுக்கு அனுப்பி வைத்தாள்!

* * *

ஓர் நிலவுக் காலந்தன்னில் விடிவெள்ளி தோன்றும் மட்டும் தோழிதனைக் காணுமென்று தேடி வந்தாள் நப்பின்னை! கடற்கரையின் வெண் மணலில் தனி நடந்து வருகின்ற கயற்கண்ணி விழி யெல்லாம் வெண் சிவப்பாய் இருத்தல் கண்டாள் . . . . . . . . விளக்கமேதும் தேவையில்லை; புரிந்து கொண்டாள் விவரமெல்லாம்! . . . . . . . . .

'' என் அண்ணன் உனக்காகப் புலிநகம் கொண்டு வரப் போனான்—இன்னும் வரவில்லை'' யென்று சொன்னாள்.

'' வரவேண்டாம்; வந்தாலும் எனக்கு அதைத் தர வேண்டாம் — வாழ்க்கைக்குத் துணையொன்றை நாடி விட்டேன் ''.

—மொழிந்தவாறு கழுத்தினிலே ஆடுகின்ற முத்தாரம் எடுத்து முத்தம் தந்தாள்! ........

'' முத்துக் கொடுத்து முத்தம் பெற்றாளோ? முட்டாள் நீ ஏமாந்து விட்டாய்! தமிழ் வீரம் காட்டுகின்ற செயல்புரிந்து புலி நகத்தைப் புதுப் பரிசாய்த் தந்து மணம் புரியும் வழக்கத்தை மாற்றி விட்டாய்— மறத்தியல்ல!'' எனக் கடிந்தாள்!

புன்னகையைத் தவழவிட்டுக் கயற்கண்ணி, பொன்னுதிரும் வார்த்தைகளால் பதில் சொன்னாள்! ...................

''அடி தோழி! அவசரப்படாதே! ..........ஒளிமுத்து என்கின்ற உயர் வீரன்— உத்தமன்! ........என் உள்ளங் கவர்ந்தான்—மறத்தி நான்— அதனால் மாவீரர்! ........புலி நகம் பரிசாக வேண்டுமென்றேன்! புதுவகைப் பரிசு தருவேன் என்றான்—முத்தெடுத்து அளித்திட்டான் — என்னையும் சேர்த்தெடுத்து அணைத்திட்டான்! ..................''

'' கடையினிலே ஒரு முத்து, ஒளிமுத்து வாங்கித் தருவதற்கும், காட்டகத்தில் புலி வேட்டை ஆடுவதற்கும் வித்தியாசம் நிரம்ப இருக்குதடி தோழி! .... ......''

'' கடையினிலே அல்ல; என் கண் எதிரே கடல் நடுவே குதித்தான் .... .....பின்னர் முத்துச் சிப்பிகளோடு உதித்தான்!

அடுத்த இதழுடன்

இலவச இணைப்பு

**நல்வாழ்வு**

**பொங்கிட ....**

'' இதோ, நானுந்தான் நேற்றிரவு வாழ்வுக்குத் துணை கண்டேன்! .......... புலி வேட்டைப் புலியொருவன் .......நம்பியெனும் நல்லோன் நகமொன்று பரிசளித்தான். நான் அவனுக்கானேன்! ''

'' பரிசுக்கும், பாராட்டும் வீரத்துக்கு மட்டும் பாவையர்கள் பறிகொடுக்க வேண்டுமோ உள்ளம்! ........ பண்போடு —அழகோடு — பராக்கிரமத்தோடு—மணவாளன் வருவதினிலே மரபுக்கு மாசு வருமோ பெண்ணே? கடையினிலே முத்தெடுத்துத் தந்தார் என்கின்றாய் என் கணவன். காட்டினிலே புலிகொன்று வந்தான் உன் கணவன் என்று யார் கண்டார்? ''

'' நம்பிக்கையில்லை யென்னாதே! நம்பி அவர் பெயர்!''

'' இந்த மலருக்குத் தும்பி! அதனால் புகழ்ச்சியுரை! ''

'' வார்த்தை நீள வேண்டாம் —வாழ்த்துகின்றேன் — வருகின்றேன்—என் வீரர் காத்திருப்பார்! ''




நப்பின்னை தன்முகம் கோணிப் போய் விட்டாள் அதைவிட்டு!

'' பித்துப் பெண்! இவள் அண்ணன் இருபுலியை ஒன்றாய்க் கொல்வான்—ஆயின் என்? .... அவன் பண்பு பரத்தை வீட்டில் கேட்டால் தெரியும்! '' முணுமுணுத்துச் சென்றாள் கயற்கண்ணி!

* * *

அண்ணனுக்குக் கயற்கண்ணி வாய்க்கவில்லை யென்கிற சீற்றமுடன் வீடு வந்த நப்பின்னை, மணிவேலன் மனமுடைந்து இருப்பதையும் கண்டு விட்டாள். மன்னிப்புக் கேட்டு நின்றாள்.

'' இனியென்ன; போகட்டும்; இலவு காத்த கிளியானேன்'' எனச் சொல்லி எழுந்து சென்றான் மணிவேலன்!

'' என்ன அண்ணா—எனக்கோர் துணைவன் தேடி விட்டேன்! ........ இதோ பார். அவன் கொன்ற புலி நகம்''! எனத் தந்தாள் ....ஆர்வமுடன்!

'' யார் அவன்? '' என்றான் ஆசையுடன்!

'' நம்பி,'' என்றாள்.

'' அவனா? ..... அவன் கொன்றானா புலியை? ...நான் கயற்கண்ணிக்காகக் கொன்ற புலி நகத்தையன்றோ நம்பிக்குக் கொடுத்தேன், அவள் மணச் சேதி கேட்ட பிறகு! ''

—எனச் சொல்லிச் சிரித்தான் வேலன்!

வீரனை மணந்ததாய் எண்ணியிருந்த அத்தோழி, வீழ்ந்துவிட்டாள் பூமிதனில் மூர்ச்சித்து!

நயவஞ்சகன்தான் அந்த நம்பி என்ற சேதி அதன் பிறகு கேள்விப்பட்டாள்; ஆவிதனைக் கடலுக்கு அர்ப்பணித்தாள்! மறத்தியானாள்!

# என்ன பெயர் வைக்கலாம்?

சிலப்பதிகாரத்தில் சுருங்கை (கரந்து படை) என்னுஞ் சொல் கீழே மறைவாகச் செல்லும் பாதையைக் குறிக்க வழங்கப் படுகிறது. ஆகவே, அதனைச் Sub-way என்பதற்கிணையான பெயராகப் பயன் படுத்தலாம்.

மாடம் என்னுஞ்சொல் மேல்நிலை என்னும் பொருளில் மாடக்கோவில், மாட வீடு என்றெல்லாம் ஆளப்படுதலைப் போல் மாடச்சாலை என்றும் ஆளப்படலாம். இதனை ஜெமினி அருகே அமைக்கப் பெறும் Fly-overக்கு இணையாகப் பயன்படுத்தலாம். அதனை மேம்பாலம் என்பது தவறானது; Over-bridge என்பதற்கே அது பொருந்தும்.

இவ்வாறு மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர் மா. நன்னன் தமது கருத்தைத் தெரிவிக்கிருர்.



# சட்டமன்றம்

## தந்த தகவல்கள்

ஓமார்—,,,

தமிழகச் சட்டமன்றம் டிசம்பர் திங்கள் 2-ஆம் நாளிலிருந்து 15-ஆம் நாள் வரை கூடியபோது நிகழ்ந்த நடவடிக்கைகளில் கிடைத்த சுவையான சில புள்ளி விவரங்கள்.

தமிழகத்திலுள்ள 90 நகராட்சிகளில் குடிநீர் வசதி செய்யாதவை 10 தான் உள்ளன. அந்த அளவுக்கு நாம் முன்னேறி வருகிறோம். அதுபோலவே, கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் தீவிரத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

* திருமணத்தை அதிகச் செலவு இல்லாமல் சிக்கனமாக நடத்திக் காட்ட முன்வரவேண்டும். 1971—72-ஆம் ஆண்டில் அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடனாக ரூ. 2 இலட்சத்து 11 ஆயிரம் வழங்கப்பட்டது.

* இளைஞர் அணியில், பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்போது 288 பெண் தொண்டர்கள் இவ்வணியில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே ஒரு மாதப் பயிற்சி என்றிருந்தது, 2 மாதப் பயிற்சியாக ஆக்கப்பட்டிருக்கிறது. பயிற்சி முடிந்ததும் அவர்கள் 2 ஆண்டுகள் அங்குப் பணியாற்ற வேண்டும். அவர்கள் பவானி சாகரிலும், சென்னை சமூக நலப் பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சி பெறுகிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இம்மாதிரியான 'இளைஞர் அணி' இல்லை. கேரள அரசு இதுபற்றி நம்மிடம் தகவல் கேட்டிருக்கிறது.

* சென்னை நகரில் 1,234 கை ரிக்ஷாக்கள் இப்போது இருக்கின்றன. இவற்றில் தொழிலாளர்களுக்குச் சொந்தமானது 46. மற்றவர்களுக்குச் சொந்தமானது 1,197. 1965-ஆம் ஆண்டில் 3,469 கை ரிக்ஷாக்கள் இருந்தன. கை ரிக்ஷாக்களைப் படிப்படியாகக் குறைத்து, அவற்றுக்குப் பதிலாகச் சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் வேலை நடந்து வருகிறது.

* 1970—71-ஆம் ஆண்டில் 13 ஆயிரத்து 60 கிராமங்களில், 27 ஆயிரத்து 857 வானொலிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் மொத்தம் 16 ஆயிரத்து 940 வருமானமுள்ள கிராமங்களும், 41 ஆயிரத்து 890 சிறு கிராமங்களும் இருக்கின்றன. எல்லாக் கிராமங்களுக்கும் வானொலிப் பெட்டிகள் கிடைக்கவும், ஆண்டுக்கு 5 ஆயிரம் பெட்டிகள் கொடுக்கவும் 5 இலட்சம் ரூபாய் வீதம் ஒதுக்கப்படுகிறது. மீதிப் பணத்தை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

* விளையாட்டுப் பயிற்சி வகுப்புகளை மாணவர்களுக்குக் கட்டாயமாக்குவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. பள்ளிகளிலேயே சிறந்த 10 விளையாட்டு வீரர்களுக்குத் தலா ரூ. 150 வீதமும், அதேபோல் 10 மாணவிகளுக்கு ரூ. 150 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. கல்லூரிகளிலும் 10 ஆண்கள் 10 பெண்களுக்குத் தலா ரூ. 300 வீதமும், மாணவர்கள் அல்லாத சிறந்த விளையாட்டு வீரர்கள் 10 ஆண்கள், 10 பெண்களுக்குத் தலா ரூ. 300 வீதமும் ஊக்கப்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

* தமிழ்நாட்டில் 1972—73-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் எண்ணிக்கையில் மொத்தம் 78 இடங்களில் கோவில்களின் சார்பில் திருமண மண்டபங்கள் கட்டப்படவிருக்கின்றன.

சென்னை-1, செங்கற்பட்டு-2 தென் ஆர்க்காடு-2, வட ஆர்க்காடு-4, கோவை-18, ஊட்டி-1, சேலம்-4, தர்மபுரி-1, திருச்சி-10 மதுரை-10, இராமநாதபுரம்-2, நெல்லை-5, தஞ்சாவூர்-18.

* சென்னை மாநகராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 150 ஆக உயர்த்த வழி செய்யும் திருத்தமசோதா ஒன்று தமிழ்நாடு மேலவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த வகையில் சென்னை மாநகராட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 120-லிருந்து 150-ஆக உயரும்.

* மாநகராட்சி உறுப்பினர்களில் 12 பேர் கட்டாயமாக அரிசன உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்றிருப்பதை 15 ஆகவும், 6 பெண்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பதை எட்டாகவும் உயர்த்தத் திருத்த மசோதா வகை செய்கிறது.




சோழ நாட்டைச் சோழ மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் அரண்மனையில் நிறையப் புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் செந்தமிழில் பற்பல பாடல்களைப் பாடிப் புகழ் பெற்றவர்கள். அத்தகைய புலவர்களுக்கு ஒரு சோதனைக் காலம் வந்தது. ஒரு நாள் சோழ மன்னன் புலவர்களைப் பார்த்து, ''நீங்கள் அனைவரும் நாளைக் காலைக்குள் நான்கு கோடிப் பாடலகள் பாட வேண்டும்!'' என்று கட்டளையிட்டுச் சென்றான்.

புலவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. பொழுது விடிவதற்குள் நான்கு கோடிப் பாடல்களை எப்படிப் பாடுவது என்று அவர்கள் விழித்தார்கள். எல்லாப் புலவர்களும் ஒன்று கூடித் தீவிரமாகச் சிந்தித்தார்கள். அப்போது ஔவையார் அரண்மனைக்கு வந்தார். புலவர்கள் எல்லாம் ஒன்று கூடிப் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். ''புலவர்களே! ஏன் வருத்தமாகக் காணப்படுகிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள் மன்னர் இட்ட கட்டளையைக் கூறினார்கள். அதைக் கேட்ட ஔவையார் ''நான்கு கோடிப் பாடல்கள்தானே? இதோ இப்போதே பாடுகிறேன்!'' என்றார். புலவர்களுக்கெல்லாம் ஒரே வியப்பாக இருந்தது. அவர்கள் அனைவரும் ஔவையாரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஔவையாரோ பாட ஆரம்பித்து விட்டார்!

மதியாதார் முற்றம்
மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்!

உண்ணீர்உண் ணீரென்றே
ஊட்டாதார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்!

கோடி கொடுத்தும்
குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்!

கோடானு கோடி
கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடாமை கோடி பெறும்!

என்று 'கோடி' எனும் வார்த்தை நான்கு முறை வரும்படி, நான்கு விதமான பொருளுடன் பாடி அந்தப் பாட்டைப் புலவர்களிடம் தந்தார். புலவர்கள் பாட்டைப் பெற்றுக் கொண்டார்கள்.

மறுநாள் காலை புலவர்கள் அரசனை அணுகிப் பாடலைக் கொடுத்தனர். அரசன் அந்தப் பாடலைப் படித்துப் பார்த்தான். புலவர்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தனர். அரசனது முகம் மலர்ந்தது. புலவர்களைப் பார்த்து, ''புலவர் என்றால் நீங்களன்றோ புலவர்கள்!'' என்று பாராட்டினான். புலவர்கள் அனைவரும் மகிழ்வெய்தி அரசனை வணங்கிச் சென்றனர். நமது மானத்தைக் காப்பாற்றிய ஔவையார் எங்கே என்று, அவர் இருக்கும் இடம் தேடிச் சென்று அவரை நன்றியுடன் வணங்கினர் புலவர்கள்.






புலவர் சி. துரைசுவாமி

அறிவில்லா மூர்க்கருடன் உறவு வேண்டாம்.
ஆணவப்பேய் பிடித்தே அழிய வேண்டாம்.
இன்பமென்று பழிவினைகள் செய்ய வேண்டாம்.
ஈனத்தொழில் புரிந்துலகில் வாழ வேண்டாம்.
உண்மைக்கு மாறாக நடக்க வேண்டாம்.
ஊதாரிச் செலவில் பொருள்அழிக்க வேண்டாம்.
எவ்விடத்தும் ஏமாற்றிப் பிழைக்க வேண்டாம்.
ஏழைகளைத் துன்புறுத்தி வாழ வேண்டாம்.
ஐம்புலனை அடக்காமல் இருக்க வேண்டாம்.
ஒற்றுமையைச் சீர்குலைக்க முயல வேண்டாம்.
ஓடும்நதி நிலைகாணா திறங்க வேண்டாம்.
ஔடதத்தின் உயர்வறியா திருக்க வேண்டாம்.
கல்விதனைப் பயிலாமல் இருக்க வேண்டாம்.
காணாமல் பொய்ச்சாட்சி சொல்ல வேண்டாம்.
கிட்டாத பொருள்நத்தி ஏங்க வேண்டாம்.
கீழ்ப்படிந்து நடப்பதற்கு மறுக்க வேண்டாம்.
குடிகெடுக்கத் தீயவருடன் கூட வேண்டாம்.
கூடுகின்ற நல்லவரைப் பிரிய வேண்டாம்.
கெடுங்காலை மதிமயங்கித் திரிய வேண்டாம்.
கேண்மைக்கு ஊனம்வர நடக்க வேண்டாம்.
கைவலியால் பிறஉயிரைக் கொல்ல வேண்டாம்.
கொடுமைசெய்து பிறர்துடிக்க மகிழ வேண்டாம்.
கோடிதனம் படைப்பின்நிலை அழிய வேண்டாம்.
சக்தியுள்ள மனநிலையைப் பழிக்க வேண்டாம்.
சாதிமத பேதங்கொண்டு வாழ வேண்டாம்.
சிற்றினத்தின் புகழ்ந்துரையை மதிக்க வேண்டாம்.
சீர்த்திருத்தி நலம்புரிய அஞ்ச வேண்டாம்.
சுடுசொல்லால் பிறர்வருந்தப் பேச வேண்டாம்.
சூதருடன் கூடிமனம் மகிழ வேண்டாம்.
செய்கின்ற கடமைதனை மறக்க வேண்டாம்.
சேவைசெய்து பொருளீட்ட மலைக்க வேண்டாம்.
சொந்தமென்று பகைவருடன் சேர வேண்டாம்.
சோதனைகள் வருங்காலம் கலங்க வேண்டாம்.
சௌந்தரம் எனப்பாம்பை அணைக்க வேண்டாம்.
ஞயந்துரைக்கும் கயவருடன் பழக வேண்டாம்.
ஞாபகத்தின் சக்தியென்றும் இழக்க வேண்டாம்.
தன்மானம் இழக்கப்புவி வாழ வேண்டாம்.
தாய்தந்தை அறிவுரையைத் தட்ட வேண்டாம்.
தினந்தோறும் குளிக்காமல் உண்ண வேண்டாம்.
தீமொழியை நாவாலே துதிக்க வேண்டாம்.
துறந்தவரை மறந்தேனும் தூற்ற வேண்டாம்.
தூக்கத்தை மிதமிஞ்சிக் கொள்ள வேண்டாம்.
தெளியாமல் புதுவழியில் இறங்க வேண்டாம்.
தேறாமல் நட்பாடத் துணிய வேண்டாம்.
தைரியத்தை ஒருபோதும் இழக்க வேண்டாம்.
தொழிலின்றி வாழ்நாளைப் போக்க வேண்டாம்.
தோய்ந்தபணிக் கிடையில்மனம் மலைக்கவேண்டாம்.
நம்பிக்கைத் துரோகமது செய்ய வேண்டாம்.
நாணயத்தை ஒருபோதும் இழக்க வேண்டாம்.
நிலையாமை சதமெனவே நினைக்க வேண்டாம்.
நீதியில்லாத் தீர்ப்புக்களைக் கூற வேண்டாம்.
நுட்பங்கண்டு வாழாமல் இருக்க வேண்டாம்.
நூதனத்தின் உண்மைகளை மறுக்க வேண்டாம்.
நெஞ்சமதில் துயரமுற்றே அலைய வேண்டாம்.
நேர்மைக்குக் கேடெதுவும் செய்ய வேண்டாம்.
நைந்தவரைத் தாழ்வாகக் கருத வேண்டாம்.
நொடிந்தாலும் பிறர்நோகச் செய்ய வேண்டாம்.
நோயினுக்கு இடங்கொடுத்து மகிழ வேண்டாம்.
பயனில்லா மரம்போன்று வாழ வேண்டாம்.
பால்போன்று கள்ளுண்டு மகிழ வேண்டாம்.
பிச்சையொரு பிழைப்பென்று கருத வேண்டாம்.
பீதிதரும் செயலில்மனம் பொருத வேண்டாம்.
புத்திக்குச் சத்துருவைத் தேட வேண்டாம்.
பூரியர்போல் இருந்துமனம் களிக்க வேண்டாம்.
பெருமைக்கு இழுக்கென்றும் தேட வேண்டாம்.
பேராசை பிடித்தெதிலும் மோத வேண்டாம்.
பைத்தியத்தைப் பரிகாசம் பண்ண வேண்டாம்.
பொறுமையின் பலம்சிறிதாய் நினைக்க வேண்டாம்.
போர்க்களத்தில் உறவுமுறை பார்க்க வேண்டாம்.
மடமைதனைப்பழைமையென்று போற்றவேண்டாம்
மாற்றாரைப் பகைவரென்று தூற்ற வேண்டாம்.
மித்திரர்போல் புறம்பேசிப் பகைக்க வேண்டாம்.
மீண்டும்புவி பிறப்பதைநீ நம்ப வேண்டாம்.
முடியாத வினைதொடங்க முயல வேண்டாம்.
மூடருள் பகைவளர்க்கத் துணிய வேண்டாம்.
மெத்தெனவே ஈட்டுங்கால் இருக்க வேண்டாம்.
மேன்மைதரும் நிலைவருங்கால் வெறுக்க வேண்டாம்
மையல்கொண்டு தீதில்மனம் செலுத்த வேண்டாம்.
மொழிவதிலே இனிமையின்றிப் பேச வேண்டாம்.
மோசம்புரிந் தெப்பொருளும் சேர்க்க வேண்டாம்.
மௌனத்தால் ஏய்த்துலகில் வாழ வேண்டாம்.
வரவுக்கு மேற்செலவு செய்ய வேண்டாம்.
வாழ்வோரைக் கெடுத்துலகில் வாழ வேண்டாம்.
விதியென்று சோம்பலுடன் இருக்க வேண்டாம்.
வீரத்தை மெலிந்தவிடம் காட்ட வேண்டாம்.
வெற்றிக்கு மதம்பிடித்தே அலைய வேண்டாம்.
வேட்கைக்குப் பலிதந்து மகிழ வேண்டாம்.
வையம்போல் வாழாமல் இருக்க வேண்டாம்.
வௌவாலாய் உலகிடையில் வாழ வேண்டாம்.




இந்தியக் கலைப் பொருட்களை யெல்லாம் கண்டுகளித்து இந்தியக் கலையின் மேம்பாட்டினைப் பொது மக்கள் உணர்ந்து மகிழ் வதற்குத் தக்க வாய்ப்பளிப்பதே தேசியக் கலைக் கூடத்தின் நோக்கமாகும். இச் சீரிய நோக்குடன் 1951-ஆம் ஆண்டு விக்டோரியா நினைவு மண்டபத் தில் இந்தக் கலைக்கூடம் அமைக் கப்பட்டது. இக்கலைக் கூடத் திற்குத் தேசியக் கலைக்கூடம் என்ற பெயரைச் சூட்ட வேண்டு மென்று கூறியவர் அன்றையத் தமிழக ஆளுநராக இருந்த பவநகர் மாகாராஜா ஆவார். இதில் இடம் பெற்றுள்ளவை பெரும்பாலும் தென்னிந்திய, மொகலாய, இராஜபுத்திர கலை களைச் சார்ந்த வண்ண ஓவியங் களே ஆகும்.

இக்கலைக்கூடம், 1961-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாளில், சென்னை அரசின் அரும்பொருட்காட்சி யகத்தின் நூற்றாண்டு விழா வினையொட்டி, அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் பண்டித நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சில வெண்கலக் கலைப் பொருட்கள், தந்தத்தாலான கலைப் பொருட் கள், மரப் பொருட்கள், பல் வேறு ஓவியப் பிரிவுகளிலிருந்தும் பெற்ற ஓவியங்கள் ஆகிய வற்றை மட்டுமே ஆரம்பத் தில் கொண்டிருந்த இக் கலைக் கூடம் காலப்போக்கில் கலைப் பொருட்களை விலைக்கு வாங்கிச் சேகரித்து விரிவடைந்தது. இக் கலைக் கூடத்தை விரிவு படுத்து வதற்கு 1951-ல் ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டது.

இங்குக் காணப்படும் பொருட் கள் வரலாற்றுக் கால அடிப் படையில் அடுக்கப்படவில்லை. ஆனாலும், அவற்றின் முக்கியத் துவத்தின் அடிப்படையில் வரிசைப் படுத்தப்பட்டிருக் கின்றன.

முதலாவது அறையில் ரவி வர்மாவின் ஓவியங்களும், அவரைப் பின்பற்றி வரும் ஓவியப் பிரிவின் வண்ண ஓவியங்களும் காட்சியளிக்கின் றன. அடுத்து, முஸ்லிம் மன்னர்களின் படை வரிசை நடந்து செல்லும் எடுப்பான காட்சியை இரண்டு பெரிய ஓவியங்கள் எழிலுறக் காட்டி நிற்கின்றன. அதனை அடுத்து ரவிவர்மாவின் ஓவியத் திறனுக்கு ஓர் ஒப்பற்ற சான்றாகச் சகுந் தலையின் ஓவியத் தோற்றம் உயிர் பெற்று நிற்கிறது.

இரண்டாவது அறையில் கோயில் தேர்களிலிருக்கும் மரப் பொம்மைகளில் தெரிந்தெடுக்கப் பட்டவை வைக்கப்பட்டுள்ளன.

பெரு மண்டபத்தில் காட்சி யளிப்பவை பெரும்பாலும் ஓவி யங்களும், வெண்கலப் பொருட் களுந்தாம். இம்மண்டபத்தின் இடப் பக்கத்தில் தென்னகத் தின் பழங்கால ஓவியங்களும், வலப்புறத்தில் தற்கால ஓவியங் களும் வைக்கப்பட்டுள்ளன. வட இந்தியக் கலைப் பொருட் கள் சாய்வுக் காட்சிப் பெட்டி களில் வைக்கப்பட்டுள்ளன. திருவாலங்காடு நடராசர் வெண் கலச் சிலைகளின் சிறப்புச் சின்னங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக வைக்கப்பட்டுள்ளது.

தற்கால ஓவியங்களும், வெண்கலப் பொருட்களும் மூன்றாவது அறையில் காட்சி யளிக்கின்றன. தொடர்ந்து பெருகிவரும் இன்றையக் கலைப் பொருட்களை வைப்பதற்காகப் பின் பக்க அறையிலிருக்கும் முதல் மாடியில் மேலும் ஒரு கூடம் திறக்கப்பட்டுள்ளது. அவ்வப் போது கிடைக்கும் பொருட்களை வைப்பதற்காக இக்கூடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்கால ஓவியப் பகுதியில் டி.பி. ராய் சௌத்ரி, எல். முனு சாமி, நரசிம்ம மூர்த்தி, கோடூர் இராமமூர்த்தி ஆகியோ ரின் ஓவியங்கள் பெரும்பாலும் இடம் பெற்றுள்ளன.

## விவசாயத் தொழிலாளருக்கு வீட்டுமனை உரிமை

1971-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 19-ஆம் நாளுக்கு முன்பிருந்து வாடகைக்கோ, மனைபெற்றுக் குடியிருப்பு நடத்தும் விவசாயிகளுக்கும்; விவசாயத் தொழிலாளர் களுக்கும் அவர்கள் குடியிருக்கும் மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிடும் வகையில் தமிழக அரசு; முதலாவதாகத் தஞ்சை மாவட்டத்தில் 1972-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15-ஆம் நாள் முதல் அமல்படுத்தி அதனால் 1,57,265 பேரைப் பயனடையச் செய்தது.

இதே திட்டத்தை அரசு 1972-ஆம்ஆண்டு டிசம்பர்த் திங்கள் 10-ஆம் நாள் முதல் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, தருமபுரி, சேலம், இராமநாத புரம் ஆகிய மாவட்டங்களிலும் விரிவுப்படுத்தியுள்ளது. சேலம், இராமநாதபுர மாவட்டங்களில் முறையே ஏர்க்காடு, இராசபாளைய துணை வட்டங்கள் நீங்கலாக இந்தத் திட்டம் அமலாகிறது.

ஏழு மாவட்டங்களிலுமுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள் தவிர மற்ற இடங்களில் இது அமல்படுத்தப்படுவதால் விவசாயிகளுக்கும்,விவசாயத் தொழிலாளர்களுமாக ஏறத்தாழ 24,600 பேருக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாகக் குடியிருப்பு மனைகள் சொந்த மாக்கப் படுகின்றன.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக
எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா
டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம்
பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

கோ-ஆப்டெக்ஸ்

குறளகம், தி. நகர், லஸ், மற்றும்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.



CriterionCO2753TM A

# தித்திக்கும் பொங்கலுக்கு எத்தனைதான் புது மகிழ்ச்சி !

இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

**முதல் பரிசு:**

**ரூ. 1,00,000**

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.



குலுக்கல் நாள்

**10-1-1973**

பரிசு சீட்டு ஒன்றின் விலை
ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி,
மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

